REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுலை 28 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022

வருட. 90 இல. 176 | Thursday 28, July, 2022 | 16 பக்கங்கள் | 40/-

MOBILE
TALK TEXT DATA
BOOSTER 505
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA
ஆகியவற்றை BOOST செய்யுங்கள்
Voice 1777 நிமிடங்கள்
ஏனைய வலையமைப்பிற்கு
1000 நிமிடங்கள் + M2M 777 நிமிடங்கள்
Text 1777 sms
ஏனைய வலையமைப்பிற்கு
1000 SMS + M2M 777 SMS
Data 2GB anytime data
மேலதிக டேட்டாவையும் செயற்படுத்திடலாம்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (வரிகள் உள்ளடக்கப்பட்ட கட்டணங்கள்)
TRC/M/PRO/22/03
SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

## அமெரிக்க தூதுவர் – ஜனாதிபதி சந்திப்பு



அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (27) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த தூதுவர், அவருடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நிலவும் உறவுகளை வலுவான அணுகுமுறையின் மூலம் முன்னெடுத்துச் செல்வது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், புதிய அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தூதுவர் உறுதியளித்தார்.



**தீவிரவாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது:**

## ஜனநாயக போரட்டங்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் தயார்

**பாராளுமன்றத்தில் பிரதமர் தினேஷ் உரை**

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

மக்களின் எதிர்ப்புகளுக்கு செவிமடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, போராட்டம் என்ற பெயரிலான பயங்கரவாத செயற்பாடுகளை ஜனநாயகத்தை ஏற்கும் பாராளுமன்றம் ஒத்துழைப்பு வழங்காதென்று கருதுவதாகவும் குறிப்பிட்டார். 06

## போராட்ட களத்தில் உள்ளோர் போதைக்கு அடிமையானவர்கள்

**பாராளுமன்றத்தில் அமைச்சர் பிரசன்ன குற்றச்சாட்டு**



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

காலி முகத்திடல் போராட்டக்களம் தற்போது போதைப்பொருள் அடிமைகளின் கூடாரமாக மாறியுள்ளதாக ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளர், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அவசரகால நிலை மீதாக விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'கோட்டா கோ ஹோம்' அதாவது ஜனாதிபதி 06

**ஐ.தே.க தேசிய பட்டியல் வெற்றிடத்துக்கு**

## வஜிர நேற்று எம்.பியாக சபையில் சத்தியப்பிரமாணம்



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக வஜிர அபேவர்தன சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று (27) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக 06

**கைவிரல் அடையாளங்கள் விமான நிலையத்துக்கு**

# வன்முறையாளர்கள் இனி வெளிநாடு செல்ல முடியாது

**அரச தொழில் வாய்ப்புக்கும் இடமில்லை என்கிறார் சரத் வீரசேகர**



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ரூபவாஹினி கூட்டுத்தாபனம் உள்ளிட்ட இடங்களில் வன்முறைகளில் ஈடுபட்ட பலரது கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்டு அவை விமான நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அத்தகைய குற்றச்செயல் புரிந்தவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல முடியாது. அதுமட்டுமல்ல அவர்கள் அரச தொழில் உட்பட தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளவும் முடியாதென முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கர எம்.பி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

**அவசரகால நிலை தொடர்பில் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் பயப்பட வேண்டும். இல்லையெனில் நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லாது போய்விடும்**

வன்முறைகளில் ஈடுபடுபவர்களே அவசரகால நிலை தொடர்பில் பயப்பட வேண்டும். சாதாரண ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் அது தொடர்பில் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாதென்றும் சரத் வீரசேக்கர எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகால நிலைக்கான அனுமதியை பெற்றுக் கொள்ளும் பிரேரணை மீதான 06

**அவசரகால நிலை பிரகடனம்**

# 57 மேலதிக வாக்குகளால் நேற்று சபையில் நிறைவேறியது

**ஆதரவாக 120 ;**
**எதிராக 63 வாக்குகள் மட்டுமே**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அவசரகால நிலைமைப் பிரகடனம் தொடர்பான தீர்மானம் நேற்று (27) பாராளுமன்றத்தில் 57 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 120 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நேற்று காலை 10.00 மணிக்கு பாராளுமன்றம் கூடியதுடன், சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட அவசரகால நிலைமைப் பிரகடனம் தொடர்பான தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் ஆரம்பிக்கப்பட்டது. பி.ப 5.20 மணி வரை இதற்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன், விவாதம் முடிவடைந்ததும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவினால் வாக்கெடுப்புக் கோரப்பட்டமைக்கமைய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அவசரகால சட்ட பிரேரணைக்கு ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி. தமிழ் தேசிய கூட்டமைப்பு, கஜேந்திர குமார் 06

**ரூபவாஹினிக்குள் அத்துமீறியமை:**

## தனிஸ் அலியிடம் CID தொடர்ந்தும் விசாரணை!



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் ஜுலை 13ஆம் திகதி பலவந்தமாக நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட தனிஸ் அலி என்பவர், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். டுபாய் செல்ல முயற்சித்த போது, 06



**பொருளாதார நெருக்கடிக்கு காரணமானோர்:**

## ஜனாதிபதி ரணில் வழக்கிலிருந்து விடுவிப்பு

02



## சிங்கப்பூரில் மேலும் 14 நாட்கள் தங்கியிருக்க கோட்டாவுக்கு அனுமதி!

**ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் பத்திரிகை நேற்று செய்தி வெளியீடு**

02

## கொவிட் அறிகுறியுள்ள சிறுவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பாதீர்கள்

**பெற்றோர்களிடம் விசேட வைத்திய நிபுணர் தீபால் கோரிக்கை**



கொவிட் தொற்று அறிகுறிகள் காணப்படும் சிறுவர்களில், எழுமாறாக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படும் வீதம் அதிகமாகவுள்ளது. எனவே அறிகுறிகள் காணப்படும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு சிறுவர் நோய் தொடர்பான விசேட 06

## மஹிந்த, பசில் வெளிநாடு செல்லும் தடை நீடிப்பு

**ஓகஸ்ட் 02 வரை நீடித்தது நீதிமன்றம்**



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. 06



## சபை முதல்வராக சுசில் கொறடாவாக பிரசன்ன

**சபை அமர்வில் நேற்று நியமனம்**

**சபை நிருபர்கள்**

பாராளுமன்ற சபை முதல்வராக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை ஆளும் தரப்பு பிரதம 06





## புஸ்ஸலாவ தேயிலை தொழிற்சாலையில் தீ

**தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசம்**



**பெருந்தொகை தேயிலையும் தீயில் கருகியது**

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

புஸ்ஸலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரயிலன் தோட்டத்தில் அமைந்துள்ள 06

**புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதை:**

## யாழ்.பல்கலைக்கழகத்தில் 18 பேருக்கு வகுப்புத்தடை

**யாழ். விசேட நிருபர்**



யாழ்.பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மாணவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட 06

## ஜனாதிபதியின் இல்லத்துக்கு தீ வைத்தோரை தேடும் CID



ஜனாதிபதியின் பிரத்தியேக வீட்டுக்குள் அத்துமீறி பிரவேசித்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த, தீ வைத்த சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியை பொலிஸ் தலைமையகம் நாடியுள்ளது. கடந்த 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்களின் போது குழப்பம் விளைவித்தவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இலக்கம் 119, ஐந்தாவது ஒழுங்கை, கொழும்பு 03 இல் அமைந்துள்ள பிரத்தியேக வீட்டுக்குள் இரவு நேரத்தில் அத்துமீறி பிரவேசித்து, 06

## நீதிமன்ற வளாகத்தில் "பாஸ் பொட்டா" மீது சூடு

**கம்பஹாவில் நால்வருக்கு காயம்**



கம்பஹா நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்று (27) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நால்வர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கம்பஹா மாவட்ட 06

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஜுலை 28 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆடி 12
ராகுகாலம் : பகல் : 07.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: சித்தஅமிர்த யோகம்
திதி: திரிதியை

# மக்களின் வாக்குகளால் ஆட்சியமைக்க முடியாதவர்களே வேறு வழியில் முயற்சி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியமைக்க முடியாதவர்களே வேறு வழியில் அதனை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றனர் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கு முரணாக ஆட்சியை கைப்பற்றுவது எப்படியென சில தரப்பினர் சிந்திக்கின்றனர். அவ்வாறானவர்களே வன்முறையை நியாயப்படுத்துகின்றனரென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வன்முறைகளை யாரும் நியாயப்படுத்த முடியாதென தெரிவித்த அமைச்சர், அவ்வாறானவர்களே யாழ்ப்பாணம் நூல் நிலையம் தீப்பற்றி எரிந்த போது கை கொட்டிச் சிரித்து மகிழ்ச்சி கொண்டாடியவர்களென்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகால சட்டத்துக்கு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் வன்முறைகளை நியாயப்படுத்த முடியாது. யார் அதனை செய்தாலும் தவறு தவறுதான். தவறுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தையும் மக்கள் கருத்தையும் குழப்பிக் கொள்ளக்கூடாது. சிறந்த முறைமை ஒன்றை ஏற்படுத்தி நாட்டை முன்னோக்கிப் பயணிக்கச் செய்வதே இன்றைய தேவையாக உள்ளது.

ஜனநாயக ரீதியில் ஆட்சியைப் பிடிக்க முடியாதவர்களே ஆர்ப்பாட்டத்தின் மூலம் அதை சாதித்துக் கொள்ளப் பார்க்கின்றனர். இது திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாடு.

போராட்டத்துக்கு நாட்டை ஒப்படைக்க முடியாது. அவ்வாறு ஒப்படைத்தால் தொடர்ந்தும் அடுத்தடுத்து வரும் போராட்டக்காரர்களும் அதனையே மேற்கொள்வர்.

நாட்டு மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவென காலிமுகத்திடலில் திரண்ட ஒரு இலட்சம் மக்களிடம் நாட்டை ஒப்படைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றாரா?

பிரச்சினைகள் இதுவானாலும் அரசியலமைப்பின் மூலமாகவே அவை தீர்க்கப்பட வேண்டும். அதனை நிராகரித்து எதனையும் செய்ய முடியாது. அரசியலமைப்பை பாதுகாப்போம் என்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டவர்களே இன்று அதற்கு எதிராக செயற்படுகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆரம்பத்தில் செயல்பட்ட விதத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் கடந்த 9ஆம் திகதி முதல் அது வன்முறையாக மாறியதை ஏற்றுக் கொள்ள முடியாது.

12 மணி நேரத்தில் வீடுகள் தீவைக்கப்பட்டு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதுவா மக்கள் விருப்பம்? மக்களா அதனை செய்தார்கள்? என கேட்க விரும்புகின்றேன்.

காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு சென்றவர்களுக்கு சிகிச்சை வழங்குவதைத் தடுத்தனர். அங்கும் அவர்களைத் தாக்க முயன்றனர். அதைப் பற்றி அங்கு யாரும் பேசவில்லை. காயமடைந்தவர்களை அழைத்துச் செல்வதற்கு வந்த அம்பியூலன்சையும் தடுத்தனர். அது தொடர்பில் எவரும் பேசவில்லை.

இப்போது ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தியதை வன்முறையென கூறுகின்றனர். ஒன்றை சரி என்றும் இன்னொன்றை தவறென்றும் எவ்வாறு கூற முடியும்? தவறு என்றால் எல்லாம் தவறுதான் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தலை விரைவாக நடத்த முயற்சிக்கவும்

## பணம் இல்லையென்பதை ஏற்க முடியாது



கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் ஆகிய இரண்டிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணை தோல்வியடைந்துள்ளதால், விரைவில் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையை பெற வேண்டும் என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயகத்துக்காக தேர்தல் நடத்தப்பட்டால், செலவு செய்வதற்கு நிறுவனங்கள் இருப்பதாக தெரிவித்துள்ள அவர் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்றவை அதற்கு உதாரணம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தலை நடத்த 1200 கோடி ரூபாய்களே செலவாகும். இத்தொகையை 600 கோடிகளாக சுருக்கி தேர்தலை நடத்தவும் முடியும் என தெரிவித்துள்ள அவர், எந்தவொரு கொடுப்பனவையும் பெறாமல் தேர்தல் கடமையை செய்யத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

# தேசிய எரிபொருள் அட்டை; இதுவரை 04 மில். பேர் பதிவு

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு



தேசிய எரிபொருள் விநியோக அட்டையைப் பெற நேற்று முன்தினம் இரவு 9 மணி வரை 4 மில்லியன் பேர் பதிவு செய்து கொண்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

புதிய முறையானது நாடு முழுவதும் உள்ள 299 (சிபெட்கோ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்களிலும் 34 லங்கா ஐஓசி (எல்ஐஓசி) எரிபொருள் நிரப்பும் 06

# புதிய பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கு ஆளும், எதிர்க்கட்சி அமைப்பாளர்கள் சபையில் வாழ்த்து

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் 27ஆவது பிரதமராக புதிதாக பதவியேற்றுக்கொண்டுள்ள தினேஷ் குணவர்தனவுக்கு நேற்று சபையில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. வழமையான நடவடிக்கைகளையடுத்து புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த எழுந்து வாழ்த்து தெரிவித்தார்.

புதிய பிரதமர் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் தினேஷ் குணவர்தன, 1970 காலப்பகுதியிலிருந்து அரசியலுக்கு வந்த பயணப் பாதையின் ஊடாக இன்று 06

# மூன்று சிறுவர்கள் உட்பட மேலும் 06 இலங்கையர் தமிழகத்தில் தஞ்சம்

இதுவரை 125 பேர் சென்றடைவு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இலங்கையிலிருந்து மேலும் 06 பேர் அகதிகளாக தனுஷ்கோடி சென்றுள்ளனர். 03 சிறார்கள் உட்பட 06 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதை தொடர்ந்து அங்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்தது. இதனால் நடுத்தர மற்றும் ஏழை குடும்பத்தினர் மிகவும் பாதிக்கப்பட்டனர். இந்த விலைவாசி உயர்வால் இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகினர்.

அவர்களில் பலர் வாழ வழியின்றி இலங்கையிலிருந்து வெளியேறி அகதிகளாக தமிழகத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர். கடந்த மார்ச் மாதத்திலிருந்து பலர் குடும்பம் குடும்பமாக இலங்கையிலிருந்து கடல் வழியாக படகுகளில் 06

# சீன உதவிகள் தொடர்ந்தும் இலங்கைக்கு கிடைக்கும்



## கொழும்பு சீன தூதரகம் தெரிவிப்பு

சீனாவிடம் இருந்து மனிதாபிமான உதவிகளின் அடிப்படையில் மேலும் 500 மெட்ரிக் தொன் அரிசியை கொண்ட இரு கப்பல் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அனுப்பப்பட்ட இரண்டு 500 மெட்ரிக் தொன் அரிசி 06

# மணல் குவியலுக்குள் எரிபொருள் பதுக்கல்

## பேருவளை அம்பேபிட்டியில் சம்பவம்



பேருவளை, அம்பேபிட்டிய வீடொன்றில் மணல் குவியலில் அதிக விலைக்கு விற்பதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த டீசல் பெரல்களை பேருவளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

பேருவளை அம்பேபிட்டிய சாமரஉயன பிரதேசத்தில் வீடொன்றில் மணல் குவியலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த டீசல் பெரல்கள் கைப்பற்றப்பட்டதோடு வீட்டின் உரிமையாளரும் நேற்று 27ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக பேருவளை பொலிசார் தெரிவித்தனர்.

பொலிசாருக்கு கிடைத்த 06

பொருளாதார நெருக்கடிக்கு காரணமானோர்:

# ஜனாதிபதி ரணில் வழக்கிலிருந்து விடுவிப்பு

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு அரசாங்கத்திற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பெயரை அதிலிருந்து நீக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழுவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக மனுதாரர்கள் ஆட்சேபனை தெரிவிக்காததால் அவரை விடுதலை செய்யுமாறு மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தக ஜயசுந்தர நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இந்த கோரிக்கையை ஏற்ற நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்னவினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டது.

# சிங்கப்பூரில் மேலும் 14 நாட்கள் தங்கியிருக்க கோட்டாவுக்கு அனுமதி!

## ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் பத்திரிகை நேற்று செய்தி வெளியீடு



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மேலும் 14 நாட்கள் தங்கியிருக்க சிங்கப்பூர் அனுமதி வழங்கியுள்ளதாக ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயமாக சிங்கப்பூர் சென்றபோது வழங்கப்பட்ட குறுகிய கால பயண அனுமதி (short term visit pass) 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

பாரிய எதிர்ப்பு போராட்டங்களையடுத்து கடந்த 13 ஆம் திகதி இலங்கையை விட்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறி, கடந்த 14 ஆம் திகதி மாலைதீவு வழியாக சிங்கப்பூர் சென்றடைந்தார்.

அவர் சிங்கப்பூர் சென்றபோதும், இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தார். அதன் பின்னரே மின்னஞ்சல் மூலம் தமது பதவி விலகல் கடிதத்தை அனுப்பினார். அதன் பின்னர், பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க பதில் 06

# தமிழர்களின் போராட்டம் நியாயமானதென பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்கின்றனர்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதமாகவே கருதப்பட்டது. எனினும் தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்பதை இன்று பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டுள்ளனரென செல்வம் அடைக்கலநாதன் எம்.பி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற அவசரகால நிலைக்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்திலேயே அவசரகால சட்டம் இயற்றப்பட்டது. இனப்படுகொலையும் ஆரம்பிக்கப்பட்டது. இனப்படுகொலை 39 ஆவது வருடத்தை கடந்துள்ளது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் இனப்படுகொலையின் 39ஆவது வருடத்தை ஜூலை படுகொலை கரிநாளாக தமிழ் மக்கள் நினைவு கூருகின்றனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகர் தங்கத்துரை, குட்டிமணி அவர்களோடு ஜகன், 06

# தற்போதைய அரசாங்கத்தில் நாம் பொறுப்புகள் ஏற்கப் போவதில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவோ பொறுப்புக்களை ஏற்கவோ தயாரில்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும் பாராளுமன்ற குழு முறைமை ஊடாக நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் வகையில் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சி தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் முட்டாள்தனமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். 06

# ஒலுவில் மீன்பிடி துறைமுகம் இன்று வைபவ ரீதியாக திறப்பு

## அமைச்சர் டக்ளஸ் பிரதம அதிதி

**ஒலுவில் விசேட நிருபர்**

ஒலுவில் மீன்பிடி துறைமுகம் இன்று வியாழக்கிழமை (28) வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளதாக. கடற்றொழில் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். சிறிரஞ்சன் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 245.76 | 257.09 |
| கனடியன் டொலர் | 276.47 | 288.75 |
| யூரோ | 364.85 | 379.31 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 255.88 | 266.36 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.26 | 445.24 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 358.53 | 368.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.90 | கட்டார் ரியால் | 98.40 |
| குவைத் டினார் | 1,177.04 | சவூதி ரியால் | 96.37 |
| ஓமான் ரியால் | 939.90 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.51 |

மினுவாங்கொடை முஸ்லிம்

# விவாக பதிவாளராக ரிஸ்வான் நியமனம்



வடக்கு அலுத்குருகோரளை மினுவாங்கொடை பிராந்திய முஸ்லிம் விவாகப் பதிவாளராக கல்லொழுவையை சேர்ந்த அஷேக் மௌலவி முஹம்மது ரஃபீக் முஹம்மது ரிஸ்வான் ( ரஹ்மானி) நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டு காலமாக வெற்றிடமாக இருந்த இப்பதவிக்கு மௌலவி ரிஸ்வான் இம்மாதம் 20ஆம் தேதி நியமிக்கப்பட்டார். 49 வயதான ரிஸ்வான் மௌலவி கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர் ஆவார். மார்க்க கல்வியை அரபு கலா பீடத்தில் கற்றுத்தேர்ந்தவர். இவர் கம்பஹா மாவட்ட ஜம்மியத்துல உலமாவின் உப தலைவராகவும் கொழும்பு 2 ரில்வானியா அரபுக் கல்லூரி போதன ஆசிரியராகவும் பணிபுரிகிறார்.

கல்லொழுவை ஜும்மா பள்ளிவாசலின் மத்திச்சமாக இருந்த மர்ஹும் நூஹ் லெப்பை மஹ்தூம் மத்திசத்தின் பேரனான மௌலவி ரிஸ்வான் நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவராவது நியமனத்தின் மூலம் கல்லொழுவை மினுவாங்கொடை கோபிவத்தை, கோவின்ன ஆகிய ஊர்களின் வாழும் முஸ்லிம் ஜமாத்தார்களின் நீண்ட காலமாக தடைபட்டிருந்த முஸ்லிம் விவாகப் பதிவு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

# காட்டு யானை தாக்கி ஒருவர் பலி

## ஒருவர் காயம் தேன் எடுத்தபோது சம்பவம்

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

மிஹிந்தலை மகாகனந்தராவ வனப்பகுதியில் தேன் எடுப்பதற்குச் சென்ற இருவரை காட்டு யானை தாக்கியுள்ளது.இதில்,ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந்தார்.

பலத்த காயமடைந்த மற்றவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் பலத்த காயத்திற்குள்ளான நபர், குக்குலாவ சீப்பிக்குளம் பகுதியைச் சேர்ந்தவராவர். மற்றைய நபரும் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர்.இச்சம்பவம் (24) இடம்பெற்றது.

மகாகனந்தராவ குறுந்தன்குளம் குளத்திற்கு அருகில் தேன் எடுப்பதற்குச்சென்ற போதே இவ்விருவரையும் காட்டு யானை தாக்கியுள்ளது.உயிரிழந்தவரை அவ்விடத்திலே கிடத்திவிட்டு,

காயத்திற்குள்ளான நபர் பாரிய சிரமத்திற்கு மத்தியில் காட்டிலிருந்து வெளியாகி பிரதேச வாசிகளிடம் சம்பவத்தை தெரிவித்துள்ளார். உடனடியாக செயல்பட்ட பிரதேசவாசிகள் 1990 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு காயமடைந்த நபரை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

உயிரிழந்த நபரை தேடி காட்டுக்குள் நுழைந்த தேடியும் அவரைக் கண்டெடுக்க முடியாதிருந்தது. இந்நிலையில் கஹட்டகஸ்திகிலிய பொலிஸாரை தொடர்பு கொண்டு, வனவிலங்கு அதிகாரிகளின் உதவியுடன் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டெடுத்தாக பொலிஸார் தெரிவித்தனர்.



கல்நேவ வைத்தியசாலைக்கு சொந்தமான பல விடுதிக்கட்டடங்கள் பராமரிப்பின்மையால் சிதைவடைந்துள்ளதை படத்தில் காணலாம். (படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன், கல்நேவ தினகரன் விஷேட நிருபர்கள்)

# சுகமடைய பிரார்த்திக்குமாறு வேண்டுகோள்

(பேருவளை தினகரன் விஷேட நிருபர்)

மத்திய கிழக்கில் வாழும் பிரபல ஆன்மிக பெரியார்களில் ஒருவரும் பன்னுலாசிரியருமான அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அபூபக்கர் அல் அதனி மசூர் மௌலானா, சுகயீனம் காரணமாக ஜோர்தானிலுள்ள அம்மான் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இவர், பூரண சுகமடைய அனைவரும் துஆப்பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு பல தடவைகள் இவர்,விஜயம் செய்து தஃவா பணி புரிந்துள்ளதுடன், அரபுக் கல்லூரிகளுக்கு விஜயம் செய்து போதனைகள் புரிந்துமுள்ளார்.

அகில இலங்கை ரீதியாகவுள்ள சுன்னத் வல் ஜமாஅத் அமைப்புகள் மற்றும் தரீக்காக்களின் அமைப்புகள் ஆகியன இவரின் சுகத்திற்காக துஆ பிரார்த்தனை புரியுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

# இக்கட்டான நிலைமைகளிலும் அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்

(திறப்பனை தினகரன் நிருபர்)

நாட்டில் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டாலும் அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளில் அர்ப்பணிப்புடன் செயற்படுவது இன்றியமையாதது என, அநுராதபுரம் மாவட்ட செயலாளர் திரு. ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் (26) கலந்து கொண்டு உரையாற்றும்போதே மாவட்ட செயலாளர் இதனை தெரிவித்தார். இங்கு விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த செயலாளர், விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு தன்னால் இயன்ற உதவிகள் செய்யப்படும். இன்றைய விவசாயக் குழு எரிபொருள் பிரச்சினையில் கவனம் செலுத்தி வருகிறது.

தற்போது விவசாய சேவை மத்திய நிலையங்கள்,மாவட்ட விவசாய பிரிவு ஆகியன அறுவடை செய்யும் விவசாய நிலங்களுக்கு தேவையான எரிபொருள் குறித்து ஆய்வு செய்து வருகின்றன. தேவையை கருத்தில் கொண்டு இவர்களுக்கு எரிபொருள் வழங்கப்படும்.எதிர்கால விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமான தண்ணீர் தற்போது குளங்களில் உள்ளது. எதிர்வரும் பருவ மழையின்போது மஹாவிலச்சிய, மஹதிவுல்வெவ, மஹபுலங்குளம், மஹமாங்கடவல, அலையாபத்துவ, ரம்பேவெவ, கல்லஞ்சிய மற்றும் நொச்சியாகம ஆகிய ஏரிகள் மற்றும் குளங்கள் நிரம்பி வழியும் நிலை, காணப்படுவதாக மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.டி. திரு.மதிவக்க இதன்போது தெரிவித்தார்.

இதனால், இந்த தொட்டிகள் உடையும் வாய்ப்பு உள்ளது. எரிபொருள் பிரச்சினையால், இதை அடிக்கடி கண்காணிக்கும் பிரச்சினையும் உருவாகி வருகிறது. மேலும், எதிர்காலத்தில் நெல் உற்பத்திக்கு தேவையான தண்ணீரை பெறும் நோக்கில், பல்வேறு பாசன கால்வாய்கள், குளங்கள் சீரமைக்கப்பட்டு வருவதால், இப்பணிகளும் தற்காலிகமாக ஓரளவு தடைப்பட்டுள்ளன. எரிபொருள் பற்றாக்குறையே இதற்கு காரணம்.

( தற்போது நெல் கொள்வனவும் இடம் பெறுவதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எதிர்காலத்தில் ஆகஸ்ட் 10 முதல் புதிய வேலைத் திட்டத்தின் கீழ் சிறுபோக நெல் கொள்முதல் செய்யப்படும்.கடந்த சீசனில் கொள்வனவு செய்யப்பட்ட நெல், அரிசியாக மாற்றப்பட்டு தற்போது சந்தைக்கு விடப்படுகிறது. நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் மாவட்டத்திற்கு தேவையான நெல், இருப்பிலிருக்க வேண்டும் எனவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார். .

இவ்வருட நெல் அறுவடையில், சுமார் 150 ரூபாவிற்கு நெல்லை கொள்வனவு செய்ய வேண்டுமென விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இங்கு கருத்து வெளியிட்டனர்.

# அழகிய தமிழ் மகள் விருது

(தெஹிவளை கல்கிஸை விஷேட நிருபர்)

இலங்கை கலைஞர் திருமதி மீனாவுக்கு அழகிய தமிழ் மகள் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.மல்லிகா ஜேசப்,சரினா முஸ்தபா, நாஹபூசனி, நூறுல் ஜயின், நஜூமுல் ஹூசைன், நசிரா ரமீஸ் மற்றும் பரதநாட்டிய கலைஞர்கள், அழகுக்கலை கலைஞர்கள், சங்கீத ஆசிரியைகள், ஊடகவியலாளர்கள் இணைந்து இந்த கௌரவத்தை வழங்கினர்.இந்நிகழ்வு ஞயிற்றுக்கிழமை (24) பம்பலப்பிட்டியிலுள்ள மல்லிஹா ஜோசப் சமயல் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

சிறந்த சமூக செயற்பாட்டாளரான மீனா உதயகுமார்,ஆசிய நாடுகளின் பசுமைப் புரட்சி செயலாளராக ஜெர்மனியில் கடமையாற்றுகின்றார். இதில்,இருபது நாடுகள் அங்கம் வகிக்கின்றன.



பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் நோக்கில், அரச உத்தியோகத்தர்கள் வீட்டுத்தோட்டச் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்கீழ்,அநுராதபுரம் விவசாய திணைக்களத்தில் கடமையாற்றும் திரு. வசந்த களுஆராச்சி என்ற அரச உத்தியோகத்தர் வெற்றிகரமான இலட்சியத் தோட்டத்தை நடத்திவருகிறார். நாளாந்த தேவகைளுக்காக அவரது தோட்டத்தில் செய்கைபண்ணப்பட்ட பயிர்கள் பயன்தரும் நிலைக்கு வந்துள்ளன. அறுவடைக்குத் தயாராகவுள்ள செடிகளை படத்தில் காணலாம். (திறப்பனை தினகரன் நிருபர்)





ரூ.10,000 பணப்பரிசை வென்ற நாளாந்த வெற்றியாளர்கள் (03.05.22 – 09.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் | வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| H. தினேஷா டில்மினி, | | A.A.M. N. விக்கிரமசிங்க | தொரவாக்கா |
| B. ஞானவதி | பொறவகம | L.W. விமலாவதி | பெலியத்த |
| N.I. ஒவைஸ் | கொழும்பு 08 | R.M. பிரியங்கா ராஜபக்ஷா | கல்கமுவ |
| R.P.N. தினிதி அங்காரா | அடிப்பல | R.P.D. குமார | வெல்லவாய |

22K தங்க நாணயத்தை வென்ற வாராந்த வெற்றியாளர் (03.05.22 – 09.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|
| H.T. சந்தருவன் ஜயரத்ன | தென் கொரியா |

ரூ.10,000 பணப்பரிசை வென்ற நாளாந்த வெற்றியாளர்கள் (10.05.22 – 16.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் | வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| M.K. நௌஷாத் கான் | சாய்ந்தமருது-01 | R.P. ஜார்ஜ் இந்திகா | தென் கொரியா |
| V.K. சாந்தி | கொட்டபொல | L.G. தினேஷ் குமார | தென் கொரியா |
| D.L. சமிந்த பிரேமஜீவா | தென் கொரியா | | |

22K தங்க நாணயத்தை வென்ற வாராந்த வெற்றியாளர் (10.05.22 – 16.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|
| M.L. ரியால் | ஓட்டமாவடி 02 |

ரூ.10,000 பணப்பரிசை வென்ற நாளாந்த வெற்றியாளர்கள் (17.05.22 – 23.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் | வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| D.H.S. நாலக குமார | தென் கொரியா | A.L. அர்ஷாத் | வெல்லம்பிட்டிய |
| B.W.G வசந்த குமாரி | விஜயபாகு கந்த | M.R.R. பேகம் | வரக்காமுர |
| N.C.A ரந்திகா ஜெயரத்ன | வெரல்லகம | M.M.T.M. ஷாஹிதா அப்தாப் | விஹினிவெஹர |

22K தங்க நாணயத்தை வென்ற வாராந்த வெற்றியாளர் (17.05.22 – 23.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|
| K. உதயகுமார் | களுவாஞ்சிகுடி |

ரூ.10,000 பணப்பரிசை வென்ற நாளாந்த வெற்றியாளர்கள் (24.05.22 – 30.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் | வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| M.D. அமித் பிரசன்ன | மாத்தறை | J.M. பிரியங்கனி | கம்பளை |
| H.C. ரஞ்சனி ஸ்வர்ணலதா | பொலன்னறுவை | S. ஈ.பிகா நாசுர் | உடுவெல |
| L. சந்தன ஜெயபாகு | பொகுனுவிட்ட | B. நாலிகா | கலபுலுலந்த |
| D.S. திஸ்ஸ குமாரகே | பாணந்துறை | | |

22K தங்க நாணயத்தை வென்ற வாராந்த வெற்றியாளர் (24.05.22 – 30.05.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|
| R. சந்திவேல் | வல்வெட்டித்துறை |

ரூ.10,000 பணப்பரிசை வென்ற நாளாந்த வெற்றியாளர்கள் (31.05.22 – 06.06.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் | வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| G. G. விமலாவதி | எலமுல்ல | T. செல்வகுமார் | மட்டக்களப்பு |
| N. தினேஷ் குமார | ஹபரண | S. மரியாள் | காரடியனாறு |
| P.R. அனுலாவதி மெனிகே | ஹிங்குல | A. வசந்திராணி | லபுகெல்லே |
| A. சசின் மதுஷங்க | தென் கொரியா | | |

22K தங்க நாணயத்தை வென்ற வாராந்த வெற்றியாளர் (31.05.22 – 06.06.22)

| வெற்றியாளரின் பெயர் | இடம் |
|---|---|
| B.A. இஷங்க சம்பத் | தென் கொரியா |

பின்வரும் பண உள்வரவுகள் நாளாந்த, வாராந்த, மாதாந்த சீட்டிழுப்பு மற்றும் ஆண்டின் இறுதியில் நடைபெறும் மாபெரும் சீட்டிழுப்பிலும் வெற்றி பெற தகுதியுடையவை. • மக்கள் வங்கி கணக்குகளுக்கு அனுப்பப்படும் பண உள்வரவுகள் • மக்கள் வங்கிக்கூடாக ஏனைய வங்கி கணக்குகளுக்கு அனுப்பப்படும் உள்வரவுகள் • மக்கள் வங்கி கிளைகளில் கருமப்பீடங்களின் ஊடாக பெறப்படும் உள்வரவுகள்

* நிபந்தனைகளுக்குட்பட்டது

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 28

## குறள் தரும் சிந்தனை



முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்

ஒரு செயலைச் செய்யும் போது அது முடிவதற்கான முயற்சி, இடையில் வரும் தடை, முடியும் போது அடையும் பெரும்பயன் ஆகியவற்றை எண்ணிப் பார்த்துச் செய்க.

# கொவிட் தடுப்பூசி பெறுவதில் கூடுதல் கவனம் அவசியம்

கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியானது, இத்தொற்று தொடர்பில் நிலவி வந்த பீதியையும் அச்சத்தையும் பெரிதும் வீழச்சியடையச் செய்துள்ளது. குறிப்பாக உலகிற்கே பாரிய சவாலாக விளங்கி வந்த கொவிட் 19 தொற்று உயிராபத்து மிக்க அச்சுறுத்தல் கொண்டது என்ற நிலையை மாற்றியமைத்த பெருமை இத்தடுப்பூசிக்கு உள்ளது.

இத்தடுப்பூசியானது கொவிட் 19 தொற்று தொடர்பில் மக்கள் மத்தியில் நிலவி வந்த அச்சத்தையும் பீதியையும் நீக்கி மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக இத்தடுப்பூசி புழக்கத்திற்கு வந்ததன் பயனாக இத்தொற்றின் தாக்கமும் பாதிப்புகளும் பலவீனப்படுத்தப்பட்டு உள்ளன. இது உலகளாவிய ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உண்மையாகும்.

இதன் பயனாக இலங்கை உட்பட உலகம் முழுவதும் பெருந்தொகையானோர் இத்தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுக் கொண்டுள்ளனர். என்றாலும் இத்தடுப்பூசி தொடர்பில் தவறானதும் பிழையானதுமான விமர்சனங்களும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. அவை இத்தடுப்பூசி தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கையில் பலவீனங்களை ஏற்படுத்தவும் வழிவகை செய்துள்ளன. இதன் காரணத்தினால் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் மத்தியில் அச்ச நிலையும் நிலவுகின்றது. இதன் விளைவாக இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுபவர்களும் சமூகத்தில் உள்ளனர்.

அந்த வகையில் இலங்கையை எடுத்து நோக்கும் போது, இந்நாட்டில் இத்தடுப்பூசியின் முதலாவது டோஸை ஒரு கோடி 71 இலட்சத்து 4952 பேர் பெற்றுள்ள போதிலும், இரண்டாவது டோஸை ஒரு கோடி 45 இலட்சத்து 53 ஆயிரத்து 903 பேர்தான் பெற்றுள்ளனர். இதன்படி முதலாவது டோஸைப் பெற்றுள்ளவர்களில் 26 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இரண்டாவது டோஸைப் பெற்றுக் கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்.

அதேநேரம் இத்தடுப்பூசியின் மூன்றாவது டோஸாக விளங்கும் பூஸ்டர் தடுப்பூசியை 80 இலட்சத்து 3782 பேர்தான் பெற்றுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வழங்கியுள்ள இத்தரவுகளின்படி, இத்தடுப்பூசியின் டோஸ்களை பெற்றுள்ளவர்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதற்கு இத்தடுப்பூசி குறித்த தவறான பிரசாரங்கள்தான் காரணம் என்பதில் ஐயமில்லை.

அதேநேரம் இத்தடுப்பூசியின் ஒரு டோஸையும் கூட பெற்றிராதவர்களும் சமூகத்தில் குறிப்பிடத்தக்களவில் இருக்கவே செய்கின்றனர். ஆனால் இத்தடுப்பூசியின் முதலாவது பூஸ்டர் டோஸாக விளங்கும் மூன்றாவது டோஸை பெற்றுக் கொண்டுள்ளவர்கள் இத்தொற்றுக்கு உள்ளானால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதும் அதிக தாக்கங்களுக்கு உள்ளாவதும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நிலைக்கு உள்ளாவதும் மிகவும் குறைவு. இது உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் 19 தொற்றின் பிறழ்வுகள் உலகின் ஏனைய சில நாடுகளைப் போன்று இலங்கையிலும் மீண்டும் தலைதூக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகக் கடந்த சில தினங்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

தற்போதைய சூழலில் நாட்டில் இத்தொற்று மீண்டும் தீவிரமடையுமாயின் இத்தடுப்பூசியின் ஒரு டோஸையும் பெற்றுக் கொள்ளாதிருப்பவர்களும் ஒரு டோஸை மாத்திரம் பெற்று இருப்பவர்களும் அதிக தாக்கங்களுக்கும் பாதிக்களுக்கும் முகம் கொடுக்க முடியும் என்பதுதான் மருத்துவ நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

அதனால்தான் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் சிரேஷ்ட தொற்று நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் சமித கினிகே, 'கொவிட் 19 தொற்றின் இரண்டாம், மூன்றாம் டோஸ்களை பெற்றுக்கொள்ள தகுதி பெற்றுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட சகலரும் இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் 12 மற்றும் 19 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும்' என்றும் கேட்டுள்ளார்.

ஆகவே கொவிட் 19 தொற்று தொடர்பில் தற்போது நாட்டிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் நிலவும் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இத்தடுப்பூசி தொடர்பில் பரப்பப்படும் தவறான கருத்துகளும் விமர்சனங்களும் இத்தொற்று பரவலடையத் துணைபுரியவே வழிவகுக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் எவை?

இலங்கையின் அரசியல் என்பது சர்வதேசமே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு இன்று மாறியுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய அரசியல் சாசனத்துக்கான சீர்திருத்தத்திற்கு கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன் போது 19 ஆவது அரசியல் சட்ட திருத்தப் பிரேரணையின் முக்கிய அம்சங்களாக பின்வரும் விடயங்கள் காணப்பட்டன.









நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை அகற்றப்பட்டு ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றம் சேர்ந்து நிர்வகிக்கும் ஆட்சி முறை, அனைத்துத் தேர்தலிலும் விகிதாசார முறை நீக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியிலும் யார் அதிக வாக்குகளைப் பெறுகிறாரோ அவர் வெற்றி பெற்றவர் என்ற முறை அமுலாகும். ஒருவர் அதிகபட்சமாக இரண்டு முறை மாத்திரமே ஜனாதிபதியாக இருக்க முடியும். ஜனாதிபதியின் ஒரு ஆட்சிக்காலம் என்பது ஆறு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்படும், பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஓராண்டு கடந்துவிட்ட பின்னர் அதனைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்காது. ஒரு பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட பின்னர்தான் அதனைக் கலைக்கும் உரிமை மறுபடியும் ஜனாதிபதிக்கு வரும்.

ஒருவர் ஜனாதிபதியாக இருக்கும் போது அவர் உத்தியோபூர்வமாக செய்யும் காரியங்களை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கு இருந்து வருகின்ற சட்டத் தடை அகற்றப்படும். இலங்கையில் அதிகபட்சமாக 30 பேர் அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சராகவும், அதிகபட்சமாக 40 பேர் துணை அமைச்சர்களாகவும் என மொத்தம் 70 பேர் அமைச்சர்களாக இருக்க முடியும் என்ற வரம்புள்ளது.

17ஆம் அரசியல் சட்டத் திருத்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். நாட்டின் ஆணைக்குழுக்கள் ஜனாதிபதியால் அல்லாமல் சுயாதீனமான முறையில் மீண்டும் தெரிவு செய்யப்பட வேண்டும். அமைச்சரவையின் தலைவராகவும், முப்படைகளின் தலைமைத் தளபதியாகவும் தொடர்ந்தும் ஜனாதிபதியே விளங்குவார். பிரதமரையும், அமைச்சர்களையும் நியமிக்கும் அதிகாரம் தொடர்ந்து ஜனாதிபதிக்கு இருக்கும் என்றவாறே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டிருந்தது.

கடந்த பல ஜனாதிபதித் தேர்தல்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு என்பது மிக முக்கியமான வாக்குறுதியாக முன்வைக்கப்பட்டாலும் அது நிறைவேறவில்லை. நல்லாட்சி அரசில் அதிகாரத்தை குறைத்துக் கொள்ள இடமளிக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களைக் குறைத்து மீண்டும் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான ஆலோசனைகள் கடந்த வாரங்களில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்டன. 44 வருடங்களாக இந்த நாட்டில் கடும் விமர்சனங்களையும், எதிர்ப்புகளையும் சம்பாதித்துக் கொண்டிருக்கின்ற நிறைவேற்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மாற்றி அமைப்பதற்கு தற்போது ஒரு சிறந்த அரசியல் ரீதியான சந்தர்ப்பம் உள்ளது. எனினும் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து சகலரும் இந்த இலக்கை அடைவார்களாஎன்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

நாட்டில் பாரிய அரசியல் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதி செயலகம் கைப்பற்றப்பட்டது. பிரதமரின் தனிப்பட்ட இல்லம் தீக்கிரையானது. தற்போது நாட்டில் 20 ஆவது சீர்திருத்தத்தினூடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைதான் இருக்கின்றது. கடந்த கால சம்பவங்களை வைத்துப் பார்த்தோமேயானால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினால் அதிக பாதகங்கள் ஏற்பட்டுள்ளன.

தற்போது புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். அரசியல் மாற்றத்தை எதிர்பார்க்கின்ற மக்களுக்கு 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மீண்டும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அதற்காக முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே இதன் அடுத்த கட்டம் எவ்வாறு அமையப் போகின்றது என்பதுதான் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.



**ஊடக விளங்கறிவு மையம்(Cmil) நடத்திய Reform watch நிகழ்ச்சியின் Expert talk இல் முஸ்லிம் கவுன்சில் ஒ·ப் சிறிலங்காவின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர் முஹம்மத் ஹிசாம் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு**



**அப்ரா அன்ஸார்...**

# யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடம் நடத்தும் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு நாளை 29ஆம் திகதியும் மறுநாள் 30 ஆம் திகதியும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. 'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

இது தொடர்பாக, 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாட்டின் அமைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை அது ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டு கால வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாடு 2022 (Jaffna University International Research Conference 2022 (JUICE 2022)) இன் ஒரு துணை மாநாடாகவும், 'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்ற கருப்பொருளிலே, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடம், 'மானுடம் ஆராய்ச்சி மாநாடு 2022' இனை இம்மாதம் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.



நாடு ஒரு பெருந்தொற்றுநோயின் பிடியிலும், நாட்டினுடைய கல்வி உட்பட பல்வேறு துறைகள் பெருந்தொற்று ஏற்படுத்திய நெருக்கடிகளிலும் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலிலே, இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் மூன்றாம் நிலைக்கல்வி ஆரம்பிக்கப்பட்டதன் நூறு ஆண்டுகளின் (1921 – 2021) பூர்த்தி இடம்பெற்றிருக்கிறது.

புரட்சிகரமான திறவுகள் மற்றும் நெருக்கடி மிக்க சவால்களை உள்ளடக்கிய இந்த நூற்றாண்டு கால வரலாற்றை மீட்டுப் பார்த்து, அதனை விசாரணை செய்யும் செயன்முறைகளின் ஒரு பகுதியாகவும், மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை இந்த வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும் இந்த சர்வதேச ஆய்வு மாநாடு அமையும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29ஆம் திகதி) மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகும் தொடக்க நிகழ்விற்கு துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மாநாட்டின் பிரதான ஒழுங்கமைப்பாளர் கலாநிதி ரி.சனாதனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைப் பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஆய்வு மாநாட்டின் பிரதம ஆசிரியர் கலாநிதி எம். திருவரங்கன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

மாநாட்டின் முக்கிய உரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் முதலாவது பீடாதிபதியான வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கே. இந்திரபாலா 'யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மனிதப் பண்பியற் கற்கைகள்: முதற் பத்தாண்டுகள் (1974 – 1984)' என்னும் தலைப்பிலும், இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுஜித் சிவசுந்தரம் 'இலங்கையில் மானுடர்களும் சூழல்களும்' என்னும் தலைப்பிலும் நிகழ்த்தவுள்ளனர். நன்றியுரையினை மாநாட்டின் செயலாளர் அபிராமி ராஜ்குமார் நிகழ்த்துவார்.

அவற்றைத் மாநாட்டின் பிரதான நிகழ்வுகளான குழுநிலைக் கலந்துரையாடல்களும் ஆய்வுக் கட்டுரை அமர்வுகளும் அடுத்த நாள் சனிக்கிழமை (30ஆம் திகதி) முழுநாள் அமர்வுகளாக இடம்பெறவுள்ளன.

# இலங்கையில் செயற்கட்டமைப்பு மாற்றத்துக்கு டிஜிட்டல் ரீதியில் SLT-MOBITEL நிறுவனம் தயார்

மாற்றம் மற்றும் வளர்ச்சியை முன்னெடுப்பதற்கு தூண்டுகோல்களான எதிர்காலத்தில் கவனம் செலுத்தும் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் முறையில் வலுவூட்டப்பட்ட குடிமக்களுக்கான தேசிய பிரேரணை பற்றி அறிவித்துள்ளது

முன்னணி தொலைத்தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப சேவை வழங்குநரான SLTMOBITEL, அத்தியாவசிய சேவைகள் மற்றும் துறைகளை மேம்படுத்துவது மற்றும் குடிமக்களை டிஜிட்டல் முறையில் வலுவூட்டுவது தொடர்பான தேசிய திட்டத்தை முன்மொழிவது பற்றி அறிவித்துள்ளது.

SLTMOBITEL இனால் முன்மொழியப்பட்டுள்ள புதிய செயற்திட்ட மாற்றத்துக்கான அடித்தளம் டிஜிட்டல் முறையில் வலுவூட்டப்பட்ட மக்கள் என்பதாக அமைந்திருப்பதுடன், அடையாளங்களின் டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் உறுதியான டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் பிரத்தியேக கட்டமைப்பு என்பதை குறிக்கின்றது. நாட்டுக்கு முக்கியமான சகல பிரிவுகளிலும் டிஜிட்டல் வணிக மற்றும் eஆளுகை ஆகியவற்றை அறிமுகம் செய்வதற்கு புதிய தொழில்நுட்ப புத்தாக்கங்களை கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்டமைந்திருக்கும். சுகாதார பராமரிப்பு, கல்வி, போக்குவரத்து, விவசாயம், நீதி மற்றும் வங்கியியல் மற்றும் நிதியியல் போன்றவற்றை அத்தியாவசிய முக்கியமான சேவைகளாக இனங்கண்டுள்ளதுடன், இந்த புதிய கட்டமைப்பின் கீழ் அதிகளவு வினைத்திறனாகவும் வெளிப்படையாகவும் இயங்கும்.



ஸ்ரீலங்கா ரெலிகொம் குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ இந்த புதிய கட்டமைப்பு பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "சிங்கப்பூரில் முன்னெடுக்கப்பட்டதைப் போல, மதிநுட்பமான தேசம் (Smart Nation) ஆக மாற்றம் பெறக்கூடிய வாய்ப்புகள் இலங்கையில் காணப்படுகின்றது. அதனூடாக புத்தாக்கமான தொழில்நுட்பத்தை ஒவ்வொரு செயற்பாட்டின் முதுகெலும்பாக திகழச் செய்யக்கூடியதாக இருக்கும். இதை முன்னெடுப்பதனூடாக நாடு எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்பதுடன், முக்கியமான துறைகள் மற்றும் சேவைகள் அதிகளவு வினைத்திறன் வாய்ந்த, வெளிப்படையான, இலாபமீட்டக்கூடிய கட்டமைப்புகளாக மாற்றமடைந்து, மக்களின் வாழ்க்கைக்கு பெரிதும் பயனளிப்பதாக அமைந்திருக்கும்" என்றார்.

கொவிட்19 தொற்றுப் பரவல் காரணமாகவும், அண்மைய பொருளாதார சவால்கள் காரணமாகவும், கல்வியை தொடர்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றுமொரு தேசிய முன்னுரிமையாக அமைந்துள்ளது. இந்த பெரும்பொருளாதார காரணிகளால் வேறெந்த மாற்றுத் தெரிவுகளுமின்றி சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒன்லைன் கல்வியை நோக்கி நகர வேண்டியுள்ளதால், மேலும் முன்னேற்றங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பாடசாலைகளில் மட்டுப்படுத்தப்பட்டளவு வசதிகள் காணப்படுவதுடன், ஆசிரியர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி அவசியமானதாக அமைந்துள்ளது. eபயிலல் மற்றும் ஸ்மார்ட் வகுப்பறை போன்றவற்றுக்கான தேவை எதிர்காலக் கல்வியில் முக்கிய அங்கங்களாக ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நாட்டின் போக்குவரத்து துறையை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு SLTMOBITEL முன்மொழிந்துள்ளது. பல்வகைப்படுத்தப்பட்ட பயணத் திட்டங்கள், ஒன்லைன் டிக்கட் முற்பதிவுகள், பொதுப் போக்குவரத்து சேவைகளான பேருந்து மற்றும் புகையிரதம் போன்றவற்றை கண்காணிப்பதற்கான appகள், களப்பகுதிகளில் WiFi வசதிகளை வழங்குவது மற்றும் பணமில்லா கொடுப்பனவு வசதிகளை செயற்படுத்துவது போன்றவற்றினூடாக இலங்கையின் போக்குவரத்து துறையை அதிகளவு வினைத்திறனானதாகவும் உற்பத்தித்திறன் வாய்ந்ததாகவும் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

இலங்கையின் விவசாய பெறுமதி சங்கிலியில் Helaviru Digital Economic Centre எனும் கட்டமைப்பினூடாக விவசாயிகளுக்கு தகவல்கள் மற்றும் உள்ளார்ந்த அம்சங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியை ஏற்படுத்தியுள்ளதுடன், வெளிப்படையான கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுப்பதற்கான வியாபார கட்டமைப்பை உருவாக்கி டிஜிட்டல் மயமாக்கலை SLTMOBITEL முன்னெடுக்கின்றது.

இலங்கையின் சட்டத்துறைக் கட்டமைப்பை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்துவது SLTMOBITEL இனால் முன்மொழியப்படும் தீர்வாக அமைந்துள்ளது. டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட பதிவு பேணல் செயன்முறையை நிறுவுவது முதல், தன்னியக்கமயமான முறையில் நீதிமன்றத்தில் வழக்கு விவாதிப்பது, போக்குவரத்து தடைப்பட்டிருந்தால் மெய்நிகரான முறையில் நீதிமன்ற வழக்குகளை கேட்பது மற்றும் ஏனைய பிரிவுகளுடன் டிஜிட்டல் முறையில் இணைப்பை ஏற்படுத்துவது (உதாரணம்: பொலிஸ்), போன்றவற்றினூடாக நாட்டில் அதிகளவு வினைத்திறனான நீதிக் கட்டமைப்பை உருவாக்கக்கூடியதாக இருக்கும்.

## வடக்கின் உதயம்

# இலங்கைக்கு கடத்தவிருந்த வலி நிவாரண மாத்திரைகள் மீட்பு

யாழ்.விசேட நிருபர்



தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த வலி நிவாரண மாத்திரைகளை தமிழக க்யூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு வலி நிவாரண மாத்திரைகள் கடத்தப்படவுள்ளதாக தமிழக க்யூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து க்யூ பிரிவு பொலிஸார் திரேஸ்புரம் கடற்கரை பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பதிவு எண் இல்லாமல் சந்தேகத்திற்கிடமான முறையில் தரித்து நின்ற நாட்டு படகினை சோதனை செய்தனர்.

அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக சுமார் 443 அட்டைகளில் 4430 வலி நிவாரண மாத்திரைகள் மீட்கப்பட்டன.

தமிழக க்யூ பிரிவு பொலிஸாரினால் மீட்கப்பட்ட வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் நாட்டுப்படகு என்பவற்றை சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# மன்னார் உள்ளூர் புகையிரத விஷேட சேவை நிறுத்தம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களின் தேவையை உணர்ந்து தலைமன்னார் பியர், மடு வீதி விஷேட புகையிரத சேவை பிரயாணிகள் குறைவின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. ரயில்வே இணைப்பு போக்குவரத்து சேவையின்மையே இதற்கு முக்கிய காரணம் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது, அன்று தொட்டு தலைமன்னார் பியர் கொழும்பு கோட்டை வரைக்கும் இடம்பெற்று வந்த புகையிரத சேவையானது பின்னர் யுத்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டு மதவாச்சி கொழும்பு கோட்டை சேவையாக இடம்பெற்றுவந்தது.

இதனைதொடர்ந்து யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்தபின்னர் இந்திய அரசின் உதவியுடன் மீண்டும் தலைமன்னார் பியரிலிருந்து கொழும்பு கோட்டைக்கு இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் நாட்டில் நிலவி வந்த கொரோனா தொற்று நோய் காரணமாக இக்காலத்தில் மீண்டும் சேவை இடைநிறுத்தப்பட்டது. தொற்று நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் தலைமன்னார் கொழும்பு புகையிரத சேவையானது தலைமன்னார் பியர் அனுராதபுரம் வரைக்குமான சேவையாக மட்டுப்படுத்தப்பட்டது.

இவ்வாறு இருக்க நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவ தொடங்கியதும் போக்குவரத்து சேவைகள் யாவும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையாக மாறியதுடன் சில இடங்களுக்கான சேவைகளும் இடைநிறுத்தப்பட்டன. இவ்வாறு ஒரு சில வாரங்கள் புகையிரத சேவைகளும் இப்பகுதியில் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் இடைநிறுத்தப்பட்ட புகையிரத சேவையானது மீண்டும் 18.07.2022 அன்று வழமைக்கு திரும்பி தலைமன்னார் பியர் அனுராதபுரம் வரைக்குமான சேவையாக ஆரம்பிக்கத் தொடங்கின. இதன்படி தலைமன்னார் பியரிலிருந்து காலை 6 மணிக்கு புறப்படுகின்ற புகையிரதம் அனுராதபுரத்தை காலை 8.30 க்கு சென்றடைகின்றது. பின் அங்கிருந்து காலை 11.15 க்கு புறப்படுகின்ற ரயில் தலைமன்னார் பியருக்கு பிற்பகல் 1.40 மணிக்கு சென்றடைகின்றது.

அத்துடன் சேவைகளுடன் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களின் தேவையை கருத்திற் கொண்டு மன்னார் மாவட்ட உள்ளூர் விஷேட சேவையாக தலைமன்னார் பியரிலிருந்து பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி மடுறோட் புகையிரத நிலையத்தை பிற்பகல் 4 மணிக்குச் சென்றடைந்து மீண்டும் அங்கிருந்து பிற்பகல் 4.30 மணிக்கு புறப்பட்டு 5.30 மணிக்கு தலைமன்னார் பியரை வந்தடையும் சேவையாக இருந்தது.

# வாள்வெட்டு சம்பவத்தில் ஒருவர் பலி

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முள்ளியவளை தெற்கு பகுதியில் இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் வாள்வெட்டாக மாறியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (26) இரவு இடம்பெற்றுள்ளது. வாள்வெட்டிற்கு இலக்கான முள்ளியவளை தெற்கினை சேர்ந்த குடும்பஸ்தரான 32 வயதுடைய பெருமாள் சதீஸ்வரன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (26) இரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இருந்த போதும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு கிராமத்தவர்கள் தெரியப்படுத்தியும் சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருகைதரவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சடலம் மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வயோதிப பெண் மீது பாலியல் துஷ்பிரயோக முயற்சி சிறுவன் கைது

யாழ்.விசேட நிருபர்

வட்டுக்கோட்டை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் வயோதிப பெண்ணை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சித்த சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

பொன்னாலை பகுதியை சேர்ந்த 63 வயதுடைய வயோதிப பெண்ணை வீட்டில் இறக்கி விடுவதாக கூறி சைக்கிளில் ஏற்றி சென்ற அப்பகுதியை சேர்ந்த 15 வயதுடைய சிறுவன் பொன்னாலை காட்டு பகுதிக்குள் வயோதிப பெண்ணை வலுக்கட்டாயமாக இழுத்து சென்று, பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்துள்ளான்.

அதனையடுத்து அப்பெண் அவ்விடத்திலிருந்து தப்பி சென்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் அதுதொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சிறுவனை கைது செய்து, பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# எரிபொருள் விநியோகத்தில் மாற்றுத்திறனாளிகள், மதகுருமார்களுக்கு முன்னுரிமை

சாவகச்சேரி விஷேட நிருபர்



நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று மதகுருமார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவிவரும் வேளையில் எரிபொருளை நம்பி தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்தும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மதகுருமார்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு நுணாவில் ஐ.ஓ.சி உரிமையாளர் வை.சிவராசாவால் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

இது தொடர்பாக மதகுருமார்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

எரிபொருளை நம்பியே நாம் ஆலயங்களுக்கு சென்று நித்திய பணிகளில் ஈடுபட்டு வருகிறோம்.இருப்பினும் எமது நிலைமையைக் கருத்திற்கொண்டு எவரும் எமக்கு முன்னுரிமை வழங்குவதில்லை.ஆனால் தற்போது நுணாவில் ஐ.ஓ.சி உரிமையாளர் எமக்கு முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்க முன்வந்தமைக்கு நன்றிகள்.தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை அவர் முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

யாழ் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் சர்வ மதகுருமார்கள் நுணாவில் ஐ.ஓ.சிக்கு வருகை தந்து எரிபொருள் நிரப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளவாலையிலும், நீர்வேலியிலும் நாளை சிறப்புச் சொற்பொழிவுகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' நடைபெற்று வருகின்றன.

31 ஆவது சொற்பொழிவு வசந்தபுரம் இளவாலை பாரதி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கலைமதி சகிபரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமான் காட்டிய சைவ வாழ்வியல்' எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து நடைபெறும். ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவினை சைவப்புலவர் செ.த.குமரன் 'ஆடி மாதமும் சைவ வாழ்வியலும்' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

(அ. கனகசூரியர்)

# தேயிலை தொழிற்சாலையில் திடீர் தீ பரவல்

## 27000 கிலோ தேயிலை எரிந்து நாசம்

(தெல்தோட்டை தினகரன், ஹற்றன் சுழற்சி நிருபர்கள்)



புசல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வகுகப்பிட்டி பகுதியில் தனியார் தேயிலை தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் திடீரென தீ பற்றியுள்ளது.

இதில் இரண்டு தேயிலை அரைக்கும் இயந்திரங்களும் அடங்கும். 27ஆயிரம் கிலோ தேயிலை தூளும் எரிந்து சாம்பலாகியுள்ளது. தீ பற்றிய போது தொழிற்சாலையில் ஒருவரும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இத்தொழிற்சாலையில் 20 ற்கும் மேற்பட்டோர் தொழில் புரிகின்றனர். நாள் ஒன்றுக்கு 4 ஆயிரம் தேயிலை கொழுந்து அரைக்கப்படுகின்றன. 39 ஏக்கர் தேயிலை காணியில் உள்ள தேயிலை கொழுந்தும் வெளியில் இருந்து கொண்டுவரப்படுகின்ற கொழுந்தும் இங்கு அரைக்கப்படுகின்றன. தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. புசல்லாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உரிமையாளர் தொழிற்சாலையை தோட்டத்துடன் 79 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்திருப்பதாக தெரியவருகின்றது.

## மலைச்சாரல்

# முச்சக்கர வண்டி குடைசாய்ந்து ஒருவர் பலி, நால்வர் படுகாயம்

(ஹாலிஎல விசேட நிருபர் )

படல்கும்புர கிரிகல்பொத்த வீதியில் பயணித்த முச்சக்கர வண்டி சாரதியால் முச்சக்கரவண்டியை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி ஓடியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர் படல்கும்புர அலுபொத்த பிரதேசத்தை சேர்ந்த 75 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. விபத்தில் சிக்கிய முச்சக்கரவண்டியின் சாரதி காயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்று வருகின்றார். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குளவிக்கொட்டியதில் 5 பேர் பாதிப்பு

(தெல்தோட்டை தினகரன் நிருபர்)

புசல்லாவ சோகம தோட்ட கீழ்பிரிவு இலக்கம் 93 தேயிலை மலையில் குளவி கொட்டியதில் 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை 11.30 மணியளவில் கொழுந்து பறித்துக் கொன்டிருந்த தொழிலாளர்கள் 5 பேரை குளவிகள் கடுமையாக தாக்கியுள்ளது. புசல்லாவ மாவட்ட வைத்தியசாலைக்கு தோட்ட லொறி மூலமாக இவர்கள் எடுத்து செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் உள்ளனர். நால்வர் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சப்ரகமுவ மாகாணத்தில் இணையவழி தமிழ்மொழி விழா

(அவிசாவளை நிருபர்)

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம் இணையவழியில் தமிழ்மொழித்தின விழாவினை நடாத்த திட்டமிட்டுள்ளது. இவ்விழாவானது எதிர்வரும் 29ஆம் திகதி இணைய வழியில் இடம்பெறவுள்ளது. அன்றையத்தினம் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வினை www. enenapiyasa. lk எனும் இணையத்தளத்தில் நேரிடையாக பார்வையிடலாம். சப்ரகமுவ மாகாணத்தில் காணப்படும் ஏழு வலயங்களை சேர்ந்த பாடசாலைகள் இந்நிகழ்நிலை விழாவில் கலந்துக்கொள்ளவுள்ளன. இதன் போது பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளாக இசையும் அசைவும், பேச்சு, பரதநாட்டியம், கோலாட்டம், கரகாட்டம், இசை தனி, குழு, நாடகம் என இன்னும் பல சுவையான அம்சங்களும் இடம் பெறவுள்ளன.

மாகாண கல்விப்பணிப்பாளர் குரூப் ஆராச்சியின் தலைமையிலும் உதவிக்கல்விப் பணிப்பாளர் சகுந்தலா மனோகரனின் நெறிப்படுத்தலிலும் மாகாண தொழில்நுட்ப குழுமத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் இடம்பெறவுள்ளது.



ஹற்றன் திருச்சிலுவை ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் இடம்பெற்றது.

# தமிழக அரசு வழங்கிய மருந்துப்பொருட்கள் தோட்ட மருந்தகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்

## சமூக அமைப்புகள் கோரிக்கை

தமிழக அரசினால் வழங்கப்பட்ட மருந்துகளின் ஒரு தொகுதியை பெருந்தோட்ட மருந்தகங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சமூக அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

தமிழக அரசினால் இலங்கை மக்களுக்கு மூன்றாவது முறையாகவும் அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் மருத்துவ உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதில் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் முறையாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மலையகம் சார்ந்த சமூக அமைப்புகள் பல தமது கருத்துக்களை தெரிவித்துள்ளன.

இதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடந்த காலங்களில் இந்திய தமிழ் நாட்டு அரசாங்கம் வழங்கிய உதவிகளில் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு பத்து கிலோ அரிசி மாத்திரமே வழங்கப்பட்டது.

அதுவும் தோட்ட நிர்வாகத்தின் ஊடாக வழங்கப்பட்ட உதவியில் பல்வேறு குளறுபடியான நிகழ்வுகள் இடம்பெற்று வீதிக்கு இறங்கி போராட வேண்டி ஏற்பட்டது.

இந்நிலையில் நட்பு நாடுகளிலிருந்து வழங்கப்படும் இவ்வாறான உதவிகள் மலையக பெருந்தோட்ட சமூகத்தினருக்கும் பாகுபாடின்றி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் வேண்டுக்கோளாகும்.

இதை விடுத்து இவ்வுதவியில் மலையக மக்களை வஞ்சிப்பது வேதனைக்குரிய விடயமாக கருதுவதாக சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

இது தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதை தவிர்க்கும் வகையில் மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க மலையக தமிழ் அரசியல் வாதிகள் முன்வர வேண்டும்.

அதேபோல தோட்ட நிர்வாகத்தின் உதவியுடன் பகிர்ந்தளிக்கப்படும் நிவாரணபொதிகள் வழங்கலில் தோட்ட தொழில் அற்ற குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பிலும் அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பது எமது கோரிக்கையாகவுள்ளதாக சமூக அமைப்புகள் தெரிவிக்கின்றன.

மேலும் தோட்டப்பகுதிகளில் காணப்படும் மருந்தகங்களில் சிகிச்சைக்கான மருந்துகள் இக்காலக்கட்டத்தில் இல்லை. இந்நிலையில் தமிழ் நாட்டு அரசாங்கம் வழங்கும் உதவிகளில் மருந்துகளும் வழங்கப்படுவதால் அதில் ஒரு தொகுதியை பெருந்தோட்ட மருந்தகங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சமூக அமைப்புகள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்.

# சரக்கு ரயிலில் சிக்குண்டு ஒருவர் படுகாயம்

பதுளை தினகரன் விசேட நிருபர்

கண்டியிலிருந்து பதுளை நோக்கி வந்துகொண்டிருந்த சரக்கு ரயிலில் சிக்குண்ட நபரின் காலின் கீழ்பகுதி முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இவர் எல்ல வீதி வெல்லவாய பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் என தெரியவந்துள்ளது.

எல்ல ரயில் நிலையத்திற்கு அருகாமையில் ரயில் பாதையில் வைத்தே நேற்று மாலை இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் தற்போது பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நபர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். மேலதிய விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கேஸ் சிலிண்டர் திருடியவர் கைது

கேஸ் சிலிண்டர் திருடி வந்த ஒருவரை பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர்.

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா டெஸ்போட்டில் பகுதியில் வீடொன்றிலிருந்து கேஸ் சிலிண்டர் களவாடப்பட்டுள்ளது.

பசுமலை பகுதியிலிருந்து டெஸ்போட் பகுதிக்கு விருந்தாளியாக வருகை தந்தவரே நேற்று (27) காலை தனி வீடு ஒன்றில் இருந்து வெற்று கேஸ் சிலிண்டர் ஒன்றினை திருடி நானுஓயா கிரிமிட்டிய பிரதான நகரில் விற்பனை செய்ய முற்பட்ட போது பிரதேச மக்களும், இளைஞர்களை மடக்கிப் பிடித்துள்ளனர். கையும் களவுமாக மாட்டிக்கொண்ட திருடனையும் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். கைதான திருடன் தொடர்பில் நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் 18 பேருக்கு...

காலத்துக்கு குறையாத வகுப்புத்தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதுமுக மாணவர்களை ஒன்று கூடல் எனும் பெயரில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதிக்கு அழைத்து பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் அது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளரால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து சட்ட நிறைவேற்று அதிகாரி , மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் ஒழுக்காற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று புதுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்களிடம் இருந்து மீட்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் சிரேஷ்ட மாணவர்கள் 18 பேருக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் தனது பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. புதுமுக மாணவர்களின் வாக்குமூலங்களை பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் , குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். அதன் அடிப்படையில் குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட காலத்துக்கு குறையாத வகுப்புத்தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## 57 மேலதிக வாக்குகளால்...

பொன்னம்பலத்தின் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் ஆளும் கட்சி உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்.டிலான் பெரேரா, டளஸ் அழகப்பெரும, வசந்த யாப்பா பண்டார, நாலக்க கொடஹேவா ஆகியோர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

அவசரகால சட்ட பிரேரணைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

அத்துடன் விமல் வீரவன்ச எம்.பியின் கட்சி உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததுடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களில் மைத்திரிபால சிறிசேன, தயாசிறி ஜயசேக்கர, துமிந்த திஸாநாயக்க உட்பட சிலர் உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டிருக்கவில்லை. என்றாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஜோன் செவிரத்ன பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழ் 2022.07.17ஆம் திகதியன்று செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம் மேற்படி கட்டளைச்சட்டத்தின் IIஆம் பகுதியின் கீழ் இலங்கை முழுவதும் 2022.07.18ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக அப்போதைய பதில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

மேற் கூறப்பட்ட பிரகடனத்தை மேற்கொள்வதற்கான காரணம் மக்களிடையே அமைதியைப் பாதுகாத்தல், பொது மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகளைக் கொண்டு நடத்துவதற்காகவெனவும் அரசியலமைப்பின் 155ஆவது உறுப்புரையின் 04ஆவது துணை உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதாகவும் அப்பிரகடனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தனிஸ் அலியிடம் CID...

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானத்தினுள் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினரால் அவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்ட குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய அந்நபரை விசாரணைக்கு உட்படுத்த குற்றப் புலனாய்வு பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. கொழும்பு கோட்டை மற்றும் காலிமுகத்திடல் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் அடிப்படையில், கடந்த 13ஆம் திகதி சில தரப்பினர் இலங்கை ரூபவாஹினி கூடடுத்தாபனத்திற்குள் பலவந்தமாக நுழைந்து ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியிருந்தனர். இந்த விடயம் தொடர்பில், அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

## சபை முதல்வராக சுசில்...

கொறடாவாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது.இதன் போது புதிய நியமனங்கள் தொடர்பாக அவர் அறிவித்தார்.

## போராட்ட களத்தில் உள்ளோர்...

கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகிச் செல்லுமாறு கோரியே காலி முகத்திடலில் ஆரம்பத்தில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

அவர் பதவி விலகி அரசியலமைப்பின்படி புதிய ஜனாதிபதியும் தெரிவுசெய்யப்பட்டார். எனினும், தமது நோக்கம் நிறைவேறிய பின்னரும் போராட்டம் தொடர்கிறது. இது நியாயமற்றது. நாட்டை சீர்குலைத்து, ஆட்சி கவிழ்ப்புக்கு வழிவகுக்கும் இடமாக அது இருக்கக்கூடாது. அமைதி போராட்டக்காரர்களுக்கு பின்னால் ஒழிந்துகொண்டு இந்த போராட்டத்தை பாதாள உலக குழுவினரும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுமே முன்னெடுக்கின்றனர்.

இத்தகைய போராட்டங்களை பார்க்கும் வெளிநாட்டினர் முதலீட்டுக்கு தகுதியற்ற நாடாக எம்மை கணிக்கக்கூடும். தற்போது, உண்மை பேராட்டக்காரர்கள் விலகியுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகர்களும், பாதாள உலகக்குழுவினருமே தற்போது போராட்டத்தை வழிநடத்துகின்றனர். கடந்த வார சம்பவத்தின் பின்னர் சிலர் இராணுவத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றனர். அவர்கள் மக்களையும் எம்மையும் பாதுகாப்பதற்காகவே போராடுகின்றனர். விடுதலைப் புலிகளுடன் போராடி இராணுவத்தினர் தோற்கடித்தனர். எனினும், அமைதி போராட்டங்களுக்கு அவர்கள் மதிப்பளித்தனர். இறுதியில் மிகவும் கேவலமாக அவர்களை போராட்டக்காரர்கள் நடத்தினர்.

அவசரகால நிலையை நீடிக்க அனைவரும் ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறு செய்யாதவர் பயங்கரவாதத்துக்கு ஆதரவு வழங்குவோராக கருதப்படுவர் என்றார்.

## தேசிய எரிபொருள் அட்டை;...

02ஆம் பக்கத் தொடர்

நிலையங்களிலும் நேற்று முன்தினம் சோதனை முயற்சியாக அமுல் செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறினார். அதன்படி சிபெட்கோ எரிபொருள் நிலையங்களில் 87,652 வாகனங்களுக்கும் LIOC நிரப்பு நிலையங்களில் 5,193 வாகனங்களுக்கும் எரிபொருட்கள் வழங்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மணல் குவியலுக்குள்...

02ஆம் பக்கத் தொடர்

தகவலையடுத்து பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் தேடுதல் நடத்தி டீசல் பெரல்களை கண்டுபிடித்தனர்.

இந்த நபரிடம் எந்தவொரு டீசல் வாகனமும் இல்லை என்றும் சைக்கிள் ஒன்று மாத்திரமே உள்ளதாகவும் இவர் பல நபர்களிடமிருந்தும் வாகனங்களை பெற்று எரிபொருள் வரிசையில் நின்று டீசலை சேகரித்து விற்பனை செய்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

அவர் எரிபொருள் விற்பனை நிலைய விலையை விட மூன்று மடங்கு அதிக விலைக்கு எரிபொருளை விற்றுள்ளதாக பொலிசாருக்கு தெரிய வந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் இன்று 28ஆம் திகதி களுத்துறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

## சிங்கப்பூரில் மேலும்...

02ஆம் பக்கத் தொடர்

ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் புகலிடம் கோரவில்லை அல்லது வழங்கப்படவில்லை எனவும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸின் முந்தைய அறிக்கையில், சிங்கப்பூரின் குடிவரவு திணைக்களம், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 14 நாள் குறுகிய கால பயண அனுமதி (STVP) வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தியது. மேலும் இலங்கையில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கு பொதுவாக சிங்கப்பூரில் 30 நாள் குறுகிய கால பயண அனுமதி வழங்கப்படுகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, குறுகிய கால பயண அனுமதி காலத்தை மேலும் 14 நாட்களுக்கு நீட்டித்துள்ளார் என ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

## மூன்று சிறுவர்கள்...

02ஆம் பக்கத் தொடர்

இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடிக்கு சென்றுள்ளனர். அவர்களை கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் மீட்டு மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர். இந்த நிலையில் தனுஷ்கோடி கடல் பகுதியில் கடற்படை வீரர்கள் வியாழக்கிழமை அதிகாலை ஹோவர்கிராப்ட் கப்பலில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது தனுஷ்கோடி 05ஆவது மணல் திட்டு பகுதியில் சிலர் நின்று கொண்டிருப்பதை பார்த்தனர்.

இதையடுத்து கடற்படை வீரர்கள் அங்கு சென்று விசாரித்த போது அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த உதயகுமார்(வயது49), அவரது மனைவி ரோஜா (38), மகள் விதுஷா(12), மகன்கள் தனுஷன்(10), கிருஷ்ணா(7) மற்றும் மற்றுமொருவர் நியூட்டன் நிமலராஜன்(47) என்பது தெரியவந்தது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், அங்கு வாழ வழியில்லாமல் தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக தெரிவித்தனர். அவர்கள் அனைவரும் படகு மூலம் இலங்கையில் இருந்து வந்துள்ளனர். அவர்களை அங்கிருந்து நேற்றுமுன்தினம் இரவு படகில் அழைத்து வந்தவர்கள், நேற்று அதிகாலை தனுஷ்கோடி பகுதியில் இறக்கி விட்டு சென்றிருக்கின்றனர். இதைத்தொடர்ந்து அவர்கள் 06 பேரையும் கடற்படை வீரர்கள் ஹோவர்கிராப்ட் கப்பலில் கரைக்கு அழைத்து வந்தனர்.

பின்பு அவர்களை தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். சிறுவர்களை தவிர மற்றய 3 பேரிடமும் மண்டபம் கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் விசாரணை நடத்தினர். இலங்கையில் இருந்து கடந்த மார்ச் மாதம் முதல் தற்போது வரை 125க்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் அகதிகளாக ராமேசுவரம் மற்றும் தனுஷ்கோடிக்கு சென்றுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது.

## கொவிட் அறிகுறியுள்ள சிறுவர்களை...

வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் , கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களுக்கு காய்ச்சலுடன் இருமல், தடிமன் மற்றும் தொண்டை உள்ளிட்ட அறிகுறிகள் தென்படும் வீதம் அதிகரித்துள்ளது. இவ்வாறு அறிகுறிகள் தென்படும் சிறுவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது , அவர்களில் கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்படும் வீதம் அதிகரித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதில் சுட்டிக்காட்ட வேண்டிய விடயம் யாதெனில் எழுமாறாக மேற்கொள்ளப்படும் சோதனைகளில் கூட தொற்றாளர்கள் இனங்காணப்படும் வீதம் அதிகமாகக் காணப்படுகின்றமையாகும். தற்போது பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலை செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை காணப்படுகிறது. எனவே தொற்று அறிகுறிகள் காணப்படும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பெற்றோரிடம் கேட்டுக் கொள்கின்றோம். காரணம் தற்போது கொவிட் தொற்று மிக வேகமாகவும், இலகுவாகவும் பரவக் கூடிய சூழலே காணப்படுகிறது. கொவிட் பரவல் மீண்டும் தீவிரமடைவதைத் தடுப்பதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டியது இன்றியமையாதது.

சமூக இடைவெளியை பேணுவதோடு , மிக நெருங்கிய தொடர்பாடல் முறைமைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொது போக்குவரத்து உள்ளிட்ட சன நெறிசல் மிக்க இடங்களில் சிறந்த தரத்திலான முகக் கவசங்களை அணிய வேண்டும் என்றார்.

## மஹிந்த, பசில் வெளிநாடு...

ஓகஸ்ட் 2ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல முடியாது என உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு கோரிய மனு தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையாத நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வன்முறையாளர்கள் இனி...

விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

வழக்கு, நீதிமன்றம் என்று சென்றால் ஆர்ப்பாட்டத்துக்கு தூண்டி விடுபவர்கள் எவரும் பாதுகாக்க வரப்போவதில்லை. இளைஞர்கள் தமது எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டுமென்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

அமைதியான ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை வன்முறைக்கு இடமளிக்க முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

குழப்பகரமான சூழ்நிலையை பொலிசாரால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் அவசரகால நிலையை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். ஆர்ப்பாட்டமென்ற போர்வையில் பொதுமக்களின் சொத்துக்கள் வீடுகள் அரச வளங்களை சேதப்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது. அவற்றை தடுப்பதற்காகவே அவசரகால நிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் அவசரகால நிலை நடைமுறைப்படுத்தப்படுமானால் தேவையான போது இராணுவத்தினரை கடமைக்கு அழைக்க முடியும். வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கும் அதன் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும். தற்போதைய போராட்டம் நியாயமான காரணங்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டது. எரிபொருள் தட்டுப்பாடு, சமையல் எரிவாயு தட்டுப்பாடு உள்ளிட்ட நெருக்கடி நிலைமை காரணமாகவே மக்கள் ஆத்திரப்பட்டனர். அதற்கான ஆர்ப்பாட்டம் நியாயமானது.

ஆர்ப்பாட்டம் செய்வது மக்களின் உரிமையாகும். எனினும் அது வன்முறையாக வெடிக்கக் கூடாது. அதேவேளை அரசாங்கத்தை கவிழ்க்கும் வகையில் அதனை முன்னெடுப்பது குற்றமாகும்.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கும் ஜனாதிபதியை வெளியேற்றுவதற்கும் பிரதமரை வெளியேற்றுவதற்கும் பிரபுக்களை படுகொலை செய்வதற்கும் ஆர்ப்பாட்டம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அது குற்றவியல் சட்டத்தின்படி மரண தண்டனைக்குரிய குற்றமாகும்.

போராட்டம் என்ற போர்வையில் பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவர் மனிதாபிமானமற்ற ரீதியில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார். அந்த சம்பவம் தொடர்பில் இதுவரை 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்தை கைப்பற்ற முயற்சித்தனர்.அவ்வாறானால் நாம் தற்போது பாராளுமன்றத்தில் இருக்கவும் முடியாது.

அதனையடுத்து அவர்கள் நீதிமன்றத்தையும் முற்றுகையிட நடவடிக்கை எடுத்திருப்பார்கள். நீதிபதிகளுக்கும் அழுத்தம் கொடுக்க முயற்சித்திருப்பார்கள். அவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காகவே அரசாங்கம் அவசரகால நிலையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அவசர கால நிலைக்கு வன்முறையில் ஈடுபடுபவர்களே பயப்பட வேண்டும். சாதாரண ஆர்ப்பாட்டக்காரர்கள் அது தொடர்பில் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நான் கூற விரும்புவது உங்களை தூண்டிவிட்டு குற்றச் செயல்களில் ஈடுபடச் செய்பவர்கள் நீங்கள் வழக்கு, நீதிமன்றம் என்று சென்றால் உங்களை காப்பாற்ற வரமாட்டார்கள். அதனை கவனத்திற் கொண்டு தமது எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டுமென்று நான் தனிப்பட்ட ரீதியில் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வஜிர நேற்று எம்.பியாக...

முன்னிலையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் 1994ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்தில் முதல் தடைவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். அன்றிலிருந்து 2010ஆம் ஆண்டு வரை வஜிர அபேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்திலிருந்து தொடர்ச்சியாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் காலி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மீண்டும் அவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். அத்துடன், அவர் பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சராகவும், பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்கள் அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் தற்பொழுது செயற்பட்டு வருகிறார்.

1961.09.02ஆம் திகதி பிறந்த வஜிர அபேவர்தன, காலி மஹிந்த வித்தியாலயத்தில் கல்வியைப் பெற்றார். அத்துடன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

## ஜனநாயக போரட்டங்களுக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை அரசியலில் என்றுமில்லாத மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியாக செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ விலகியதோடு எஞ்சிய காலத்துக்கு ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்டார். பாராளுமன்றம் மேலும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தாலும் ஜனநாயக பாராளுமன்ற முறையை பாதுகாத்து நாட்டை முன்னேற்ற நாம் அர்ப்பணிக்க வேண்டும். நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். அதற்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் குழுக்கள் பங்களிக்க வேண்டும்.

முகம்கொடுக்கும் நெருக்கடியை மக்கள் பக்கமிருந்து நோக்கவேண்டும். ஜனநாயக அரசியலில் 50 வருடங்களை நெருங்கியுள்ளேன். எமது நாட்டு அரசியலமைப்பு மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான கால கட்டத்தில் இருக்கிறோம்.நெருக்கடிகளின் காரணமாக மக்களின் எதிர்ப்புகள் ஏற்பட்டது. சில உடன்பாடுகளுடன் அரசியலமைப்பு திருத்தங்கங்களை முன்னெடுக்க உறுதி பூணுகிறோம். அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகார குழு முறையை துரிதமாக ஆரம்பிக்க உறுதி அளிக்கிறோம். அதற்கான நிலையியற் கட்டளையினூடாக தேவையான மாற்றம் செய்யப்படும். சட்டமூலம் ஊடாக மாற்றங்கள் செய்யவும் எதிர்பார்க்கிறோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை குறித்தும் பேசப்படுகிறது. நிறைவேற்று அதிகார குழு ஊடாக முக்கிய பங்காற்ற முடியும். தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவின் ஊடாக செயற்பட முடியும்.

நாட்டுக்கு பயனுள்ள சட்டதிட்டங்களை உடன்பாட்டுடன் முன்னெடுக்க முடியும்.

இதற்கு முன்னர் நிறைவேற்று அதிகார குழு அமைக்கப்பட்டு வெற்றியளித்தது. அதனூடாக ஏற்படுத்தப்பட்ட பல மாற்றங்கள் சட்டமாக்கப்பட்டு இன்று வரை மாற்றப்படாதுள்ளது. இலவச கல்வி முறையை உருவாக்க இதன் கீழே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## புதிய பிரதமர் தினேஸ்...

02ஆம் பக்கத் தொடர்

நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அரசியல் கொள்கையுடன் அரசியலுக்கு பிரவேசித்த பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதமராக இருந்து சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கௌரவம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசியலமைப்பின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள சக்தி கிடைக்கவேண்டும் என பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து எதிர்க்கட்சியின் பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல புதிய பிரதமர் தொடர்பில் குறிப்பிடுகையில், புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள தினேஷ் குணவர்தனவுடன் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் மிகவும் நெருக்கமாக செயற்பட முடியுமாக இருந்தது.

அவரது திருமண நிகழ்வுக்கும் நான் சென்றிருந்தேன்.

பாராளுமன்றத்தில் நீண்டகாலம் போராட்டங்களை மேற்கொண்டவர். அவருக்கு கிடைக்கவேண்டிய பதவியே தற்போது கிடைத்திருக்கின்றது.

எனவே பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாத்து செயற்பட அவருக்கு சக்தி கிடைக்கவேண்டும் என பிரார்த்திக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

## சீன உதவிகள் தொடர்ந்தும்...

02ஆம் பக்கத் தொடர்

தொகுதிகள் ஜூலை 16 மற்றும் 19 ஆம் திகதிகளில் கொழும்பை வந்தடைந்துள்ளன. 'இதுவரை, பாடசாலை உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் உள்ள 7,900 பாடசாலைகளில் 1.1 மில்லியன் குழந்தைகளுக்கு 3,000 மெட்ரிக் டன் அரிசி கல்வி அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது' என்று தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சீனாவிடம் இருந்து நன்கொடையாக 1,000 மெட்ரிக் தொன் அரிசி இம் மாதம் 24 ம் திகதி கொழும்பிற்கு வந்தடைந்திருந்தது.

சீனாவில் இருந்து நன்கொடையாக பெறப்பட்ட சுமார் 1,000 மெட்ரிக் தொன் அரிசி, பாடசாலை செல்லும் குழந்தைகளைக் கொண்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, 7,925 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 10 இலட்சத்து 80,000 குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். இவ் உதவி திட்டம் 100 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட கிராமப்புறங்கள் மற்றும் தோட்டத் துறையைச் சேர்ந்த பாடசாலைகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு நன்மையாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர்களின் போராட்டம்...

02ஆம் பக்கத் தொடர்

நடேஷ தாசன் மற்றும் தேவன் உட்பட 53 பேரும் படுகொலை செய்யப்பட்டனர். இந்த விடயம் தொடர்பில் சபையில் எவரும் நினைவுப்படுத்தவில்லை. படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அவசரகால சட்டத்துக்கு அனுமதி வழங்கப்படவுள்ள விவாதத்தில் சிங்கள மக்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் பெரிதளவில் பேசப்படுகிறது. சிங்கள மக்கள் தாக்கப்பட்டமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு ,கிழக்கு மலையகத்திலும் மக்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகிறார்கள்.

அவசரகால சட்டத்தை பயன்படுத்தி சிறையை நிரப்புவதற்காக தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டு,கைது செய்யப்பட்ட போது எவரும் அப்போது அதற்காக குரல் கொடுக்காமலிருந்தது கவலைக்குரியதே.

தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதமாகவே கருதப்பட்டது. எனினும் தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்பதை பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அவசரகால சட்டத்தை பயன்படுத்தி ஜே.ஆர் ஜயவர்தன முறையற்ற வகையில் செயற்பட்டதைத் தொடர்ந்து தான் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது.அவசரகால சட்டத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமையாக எதிர்க்கின்றது. வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்கள் எங்கு புதைக்கப்பட்டன என்பதை அரசாங்கம் குறிப்பிட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## ஒலுவில் மீன்பிடி துறைமுகம்...

02ஆம் பக்கத் தொடர்

கலந்து கொண்டு வைபவரீதியாக திறந்து வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். முதற்கட்டமாக மீன் பதனிடும் தொழிற்சாலை மீனவர்களின் பாவனைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கையளித்து வைக்கப்படவுள்ளது. 2013 ஆம் ஆண்டு ஒலுவிலில் வர்த்தக துறைமுகம் முன்னாள் ஜனாதிபதியும், முன்னாள் துறைமுக அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

பல மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட துறைமுகத்தை பராமரிப்பதற்கு துறைமுக அபிவிருத்தி அதிகார சபை மாதாந்தம் 56 இலட்சம் ரூபாய் நிதியை செலவிட நேர்ந்துள்ளது.

இந்நிலையில் அமைச்சரின் முயற்சியினால் தொடர்ந்து துறைமுக அமைச்சு, கடற்றொழில் வள அமைச்சு ஆகியன அண்மையில் சமர்ப்பித்த அமைச்சரவை யோசனை மூலமாக கடற்றொழில் அமைச்சின் பொறுப்பில் ஒலுவில் துறைமுகம் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம் மீன்பிடித் துறைமுகம் கடந்த 04 வருடங்களாக கைவிடப்பட்டு காணப்பட்டதால் அம்பாறை மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் முற்று முழுதாக பாதிக்கப்பட்டிருந்தது.

## தற்போதைய அரசாங்கத்தில்...

02ஆம் பக்கத் தொடர்

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகால சட்டமூலத்திற்கு சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டு மக்களுக்கு அவசர தேவைகள் உள்ளன. குறிப்பாக மாணவர்களுக்கு பாடசாலைக்கு செல்வதற்கு அவசர தேவைகள் உள்ளன.நோயாளர்களுக்கு மருந்து அவசரமாக தேவைப்படுகிறது. தாய்மாருக்கு பிள்ளைகளுக்கு பால்மா அவசரமாக தேவைப்படுகின்றது. விவசாயிகளுக்கு உரம் தேவைப் படுகிறது

இவ்வாறு நாட்டு மக்களுக்கு பல அவசர தேவைகள் காணப்படுகின்றன. ஆனால் அரசாங்கத்தின் தேவை அவசரகால சட்டத்தை நிறைவேற்றுவதாகும்.

காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதனைக் குழப்பி வன்முறைக்கு வழியமைத்தது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மே மாதம் 09ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெற்ற ஒன்றுகூடலாகும்.

இதனை யாரும் மறைக்க முடியாது. அலரிமாளிகையில் ஆரம்பிக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கையின் இறுதியாக வீடுகள் எரிக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். எனினும் 69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு பதவி விலகுவார் என்றே நாம் நினைத்தோம். ஆனால் அவர் நாட்டை விட்டு செல்வாரென நினைக்கவில்லை. நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில், அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்பவே தீர்மானித்தோம். எனினும் ஜனாதிபதி பதவியேற்று மறுதினமே காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது நள்ளிரவு மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் குறித்த தினத்தில் அந்த இடத்தில் இருந்து வெளியேறிச்செல்வதாக தெரிவித்திருந்தார்கள். அதனை தெரிந்துகொண்டே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புஸ்ஸலாவ தேயிலை...

தனியார் தேயிலை தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (26) இரவு ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக தொழிற்சாலை எரிந்து நாசமாகியுள்ளது. தீயை அணைக்க புஸ்ஸலாவ பொலிஸாரும், பொதுமக்களும் முயற்சித்த போதும் தீயினால் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தீ விபத்துக்கான காரணமோ சேத விபரங்களோ இதுவரை சரியாக கண்டறியபடவில்லை. மின் ஒழுக்கின் காரணமாக இந்த தீ விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ காரணமாக தொழிற்சாலையின் கட்டிடத்துக்கும், இயந்திரங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன் தயாரிக்கப்பட்டிருந்த பெருந்தொகை தேயிலையும் நாசமடைந்துள்ளது. இத் தீ விபத்து தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் புஸ்ஸலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் இல்லத்துக்கு தீ...

சேதப்படுத்தி,தீயிட்டு, சொத்துக்களை அழித்த சந்தேக நபர்களை கைது செய்வதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி இச் சம்பவம் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட காணொளிகள் மூலம் இந்த சேதத்தை ஏற்படுத்திய நபர்களை அடையாளம் காண வேண்டியது அவசியமாகவுள்ளது.

இதன் காரணமாக சரியான குற்றவாளிகளை அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அவர்களின் 14 புகைப்படங்கள் ஊடகங்களுக்கு பிரசுரிப்பதற்காக பொலிஸ்திணைக்களம் வழங்கியுள்ளது. இங்கு படங்களில் காணப்படும் இந்நபர்கள் தொடர்பாக ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் வட்ஸ்அப் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ அழைப்பை ஏற்படுத்தி அறியத் தருமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

தொலைபேசி இலக்கங்கள் : 071 8594950, 071 8594929, 011 – 2422176 என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## நீதிமன்ற வளாகத்தில்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஒரு வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த "பாஸ் பொட்டா" என அடையாளம் காணப்பட்ட நபர் உள்ளிட்ட குழுவினர் மீதே இனந்தெரியாத நபர்களால் இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் சிசு கொலை;

# DNA பரிசோதனையையடுத்து வைத்தியருக்கு எட்டாம் திகதிவரை விளக்கமறியல்

மட்டக்களப்பு றூப் நிருபர்

மட்டக்களப்பில் சிசு ஒன்று கொலை சம்பவம் தொடர்பில் குறித்த சிசு தனக்கு பிறந்த குழந்தை என்பதை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட வைத்தியரை எதிர்வரும் 8ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் வைத்தியர் ஒருவரின் வீட்டில் வேலைக்காரியாக கடமையாற்றி வந்த பெண் ஒருவருக்கு பிறந்த சிசு ஒன்றை கிணற்றில் வீசி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான மரபணு பரிசோதனையையடுத்து குழந்தை தனக்கு பிறந்தது என மறைத்த குற்றச்சாட்டின் பேரில் கண்டி வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரை திங்கட்கிழமை (25) கைது செய்ததாக மட்டு. தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் மேல்மாடி வீதியில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று தங்கியிருந்து கடமையாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் அவர் அம்பாறை மத்திய முகாமைச் சேர்ந்த 38 வயது பெண் ஒருவரை தனது வீட்டு வேலைக்கு அமர்த்திய நிலையில் 2017 மார்ச் 26 ம் திகதி குறித்த வேலைக்காரிக்கு ஆண்பிள்ளை ஒன்று பிறந்ததையடுத்து அதனை சீலையால் சுற்றி வீட்டின் கிணற்றில் வீசப்பட்டுள்ள நிலையில் வேலைக்காரிக்கு தொடர்ந்து இரத்த போக்கு காரணமாக மாச் 26ம் திகதி மட்டு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து மார்ச் 31 ம் திகதி தனது கிணற்றில் துர்நாற்றம் வீசுவதாகவும் தண்ணீரில் நாற்றம் வீதுவதாக பொலிசாருக்கு வைத்தியர் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிசார் கிணற்றை சோதனையிட்ட போது கிணற்றில் இருந்து சிசு ஒன்றை மீட்டதுடன் வேலைக்காரியை கைது செய்து விசாரணை செய்த போது குறித்த குழந்தை தனக்கும் வைத்தியருக்கும் பிறந்ததாகவும் வைத்தியர்தான் வீட்டில் மகப்பேற்றை நடாத்தியதாகவும் பின்னர் சிசுவை கிணற்றில் வீசியதாகவும் பொலிசாரின் விசாரணையில் தெரியவந்ததையடுத்து அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதேவேளை தனக்கும் இதற்கும் தொடர்பு இல்லை எனவும் குழந்தைக்கும் தொடர்பு இல்லை என வைத்தியர் தெரிவித்த நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய குழந்தையின் இரத்த மாதிரியும் வைத்தியரின் இரத்தமாதிரியையும் பெற்று அரச பகுப்பாய்வுக்கு மரபணு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த மரபணு பரிசோதனையில் குறித்த வைத்தியரின் இரத்த மாதிரியும் சிசுவின் இரத்த மாதிரியும் ஒன்று எனவும் வைத்தியருக்கு பிறந்த குழந்தை என பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட அறிக்கையை அரச பகுப்பாய்வு திணைக்களம் பொலிசாருக்கும் நீதிமன்றிற்கும் அனுப்பியுள்ளது.

இதனையடுத்து மட்டு பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பரிசோதகர் சந்திரகுமார தலைமையிலான பொலிசார் தொடர் விசாரணையில் திங்கட்கிழமை கண்டி வைத்தியசா்லையில் கடமையாற்றி வரும் குறித்த வைத்தியரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து தனக்கு பிறந்த குழந்தை என மறைத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்ததுடன் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த வேலைக்காரியான பெண் நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதுடன் ஏற்கனவே அவருடைய சகோதரியின் கணவருக்கு பிறந்த குழந்தையை கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து வழக்கு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காம ஆடிவேல் விழாவை முன்னிட்டு கல்முனை,கதிர்காமம் விசேட பஸ் சேவை

ஒலுவில் விசேட நிருபர்

கதிர்காம ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டி தினமும் காலை 08.00 மணிக்கு கல்முனையிலிருந்து கதிர்காமத்திற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, கல்முனை சாலை முகாமையாளர் வி. ஜௌபர் தெரிவித்தார்.

கதிர்காமத்திற்குச் செல்லும் பிரயாணிகள் முன்கூட்டியே ஆசன பதிவை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பஸ்ஸை முன் கூட்டியே குழுவாகப் பதிவு செய்தால் தனி பஸ்ஸை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கதிர்காமத்திலிருந்து கல்முனைக்கு கிரமமான முறையில் மாலை 04.00 மணிக்கு பஸ் சேவைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். நாளுக்கு நாள் பிரயாணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பஸ் சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமெனவும் கூறினார்.

தீர்த்தத்தில் கலந்துகொள்ளும் அடியார்களை அழைத்து வர கூடுதலான பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.அத்துடன் உகந்தைக்கான பஸ் சேவை நாளாந்தம் காலை 07.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை 04 பஸ்கள் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.


**உங்கள் வரிப்பணம் – நகரத்தின் அபிவிருத்திக்காக**

**இரத்தினபுரி மாநகர சபை**

**பங்களிப்பு வரவு- செலவு தயாரித்தல் - 2023**

**மக்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள்**

**அன்புள்ள பொது மக்களே, தொண்டர் ஏற்பாட்டாளர்களே**

2023ம் ஆண்டின் வரவு - செலவு ஆவணம் தயாரித்தல் தொடர்பாக இரத்தினபுரி மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும்/ செய்கை பண்ணும் உங்களது / உங்கள் ஏற்பாட்டில் இணைந்த அபிவிருத்தி கருத்துக்கள் 2022 ஆகஸ்ட் 15ம் திகதிக்கு முன் கீழ்காணும் முறைமைக்கு அமைய கிடைக்கப்பெறும் விதத்தில் தயாரிக்கும்படி அறியத்தருகிறேன்.

| நகர சபை வலயம் | அபிவிருத்தி கருத்துக்கள் | நன்மை பெறும் குடும்பங்கள் | மதிப்பீடு ரூபா. |
|---|---|---|---|
| | | | |

அபிவிருத்தி கருத்துக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**நகர சபை ஆணையாளர்**
**மாநகர சபை**
**இரத்தினபுரி**

**045-2222759**
**E-mail: Ratnapuramunicipalcouncil@gmail.com**


# அக்கரைப்பற்றில் QR –Code அடிப்படையில் பெற்றோல் விநியோகம்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

எரிசக்தி அமைச்சு அறிமுகப்படுத்திய தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தின் (QRcode) அடிப்படையில் அக்கரைப்பற்றில் எரிபொருள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸாரின் வழிநடத்தலில், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் இச்செயற்றிட்டம் மிகவும் நேர்த்தியான முறையில் இடம்பெற்றதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# கந்தளாயில் புகையிரதத்தில் மோதி யானை உயிரிழப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காட்டு யானையொன்று கடுகதி புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளதாக அக்கோபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற புகையிரதத்தில் அக்போபுர பகுதியில் வைத்து காட்டு யானை மோதுண்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்துள்ள யானைக்கு பன்னிரண்டு வயதிருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யானை மோதியதில் உடல் வேராக நசுங்கியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# குடாக்கரை பகுதியில் 05 மாதங்களின் பின் எரிவாயு விநியோகம்

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குடாக்கரை பகுதியில் சுமார் ஐந்து மாதங்களின் பின் சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

சமையல் எரிவாயுவானது நேற்று முன்தினம் (26) சீனக்குடா ,குடாக்கரை மைதானத்தில் வைத்து வழங்கப்பட்டன. தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் 5 மாதங்களின் பின்பே குறித்த பகுதிக்கு எரிவாயு விநியோகிக்கப்பட்டுள்ளது.

மே மாத மின்சார பட்டியலை மையமாக வைத்து எரிவாயு விநியோகிக்கப்பட்டது.மக்கள் நீண்ட வரிசையில் இருந்து இதனை பெற்றுச் சென்றனர்.


முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் மிரிஹான மற்றும் வெலிசறை வெளிநாட்டவர் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு வழங்குதல்**

**ஒப்பந்த இல.: DIE/PRO/03/2022/23**

1. மிரிஹான மற்றும் வெலிசறை தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடைபெறும்.
3. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது தொடர்பான மேலதிக விபரங்களை பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ''சுஹுருபாயா'', 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் வைத்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பரீட்சிக்க முடியும்.

   தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011 – 5329530, 011 – 5329535 தொலைநகல்: 011 - 2879091
4. மீளளிக்கப்படாத ஐயாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 5,500/-) கட்டணத்தைச் செலுத்தி எழுத்துமூல விண்ணப்பமொன்றை பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ''சுஹுருபாயா'', 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் 2022.07.28 ஆம் திகதி முதல் 2022.08.18 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்ய முடியும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை "Original" மற்றும் "Duplicate" என இரு பிரதிகளில் தயாரித்து 2022.08.18 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், ''சுஹுருபாயா'' 5 ஆம் மாடி, "B" பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவோ முடியும். விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் சமுகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
6. விலைகூறுவோரினால் கையளிக்கப்படுகின்ற விலைமனுவானது விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
7. எல்லா விலைமனுக்களும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் பந்தி 3.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு விலைமனு பிணைமுறியொன்றுடன் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், விலைமனு பிணைமுறியானது ரூபா நான்கு இலட்சம் (ரூ400,000/-) பெறுமதியைக் கொண்ட 2022.11.30 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியொன்றினால் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
8. விலைமனு முன் சந்திப்பொன்று 2022.08.08 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ''சுஹுருபாயா'', 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

**யூ.வி. சரத் ரூப்பசிறி**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**''சுஹுருபாயா'',**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.**



**இலங்கை துறைமுக அதிகார சபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/PT/6347(MP) | Hydraulic Cylinder for Steering of SHI RTGCS at ECT | 25,000.00 | 1,000.00 | 30-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6311(EL) | Spare Parts for the Stinis Spreaders at ECT | 50,000.00 | 1,000.00 | 30-08-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/09/031 | 05 (Nos) Portable Engine Generators | 30,000.00 | 1,000.00 | 18-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/09/018C | 121 (Nos) Desktop Computers | 195,500.00 | 3,500.00 | 18-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/03/051 | Bearing Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT – 06 Nos | 50,000.00 | 1,000.00 | 18-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/14/057 | 01 No. Power Transformer 33/11KV 2MVA | 65,000.00 | 1,000.00 | 18-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/021 | Ready Mixed Concrete – 30G | 80,000.00 | 1,000.00 | 18-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/13/21 | Disaster Recover (DR) System (Hardware) for Oracle E – Business Suite | 950,000.00 | 12,500.00 | 18-08-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஆகஸ்ட் 19ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. : 2381652, 2470443**

# நூற்றாண்டை அடைந்துள்ள அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

இலங்கை முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் மார்க்க அறிஞர்களினதும் துறை சார்ந்தவர்களினதும் வழிகாட்டல்களின் அடிப்படையிலேயே வாழ்ந்து வந்துள்ளனர். ஆரம்பத்தில் மார்க்க அறிஞர்கள் தத்தம் பிரதேசங்களில் தமக்கு மத்தியில் ஒன்றுபட்டு இலங்கை முஸ்லிம் சமூகத்தை மார்க்க ரீதியாக வழிநடாத்தி வந்தார்கள். இந்த வரிசையில் உலமாக்கள் அப்பணிகளை கட்டுக்கோப்புடன் மேற்கொள்வதற்கு காலியில் அமைந்துள்ள பஹ்ஜத்துல் இப்றாஹிமிய்யா அரபுக் கல்லூரியில் 1924 ஆம் ஆண்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மார்க்க அறிஞர்களால் உருவாக்கப்பட்டது.

## எம்மைப் பற்றி:

ஜம்இய்யா 2000 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. ஜம்இய்யாவின் குறிக்கோள்கள் தொலைநோக்கு கொண்டதோடு முஸ்லிம் சமூகத்திற்கும் தேசத்திற்கும் பங்களிப்புச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. தற்போது ஜம்இய்யா 24 மாவட்டங்களில் 163 கிளைகளைக் கொண்டுள்ளதுடன், 8000 க்கும் மேற்பட்ட மார்க்க அறிஞர்கள் ஜம்இய்யாவில் அங்கத்துவம் பெற்று உறுப்பினர்களாக உள்ளனர்.

ஜம்இய்யா அஹ்லுஸ்ஸ{ன்னா வல்ஜமாஅத் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இலங்கையில் அன்று முதல் இன்று வரை முஸ்லிம்கள் அஹ்லுஸ்ஸ{ன்னா வல்ஜமாஅத் கொள்கையையும் ஷாபிஈ மத்ஹபையும் பின்பற்றியவர்களாகவே இருந்து வந்துள்ளனர். அவ்வாறே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் மார்க்கத் தீர்ப்புக்களும் (ஃபத்வாக்களும்) வழிகாட்டல்களும் ஷாபிஈ மத்ஹபை அடிப்படையாகக் கொண்டவையாகவே அமையப்பெற்று வருகின்றன.மிக இக்கட்டான சூழ்நிலைகளில் மாத்திரம் ஹனபி, மாலிகி, ஹன்பலி ஆகிய உலக முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய மத்ஹப்களின் கருத்துக்களை உள்வாங்கும் பொழுது அவற்றுக்கான முறைகளைப் பேணியே ஜம்இய்யா செயலாற்றி வருகின்றது.

**சன்மார்க்க அறிஞர்களின் அமைப்பான ஜம்இய்யா சமூக தேசிய விவகாரங்களில் தனது முன்னெடுப்புக்களை மிகவும் நிதானமாகவும், துறைசார்ந்தவர்களின் வழிகாட்டலோடும் செய்து வரும் அரசியல் சார்பற்ற ஒரு நிறுவனமாகும். அவ்வப்போது ஆட்சிக்கு வருகின்றவர்களோடு இணைந்து நாட்டின் சுபீட்சத்திற்கு கைகொடுக்கும் ஜம்இய்யா நேரடி, மறைமுக எவ்வித அரசியல் விடயங்களிலும் ஈடுபடாத ஒரு நடுநிலையான அமைப்பாகும்**

## நோக்கு

இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் வாழுகின்ற, தீனின் மேம்பாட்டிற்கும் சமூகத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்ற ஒரு கட்டுக்கோப்பான முன்மாதிரி முஸ்லிம் சமூகத்தை நோக்கி.

## பணிக்கூற்று

முஸ்லிம் சமூகத்தின் எல்லா தரப்பினரையும் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஆன்மீக ரீதியாகவும் ஒழுக்க, பண்பாட்டு ரீதியாகவும் வழிகாட்டுவதும் சமூகத்தினதும் தேசத்தினதும் கல்வி, பொருளாதார, சமூக,கலாசார மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்வதும் சமூக ஒற்றுமையையும்; இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புதலும்.

## குறிக்கோள்கள்

- சமூகத்தின் எல்லா தரப்பினரையும் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஆன்மீக ரீதியாக வழிகாட்டுதல்.
- நல்லொழுக்கமும் பண்பாடுமுள்ள தனி மனிதர்களும் குடும்பங்களும் உருவாக உழைத்தல்.
- உலமாக்களினதும் இஸ்லாமிய கல்வியினதும் மேம்பாட்டிற்கு உழைத்தல்.
- சமூகத்தினதும் நாட்டினதும் கல்வி, சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்தல்.
- சமூக ஒற்றுமைக்காக உழைத்தல்.
- இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல்.
- ஜம்இய்யாவின் நோக்கங்களை அடைவதற்கு தேவையான எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

## விழுமியங்கள்

- இஸ்லாமிய அடிப்படையிலானவை
- தேசியம்
- நடுநிலை போக்கு
- இணக்கப்பாடு
- பன்மைத்துவம்

## தற்போதைய நிலை:

ஜம்இய்யா தனது சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக சில உப குழுக்களைக் கொண்டுள்ளது. இக்குழுக்களில் ஜம்இய்யாவின் மூத்த உறுப்பினர்கள் தன்னார்வலர்களாக ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் சேர்ந்து ஜம்இய்யாவின் ஊழியர்கள்,ஆலிம்கள் (மார்க்க அறிஞர்கள்) விவகாரங்கள், முஸ்லிம் சமூக விவகாரங்கள், பிரஜைகள் விவகாரங்கள் மற்றும் அரச நிறுவனங்களுடனும் அதிகாரிகளுடனும் தொடர்புகளை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பணியாற்றி வருகின்றனர்.

## ஜம்இய்யாவின் யாப்பு

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அதன் யாப்பை அடிப்படையாகக் கொண்டு தனது கருமங்களை செய்துவருகின்றது. அத்துடன் ஜம்இய்யா கால மாற்றத்திற்கேற்ப தனது சட்டயாப்பில் தேவையான திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்து வந்துள்ளது.

ஜம்இய்யாவின் மாவட்ட பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெறும் பொதுக் கூட்டங்களின் போதே திருத்தப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு சபையோரின் அங்கீகாரத்துடன் அவை நிறைவேற்றப்படுகின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள யாப்பு போலவே ஜம்இய்யத்துல் உலமா ஆரம்பம் தொட்டு தனக்கான பிரத்தியேக ஒரு யாப்பைக் கொண்டு சுயாதீனமாக இயங்குவதை இங்கு குறிப்பிடலாம். குறிப்பாக 1973 ஆம் ஆண்டு முன்னாள் தலைவர்களில் ஒருவரான அல் ஆலிம் எம்.ஐ.அப்துஸ் ஸமத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுடைய காலத்திலும் தனியான யாப்பு முறைகள் காணப்பட்டு அதன் பிரகாரமே ஜம்இய்யாவின் பணிகள் தொடரப்பட்டுள்ளன. 1996ஆம் ஆண்டு வெளியான சவ்த்துல் உலமா சஞ்சிகையில் ஜம்இய்யாவின் முன்னைய யாப்பு பிரசுரிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அதற்குப் பின்னர் யாப்பு கால ஓட்டத்தில் 2003, 2012, 2016, 2022 ஆகிய காலப்பகுதிகளில் ஜம்இய்யாவின் பொதுச் சபையில் திருத்தப்பட்டு அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## உறுப்புரிமை மற்றும் கட்டமைப்பு

ஜம்இய்யாவினால் அங்கீகரிக்கப்பட்ட அரபுக் கல்லூரி அல்லது ஜாமிஆவின் மௌலவி அல்லது ஆலிம் அல்லது அஷ்ஷைக் சான்றிதழ் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அல்ஆலிம் இறுதிப் பரீட்சையின் சான்றிதழ் வைத்திருக்கின்ற அல்லது ஜம்இய்யாவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகமொன்றில் அரபு மொழி மூலம் இஸ்லாமிய சன்மார்க்கத் துறையில் பட்டம் பெற்ற சகல முஸ்லிம் இலங்கைப் பிரஜைகளும் ஜம்இய்யாவில் அங்கத்துவம் வகிக்கலாம் என்பது ஜம்இய்யாவின் யாப்பாகும்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா நிறைவேற்றுக் குழு, மத்திய சபை, மாவட்டக் கிளை, பிரதேசக் கிளை ஆகிய பிரதான நான்கு மட்டங்களை கொண்டதாகும். இந்நான்கு மட்டங்களுக்குமான பணிகள் மற்றும் பொறுப்புக்கள் ஜம்இய்யாவின் யாப்பின் மூலம் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

## அரசியல் சார்பற்ற நிறுவனம்

சன்மார்க்க அறிஞர்களின் அமைப்பான ஜம்இய்யா சமூக தேசிய விவகாரங்களில் தனது முன்னெடுப்புக்களை மிகவும் நிதானமாகவும், துறைசார்ந்தவர்களின் வழிகாட்டலோடும் செய்து வரும் அரசியல் சார்பற்ற ஒரு நிறுவனமாகும். அவ்வப்போது ஆட்சிக்கு வருகின்றவர்களோடு இணைந்து நாட்டின் சுபீட்சத்திற்கு கைகொடுக்கும் ஜம்இய்யா நேரடி, மறைமுக எவ்வித அரசியல் விடயங்களிலும் ஈடுபடாத ஒரு நடுநிலையான அமைப்பாகும்.

ஜம்இய்யாவை நாடி வருகின்ற அரசியல் தலைவர்களுடன் திறந்த கலந்துரையாடல்களை கட்சி பேதமின்றி நடாத்துவதே ஜம்இய்யாவின் நிலைப்பாடாகும். இலங்கை மட்டுமல்லாது உலகின் பல்வேறுபட்ட அரசியல் தலைவர்கள் ஜம்இய்யாவை நாடிய போதெல்லாம் ஜம்இய்யா வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடி வந்துள்ளது. இன்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத்தலைவர்கள், ஏனைய முஸ்லிம்கள், மாற்று மதச் சகோதரர்கள் என ஜம்இய்யாவை அணுகி சந்திக்க சந்தர்ப்பம் கோருகின்ற அனைவருக்கும்; சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருகின்றது.

## ஜம்இய்யாவின் சேவைகள்:

**செயலகம்**

ஜம்இய்யாவின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படும் செயலகம், உத்தியோகப்பூர்வ தொடர்பாடல்கள், சட்ட நடவடிக்கைகள், ஊடக விவகாரங்கள், மூலோபாய திட்டமிடல், நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் ஜம்இய்யாவுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல் போன்ற செயலக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

**பிரிவு – 01:**

## மூலோபாய திட்டமிடல் மற்றும் கொள்கை மேம்பாடு

சமூகத்திற்கு பயனுள்ள, வினைத்திறன் மிக்க சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக ஜம்இய்யாவின் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதில் இப்பிரிவு கவனம் செலுத்துகின்றது. நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் , கையேடுகள் மற்றும் உள்ளக செயற்பாடுகளைத் தரப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால முடிவில் அவை இப்பிரிவினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

**பிரிவு – 02:**

## நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு

ஜம்இய்யாவின் மாதாந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள், மத்திய சபைக் கூட்டங்கள் மற்றும் ஏனைய விசேடக் கூட்டங்கள் போன்றவற்றை இப்பிரிவு ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்கின்றது.

**பிரிவு – 03:**

## உத்தியோகப்பூர்வ தொடர்பாடல்கள்

ஜம்இய்யாவின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் உத்தியோகப்பூர்வ அறிக்கைகள் மற்றும் கடிதப் பரிமாற்றங்கள் ஆகியவை இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**பிரிவு – 04:**

## சட்டம் மற்றும் ஆய்வு

சட்ட விடயங்கள் மற்றும் ஆய்வு செயற்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. தேவைப்படும் போதெல்லாம், ஆலோசனை பெறுவதற்காக இப்பிரிவு சட்ட ஆலோசகர்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்கின்றது.

**பிரிவு – 05:**

## ஜம்இய்யாவுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்தல்

சமூகத்திற்கும் நமது தாய்நாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் ஜம்இய்யாவுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நபர்களுடனும் அமைப்புக்களுடனும் உறவைக் கட்டியெழுப்புவதிலும் வளர்ப்பதிலும் இப்பிரிவு கவனம் செலுத்துகின்றது.




**பிரிவு – 06:**

## ஊடகம்

இஸ்லாமியப் போதனைகள் குறித்து முஸ்லிம்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதே வேளையில் ஊடக வெளியீடுகள் மூலம் தேசிய மற்றும் அன்றாட விவகாரங்களில் ஜம்இய்யாவின் நிலைப்பாட்டை மக்கள் மயப்படுத்தும் முக்கிய குறிக்கோளுடன் இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது. மேலும் இப்பிரிவு ஜம்இய்யாவின் செயற்பாடுகள் மற்றும் சேவைகளை பல்வேறு வழிமுறைகள் மூலம் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது.

**பிரிவு – 07:**

## கிளைகள் மற்றும் அங்கத்துவம்

கிளைகளின் தெரிவு மூன்று வருடத்திற்கொரு முறை நடைபெற்று புதிய பதவி தாங்குனர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**இப்பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு:**

- கிளைகளை மறுசீரமைத்தல்.
- ஃபத்வா பிரிவைத் தவிர்த்து, தலைமை அலுவலகத்தின் அனைத்து உப பிரிவுகளின் நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்துதல்.
- கிளைகளுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல்.
- ஒவ்வொரு கிளையின் செயற்திறன் மற்றும் சேவைத் தரங்களைக் கண்காணிப்பதோடு கிளைகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அங்கத்துவம் வழங்கும் விடயத்தை முழுமையாகக் கையாளுதல்.

## உப குழுக்கள் (உப பிரிவுகள்)

ஜம்இய்யாவுக்கு பின்வரும் உப குழுக்கள் காணப்படுகின்றன:

**ஆலிம்கள் விவகாரங்கள்**

1. ஆலிம்கள் விவகாரக் குழு
2. சமூக சேவைகள் குழு

**முஸ்லிம் சமூக விவகாரங்கள்**

3. ஃபத்வாக் குழு
4. பிறைக் குழு
5. கல்வி, ஆய்வு மற்றும் வெளியீட்டுக் குழு
6. தஃவா மற்றும் தர்பிய்யாவுக்கான குழு
7. மகளிர் விவகாரக் குழு

**பிரஜைகள் விவகாரங்கள்**

8. ஒற்றுமைக்கும் ஒருங்கிணைப்புக்குமான குழு

## ஆலிம்கள் விவகாரக் குழு

இக்குழு சமூகத்திற்குச் சேவையாற்றி வரும் மார்க்க அறிஞர்களின் நலன்கள் விடயத்தில் கூடிய கவனம் செலுத்துகின்றது. ஆலிம்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குவதை இக்குழு நோக்கமாகக் கொண்டுள்ளது:

- சம்பந்தப்பட்டவர்களுடன் இணைந்து மத்ரஸா கல்வி முறையை தரப்படுத்தல்.
- ஆலிம்களின் ஆன்மீக, கல்வி மற்றும் திறன் அபிவிருத்திக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல்.
- முஸ்லிம் சமூகத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு தகுதியான உலமாக்களை அடையாளம் கண்டு அவர்களை நிபுணத்துவத்தின் அடிப்படையில் வகைப்படுத்தி அவர்களை பயன்படுத்தல்.
- இஸ்லாமிய உயர்கல்வியைத் தொடர்வதற்கு உதவி செய்தல்.
- ஆலிம்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
- தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சிகளுடன் ஆலிம்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- மூத்த ஆலிம்களின் அர்ப்பணிப்புக்கள் மற்றும் சேவைகளை அடையாளம் கண்டு அவர்களைக் கௌரவித்தல்.

## சமூக சேவைகள் குழு

ஜம்இய்யாவின் சமூக சேவைக் குழு நிவாரண உதவிகள், சமூக சேவைகள் மற்றும் உளவள ஆலோசனை வழங்குதல் ஆகிய பகுதிகளில் கவனம் செலுத்துகின்றது. இக்குழு அனர்த்த முகாமைத்துவம், புனர்வாழ்வு போன்ற விடயங்களில் ஆலிம்களுக்கான பயிற்சிகளை ஜம்இய்யாவின் கிளைகள் ஊடாக வழங்க ஏற்பாடு செய்து வருகின்றது. முஸ்லிம்களுக்கு மாத்திரமின்றி மாற்று மதச் சகோதரர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் தன்னாலான உதவிகளை இக்குழு செய்து வருகின்றது.

சமூக சேவையில் குறித்த ஒரு விடயத்திற்காக சேகரிக்கப்பட்ட பணத்தில், அத்தேவை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மீதமாகும் தொகை வேறொரு சமூக சேவைக்காக செலவிடப்படும் என்ற கொள்கையை இக்குழு நடைமுறைபடுத்தி வருகின்றது.

## ஃபத்வாக் குழு

அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மார்க்க வழிகாட்டல்களை வழங்கும் அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனமாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இயங்கி வருகின்றது. வேறுபட்ட சிந்தனைகளைக் கொண்ட உலமாக்களிடையே கருத்தொற்றுமையை ஏற்படுத்தி மார்க்க வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் இப்பிரிவு செயற்பட்டு வருகின்றது. மக்களுக்கு சிக்கல்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் மார்க்க சட்டங்களை எளிமையாக்கி முன்வைப்பதும் அமைதி மற்றும் நல்லிணக்க வாழ்க்கை முறையை உருவாக்குவதும் ஃபத்வாவின் நோக்கமாகும். ஃபத்வாப் பிரிவினால் வெளியிடப்பட்ட ஃபத்வாக்களில் அதிகமானவை சமூக, பொருளாதார, தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கை மற்றும் அனந்தரச் சொத்துக்களுடன் சம்பந்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாளாந்தம் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும், எழுத்து மூலமும் ஃபத்வாக்கள் கேட்கப்படுகின்றன. மேலும், ஜம்இய்யாவின் காரியாலயத்துக்கு நேரடியாகவும் ஃபத்வாக்களை கேட்டு வருகின்றனர். இவ்வனைத்து கேள்விகளுக்கும் திறமையான மார்க்க அறிஞர்களினால் பதிலளிக்கப்படுகின்றது. பொதுவான கருத்து வேறுபாடற்ற விடயங்களுக்கு உடனடியாக பதில் அளிக்கப்படுவதுடன்,கலந்துரையாடப்பட வேண்டிய ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் மாதாந்தம் நடைபெறும் ஃபத்வாக் குழு அமர்வின் போது முன்வைக்கப்படுகின்றன.

## பிறைக் குழு

இஸ்லாமிய வழிகாட்டலுக்கமைய முக்கிய நிகழ்வுகளையும் நேரங்களையும் நிர்ணயிப்பதற்கு ஹிஜ்ரி கலண்டர் இன்றியமையாததாகும். ஹிஜ்ரி மாதங்களை நிர்ணயித்தல், தொழுகை நேரத்தை நிர்ணயித்தல் மற்றும் துல்லியமான கிப்லாவை அடையாளப்படுத்தல் ஆகிய பணிகளை இக்குழு மேற்கொண்டு வருகின்றது. சூரிய மற்றும் சந்திர கிரகணங்களைப் பற்றிய விழிப்புணர்வும் அச்சந்தர்ப்பத்திற்கான வழிகாட்டல்களும் இப்பிரிவுனூடாக வழங்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற பிறை மாதங்களை தீர்மானிப்பதற்கான முறைமைகளுக்கேற்ப நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள உப குழுக்களின் ஒத்துழைப்புடன் ஹிஜ்ரி மாதங்கள் முடிவு செய்யப்படுகின்றன. தலைப்பிறை தீர்மானம் சம்பந்தமான சர்ச்சைகளுக்கு தீர்வு காணும் பொறுப்பு கூட்டாகச் சென்று பிறை பார்க்கும் முறையை இக்குழு ஊக்குவித்து வருவதுடன், ஒவ்வொரு ஊரிலும் காணப்படும் ஜம்இய்யாவின் பிரதேசக் கிளைகளின் பிரதிநிதிகள் மஸ்ஜித் நிர்வாகிகள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டு கூட்டாக பிறை பார்ப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதோடு அதற்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிறை மாதங்களை தீர்மானிப்பதற்கான 05 அடிப்படைகளை மையமாகக் கொண்டு பிறை மாதம் தொடர்பான உத்தியோகப்பூர்வ தீர்மானத்தை கொழும்பு பெரிய பள்ளிவாயில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா ஆகியன இணைந்து மேற்கொள்கின்றன. பின்னர், இது பற்றி மக்களுக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படுகின்றது.

டிஜிட்டல் ஹிஜ்ரி கலண்டர் மின்னஞ்சல் மூலம் விநியோகிக்கப்பட்டு ஜம்இய்யாவின் உத்தியோகப்பூர்வ இணையதளத்திலும் பதிவேற்றப்படுகின்றது. மாதாந்த ஹிஜ்ரி நாட்காட்டியின் அச்சிடப்பட்ட பிரதிகள் வருடாந்த சந்தாதாரர்களுக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி முடிவு செய்யப்படும் கிப்லா திசை பல சந்தர்ப்பங்களில் தவறாக அமைவதால் அதனை முடிவு செய்வதற்கு சூரியனைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் இக்குழு கவனம் செலுத்தி வருகின்றது. இது தொடர்பில் பயிற்சிநெறிகள் ஜம்இய்யாவின் கிளைகள் ஊடாக தேவைக்கேற்ப நடாத்தப்பட்டு வருகின்றன.




**(தொடர் நாளைய பத்திரிகையில்)**

அகில இலங்கை
ஜம்இய்யத்துல் உலமா
செயலகம்

# அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனிதாபிமான உதவியே பேருதவியாகும்

**கண்டியில் சமூகச் செயற்பாட்டில் தனக்கென ஒரு தனி பெயரை பதித்தவர் தான் அல்ஹாஜ் என்.எம். எம். மன்சூர். இவர் கண்டி பள்ளிவாசல்களின் சம்மேளனம் மற்றும் பல்வேறு அமைப்புக்களில் பணியாற்றியவர். கொரோனாக் காலம் மற்றும் வெள்ள அனர்த்தங்களின் போது காலம் நேரம் பாராமல் மனிதாபிமான உதவிபுரிபவர். அத்தோடு சிரமதான பணிகளுக்கு பெரும் பங்காற்றியவர். இவரது சமூகப் பணியைப் பாராட்டி இலங்கை ஒலிரபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் விருது, சான்றிதழ் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப்பட்டவர். இவர் புட்லேண்ட குழமத்தின் உரிமையாளருமாவார். அத் துறையில் நீண்ட கால அனுபவம் உடையவர்.**

### ? உங்களுடைய ஆரம்ப கல்வி, வாழ்க்கை முறை பற்றிக் கூறுவீர்களா?

1957 ஆம் ஆண்டில் உக்குவளை அஜ்மீர் மகா வித்தியாலயத்தில் ஆரம்பம் முதல் க. பொ. த. சாதாரண தரம் வரை கற்றேன். இருந்த போதிலும் தொடர்ந்து படிக்க முடியாத பொருளாதார பிரச்சினை இருந்தது. பாடசாலையை விட்டு நின்று விட்டேன். இதன் பாரதூரம் எனக்கு விளங்கவில்லை.

### ? நீங்கள் அரபு மத்ரஸாக் கல்வியில் நாட்டம் கொண்டவராக இருந்தீர்கள்.அது பற்றிய சில குறிப்புக்கள்.

ஊரில் உள்ள பள்ளி குர்ஆன் மத்ராஸாவில் இரண்டு கிதாப்புகளை நிறைவு செய்திருந்தேன். அதனை தொடர்ச்சியாக ஓதிக்கொள்ள முடியவில்லை. பின்னர் பாணந்துறை தீனியாஸ் அரபுக் கல்லூரியில் சேர்த்து விட்டார்கள். அதில் பிரல்யமான மௌலவி அப்துல் ஸமது இருந்தார்கள். யாரோ ஒருவருடைய சிபாரிசுடன் இணைந்து கொண்டேன். அங்கு சென்று ஒரு வாரத்தில் எனக்கு சகயீனமில்லாமற் போயிற்று. எனக்கு இரவுத் தூக்கத்தில் வலிப்பு வரும். அங்கே இருந்தும் அனுப்பி விட்டார்கள். பின்னர் அந்த நோய் குணமாகிவிட்டது. அடுத்த வருடம் புத்தளம் ஹாசிமியா அரபுக் கல்லூரியில் இணைந்து கொண்டேன். அங்கும் ஆறு மாதம் தான் கற்றேன். தொடர்ந்து படிக்க வசதியில்லை.

வீடு வந்து சில மாதங்கள் சும்மா இருந்தேன். அடுத்து என்ன செய்வது என்ற போராட்டம் இருந்தது. அரபு மத்ரஸாக் கல்வியைத் தொடர வழியில்லை. பாடசாலைக் கல்வியைத் தொடர்வதற்கு வழியில்லை. இடைக்கிடையே கொஞ்சம் நண்பர்களோடு ஆலோசனை செய்தேன்.

### ? நீங்கள் எப்படி முதன் முதலில் வியாபாராத்துறைக்கு வருகின்றீர்கள்?

1969 இல் நான் என்னுடைய ஊரான உக்குவளையில் முதன் முதலில் கொள் முதல் கடை வியாபாரம் செய்தேன். அத்தொழில் வெற்றியளிக்கவில்லை. அது வாசனைத்திரவியங்கள் வாங்கி விற்பனை செய்யும் வியாபாரம் ஆகும். எனினும் எனக்கு தொழில் தெரியாது. அந்தளவுக்கு முதலும் போதாது. சிறிய வயதில் என்னுடைய உள்ளத்தில் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற இலட்சியம் இருந்தது. வெற்றி பெற வேண்டும். இதற்கு என்ன செய்ய வேண்டும். என்ற வினாவெல்லாம் மனதில் எழும். சிறிய வயதில் என்னுடைய மாமா ஒருவர் இருந்தார். அவரைப் பற்றிய கதைகளை தாயார் என்னிடம் நிறையக் கூறுவார். அவர் பெயர் அபுல் ஹசன். அவர் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். பின்னர் அவர் நிறைய செல்வங்களை தேடி தம் ஊரிலேயே ஒரு பெரிய மனிதரானார். வெள்ளைக்காரர்களிடமிருந்து பங்களாக்களை வாங்கியிருந்தார் எனக் கூறுவார். அவரால் முன்னேற முடியுமென்றால் என்னாலும் முன்னேற முடியும் தானே. அப்படியான ஒரு மன வேட்கை ஒன்று இருந்தது. நான் அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தேன்.

### ? அப்படியானால் உங்களுக்கு கிடைத்த வாய்ப்பு யாவை?

1970 களில் வாப்பா மரணம் அடைந்து விட்டார். புதிய அரசாங்கம் வந்திருந்தது. நாடும் ஊரும் பெரிய கஷ்டமான நிலையில் இருந்தது. என்னுடைய மச்சான் அவர்கள் நல்லதொரு வியாபாராத்தில் இருந்தவர். அவருடைய வியாபாரமும் வீழ்ந்துவிட்டது. அரிசி, மா, போன்றவற்றுக்கு தட்டுபாடுகள் நிலவின. என்னுடைய சகோதரர் பொலன்னறுவை கதுருவெலயில் உள்ள கரீம் பிடைவைக் கடையில் வேலைக்கு சேர்த்து விட்டார். ஆரம்ப சம்பளம் 60 ரூபா வாகும். விநியோக ஊழியராகவும், கணக்கு வழக்குப் பார்ப்பதற்காகவும் அந்த சம்பளம் வழங்கப்பட்டது. இங்கே உள்ள வாழ்க்கைச் சூழலுக்கும் அங்கே உள்ள சூழலுக்கும் ஒரு வித்தியாசம் நிலவியது. அங்கு சம்பாதிப்பதற்காக ஆட்கள் பஞ்சாகப் பறக்கிறார்கள். அங்கு அக்குறணை மக்களும் காத்தான்குடி மக்களும் மிகுந்த சுறுசுறுப்புடன் ஈடுபட்டதை கண்ணுற்றேன். இந்த வித்தியாசத்தை நான் உணர்ந்தேன். ஊரில் என்றால் சும்மா வீட்டுக்கு வீடு செல்வது, சும்மா கதைத்திருப்பதிலேதான் காலம் கழியும். தொழில்



பற்றி பெரிய விடயமாகப் பார்க்கப்படவில்லை. தொழில் இல்லாவிட்டாலும் திருமணத்தை முடித்துக்கொடுத்து விடுவார்கள். படிக்காமல் சும்மா இருப்பார்கள். என்னுடைய வகுப்பில் படித்தவர்களில் உயர் தகுதியுடையவர்கள் இல்லை. அக்காலத்தில் ஒரு படுமோசமான நிலைமை இருந்தது. அங்கு சென்று பார்த்தால் ஒரு வித்தியாசமான உலகம்;. உழைப்பு, கடும் முயற்சி அங்கு இருந்தது. என்னையும் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கடுமையாக உழைத்தேன்.

ஆடை கடையில் கடுமையாக உழைத்தேன். எந்தவொரு வேலையையும் என்னுடைய வேலை மாதிரித் தான் எடுத்துச் செய்தேன். நான் அவர்களிடம் கண்ட நல்ல பண்புதான் நேர்மைத் தன்மை.

இன்று நாம் சந்தை விநியோகத்திற்கான அறிவை பணம் கொடுத்து வர்த்தக தொழில் நுட்பவியலாளர்களின் செயலமர்வுகளில் கலந்து கொண்டு கற்றுக்கொள்ளுகின்றோம். ஆனால் அவர்களிடம் எந்தவிதமான பணமும் கொடுத்துப் படிக்க வேண்டிய அவசியமில்லை. இயல்பாகவே அவர்களிடத்தில் தாராளமானதாக கற்றுக் கொள்ளலாம். வியாபார தொழில் நுட்பங்கள் அவர்களிடத்தில் தாராளமாக இருந்தது. ஒரு பொருளை எப்படி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யலாம் என்று நன்கு கற்றுக் கொண்டேன்.

### ? நீங்கள் அவர்களிடம் விசேடமாக கற்றுக் கொண்ட விடயங்கள் என்ன?

நான் ஆரம்பத்தில் பொலன்னறுவை கதுருவெல நகரில் காத்தான்குடி கடையொன்றில் நின்றேன். முகாமைத்துவம் என்றால் எப்படிச் செய்வது என்பது பற்றி அவர்களிடம் தான் படித்தேன். ஒரு கணக்குப்பிள்ளை மாதிரி இருந்தேன். ஒரு கணக்கை சீர் செய்து விட்டு படுக்கும் போது இரவு 12.00 மணியாகும். ஒரு தடவை 50 சதம் குறைந்து விட்டது. காலையில் எழுந்து இந்தக் கணக்கை சீர் செய்து தருகிறேன் என்று முதலாளியிடம் கூறினேன். அவர் அதற்கு 'இப்பவே தேடி முடித்து விட்டுப் படுங்கோ நாளைக்கு நிம்மதியாக இருக்கலாம்' என்று கூறுவார். அவர் எப்படித் தேட வேண்டும் என்று சொல்லித் தருவார். அவர் சொல்லித் தந்தபடி பார்த்தால் அது சரியாக இருக்கும், அவர்களிடம் தான் முகாமைத்துவப் பயிற்சிகளையும், வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை எப்படி விற்பனை செய்வது என்பதை எல்லாம் முழுமையாகப் படித்துக் கொண்டேன்.

அத்தோடு என்னை ஒரு விநியோகஸ்தராக நியமனம் செய்தார்கள். சப்பாத்து போன்றவற்றை விநியோகம் செய்வதற்காக கிழக்கு மாகாணம் முழுக்க செல்வேன். ஒரு பொருளை விற்பனை செய்வதில் எங்களுடைய முதலாளி சஹாப்தீன் கெட்டிக்காரர், அவரிடம் தன் நம்பிக்கை இருந்தது. எந்தப் பொருளையும் விற்பனை செய்ய இயலாது என்ற அகராதி அவரிடத்தில் காணப்படவில்லை. அவர் எந்தளவுக்கு தன்நம்பிக்கையோடு வியாபாரம் செய்வார். இத்தகைய அனுபவங்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

### ? வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பற்றி கூறுவீர்களா?

1977 இல் ஈரான் நாட்டுக்குச் சென்றேன்.அங்கு இரண்டு வருடம் வேலை செய்தேன்.அப்பொழுது அந்நாட்டு மன்னர் ஷா அவர்களுக்கு எதிரான கிளர்ச்சி உருவானது. பின்னர் இலங்கைக்கு வந்தேன். 1980 களில் ஊரிலே திருமணம் முடித்தேன்.

### ? வெளிநாட்டுப் பயணத்திற்குப் பின்பு நீங்கள் முன்னெடுத்த முயற்சிகள் பற்றி...

வெளிநாட்டில் இருந்து வரும் போது 50,000 ரூபாய் பணம் கொண்டு வந்தேன். அதை வைத்து கார் ஒன்றை இறக்குமதி செய்தேன். அந்த காரின் பெயர் ஹொன்டாஸ் சிவிக். அதன் விலை 38,000 ரூபாய் ஆகும். மிகுதிப் பணத்தை வைத்து மாத்தளையில் டைலரிங் கடையொன்றைத் திறந்தேன். 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் அது எரிந்து விட்டது. பக்கத்தில் தமிழ் கடை இருந்தது. அதனுடன் சேர்ந்து இதுவும் எரிந்து விட்டது. ஒரு சதம் இல்லாமல் வீட்டுக்கு வந்தேன். என்னிடம் 50 ரூபா பணம் இருந்தது பொலன்னறுவையில் விவசாயத் திணைக்களத்தில் பணி புரியும் ஒரு சிங்கள நபர் என்னிடம் வந்து பணம் கேட்டார். ஜுலைக் கலவரம் 23 நடந்தது. அவர் 25ம் திகதி வந்து என்னிடம் பணம் கேட்கிறார். கையில் இருந்த 50 ரூபாவும் எனக்கு உரித்தானது அல்ல என யோசித்து 50 ரூபாவையும் அவரிடம் ஒப்படைத்து விட்டேன். எப்படியும் ஒரு வருடம் காலத்தை ஓட்டினேன். மூத்தமகள் சமீமாவும் மகன் சப்ரஸும் பிறந்து இருந்தார்கள். அப்பொழுது வீட்டு விவகாரங்கள் எல்லாம் என்னுடைய மாமி மாமா கவனித்தார்கள்.

நான் மீண்டும் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் பல பயிற்சி நெறிகள் கற்றுக் கொண்டேன். எயடிக்கட்டிங் பயிற்சி நெறியை முடித்து ஒரு டிப்ளோமா சான்றிதழைப் பெற்றேன். டெலஸ் ஒப்பரேட்டர் பயிற்சியைப் பெற்றேன். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் தகவல்களை அறிந்து படித்தேன்.

### ? உங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டது தொடர்பாக சிறு விளம்பரம்

ஒரு இக்கட்டான காலத்தில் நாணா பொலான்னறுவைக்கு அரிசி வியாபாரம் செய்யலாம் என்று அழைத்தார். அரிசி ஆலைகளில் அரிசிகளை வாங்கி கண்டி,



மாத்தளை, நாவலப்பிடிய போன்ற இடங்களிலுள்ள கடைகளுக்கு விற்பனை செய்தேன். கதுருவெலை கடையில் இருந்த அனுபவம் இதற்கு உதவியாக இருந்தது.

1989 இல் ஜே.வி.பி பிரச்சினை தோற்றம் பெற்றது. இந்த வியாபாரத்திற்கு தடையை ஏற்படுத்தினார்கள். அவர்கள். அரிசிகளை அங்குமிங்கும் எடுத்துச் செல்லக் கூடாது என்று தடை விதித்திருந்தார்கள். அரிசி லொறிகளை அரிசியோடு சேர்த்து எரித்தார்கள். நாங்கள் இரு அரிசி ஆலைகள் குத்தகைக்கு எடுத்திருந்தோம். மேலதிகமாக ஏனைய அரிசி ஆலைகளிலும் வாங்கி வந்து விற்பனை செய்வோம். இவை எல்லாம் நின்று போனது. அதில் 20 இலட்சம் ரூபா மட்டில் நஷ்டம் அடைந்தோம்.

1990 களுக்கு பின்னர் அரிசி வியாபாரம் செய்ய முடியாது என்று நாணா சொன்னார். கதுருவெலயில் ஹோட்டல் ஒன்றை செய்து கொண்டிருந்தார். அந்த ஹோட்டலை எனக்கு எடுத்துச் செய்யும்படி கூறினார். இரண்டு வருடம் கடையைச் செய்தேன். அக்கால கட்டம் பயங்கரவாதப் பிரச்சினை ஒரு பக்கம் மறுபக்கம் ஜே.விபி பிரச்சினைகள். மட்டக்களப்புக்கு வாகனங்கள் செல்வதாக இருந்தால் கருதுவலையில் தரித்துத் தான் செல்ல வேண்டும். அக்கால கட்டத்தில் தமிழ் பயங்கரவாதிகளால் ஏறாவூர் சாதாம் ஹுஸைன் கிராமம் தாக்கப்பட்டது. கதுருவெலைக்கு ஏறாவூர் சதாம் ஹுஸைன் கிராம மக்கள் 12,000 பேர் அகதிகளாக வந்து இருந்தார்கள். அவ்வளவு அகதிகளையும் பராமரிக்கும் வேலையை நாங்கள் பொறுப்பெடுத்து இருந்தோம். கொழும்பில் டொமினிக்கன் குடியரசின் தூதுவர் அமீர் மற்றும் அலி சாஹிர் மௌலானா இணைந்து இம்மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் அனுப்புவார்கள். அகதிகளாக வந்தவர்கள் போகும் வரை கவனித்து கொண்டோம். கொழும்பில் இருந்து என்ன தேவையென்று தொலைபேசி அழைப்பு வந்து கொண்டே இருக்கும். அடிக்கடி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா வருவார். அகதி முகாம்களை பார்வையிடுவார். இப்படி சமூகப் பணிகளிலும் ஈடுபடத் தொடங்கினேன்.

### ? உங்கள் சமூகப் பணி தொடர்பில்,...

ஆரம்பகாலத்தில் ஊரில் ஜமாத்தே இஸ்லாமிய எனும் சமூக சேவை நிறுவனத்தில் நான் ஓர் அங்கத்தவர்.அசாட் மாஸ்டர் மிக நல்ல சமூக சேவையாளர். அவர்தான் இவ்வாறான சமூகப் பணிகளைச் செய்வதற்கு பயிற்று வித்தவர். ஜே.வி.பி.பிரச்சினை காலத்தில் அரிசி தட்டுப்பாடு நிலவியது. அப்பொழுது எந்த விதமான இலாபமுமின்றி கொள்முதல் விலைக்கே அரிசி விற்பனை செய்தோம். இதனை சிங்கள ஊர்களுக்குச் சென்று 12 ரூபாவுக்கு குறைத்துக் கொடுத்தோம்.

### ? எவ்வாறு சவால்களை எதிர் கொண்டு வியாபாரம் செய்தீர்கள்?

வரகாப்பொல, நுவரெலியா, கண்டி போன்ற பல இடங்களில் கிளைகளை ஸ்தாபித்து செய்து வருகின்றேன். இதில் வரகாப்பொல உணவகத்தை முதலில் தெரிவு செய்தமைக்கான காரணம் என்னவென்றால் கொழும்பில் இருந்து வரக்காப்பொலவுக்கு 57 கிலோ மீட்டர். கண்டியில் இருந்தும் 57 கிலோ மீட்டர் ஆகும். இது ஒருமையப்பகுதியில் அமைந்துள்ளது. 1994களில் யட்டிநுவர வீதியில் ஒன்று திறந்து செய்தேன். 2010 இல் கண்டி தலதா வீதியில் உள்ள வைட் ஹவுஸ் எடுத்து செய்தேன். இந்த ஹோட்டலை எல்லா ஹோட்டலையும் விட உயர் தரத்தில் செய்தேன்.

யுத்தம் நிறைவு பெற்றமையினால் அதிகளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்தார்கள். இந்த இடத்தை 10 வருடம் வாடகைக்கு எடுத்தோம். எனினும் ஹோட்டல் உரிமையாளர் இடையில் இறந்து போனார். அவர்களுடைய பிள்ளைகள் குறித்த கால எல்லைக்கு முன் கூட்டியே ஹோட்டலை திருப்பி கேட்டார்கள். அதனை மீளக் கொடுக்க நேர்ந்தது. 2017 இல் மீளவும் திருப்பி கொடுத்து விட்டோம். அதே தலதா வீதியில் அக்கடைக்கு சற்று முன்னால் ஒரு ஹோட்டலை எடுத்துச் செய்தேன். அக்கால கட்டத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பம் நடந்தது. அந்த சம்பவத்தோடு வியாபாரங்கள் அப்படியே திடீரென விழுந்தன. இதில் நஷ்டம் அடைந்தோம். இடத்தின் சொந்தக்காரருக்கே திரும்பி கடையை ஒப்படைத்தேன். எல்லாம் பொருட்களையும் அவருக்கே ஒப்படைத்தோம். அவரே எடுத்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கொரோனா நெருக்கடி, கேஸ் சிலிண்டர் இல்லாப் பிரச்சினை. மின்சாரம் இல்லாப் பிரச்சினை. இப்படி அடுத்தடுத்து வியாபார முன்னெடுப்புக்கு பெரும் தடையாக இருந்தது. எவ்வாறாயினும் இப்படியான சவால்களை எதிர் நோக்கிக் கொண்டு தான் வியாபாராத்தைச் செய்ய வேண்டும். அடுத்த கட்டம் என்ன செய்யலாம் என்ற யோசனையோடுதான் பயணம் செய்கின்றேன். வியாபாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் வருவது சகஜம். அவற்றை எதிர் கொண்டு வெற்றியடைவதில் தான் விமோசனம் இருக்கிறது.

### ? நீங்கள் ஒவ்வொரு நோன்பு காலத்திலும் உலருணவு கொடுத்து வருகின்றீர்கள். அதனைத் தொடர்ந்து செய்வதற்கான காரணம் என்ன,

நான் அது பற்றி கதை ஒன்று எழுதியுள்ளேன். அது உண்மையிலே கதையல்ல நிஜம். இக்கதையை எழுதுவதற்கு கொரோனா காலத்தில் எனக்கு நேரம் இருந்தது. எனக்கு ஏழு எட்டு வயது இருக்கும். 1960 இல் வாப்பா கொழும்பில் வேலை செய்தார். நாளை நோன்பு என்றால் வாப்பா இன்று 8.00 மணி புகையிரத வண்டியில் வர வேண்டும். உம்மா பிறையைப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறை பார்த்து பிறை தெரிந்தால் எங்கள் வீட்டில் அன்றைய நோன்பைப் பிடிப்பதற்கான வசதிகள் ஒன்றும் இல்லை. வாப்பா வந்தால் தான் எங்களுக்கு நோன்பு பிடிக்கலாம். இத்தருணத்தில் உம்மாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டு அடிப்படியே நான் இருந்தேன்.

நாங்கள் புகையிரத வண்டி செல்லும் பாதைக்கு மேலேதான் வீடும் இருந்தது. உம்மா கூறினார். மாமாவின் கார் வந்தது. மாமா மகன் இறங்கி வந்தார். வாப்பா வந்து விட்டாரா என்று கேட்டார். இல்லை நாங்கள் அவர் வரும் வரையிலும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று கூறினார் உம்மா, பத்து ரூபா பணம் உம்மாவின் கையில் கொடுத்து விட்டுச் சென்றார். உம்மாவின் முகம் நன்கு செழிப்பாக இருந்தது. அந்தக் காட்சி அப்படியே மனக் கண் முன் எப்பொழுதும் தோன்றும். இப்பவும் அந்த காட்சி என் மனக்கண் முன்தோன்றும். என் உம்மா இப்படியான ஒரு வறுமை நிலையில் இருந்தார். இவ்வாறானவர்கள் எம் மத்தியில் எவ்வளவு பேர் இருப்பார்கள். என் மாமாவின் மகன் வந்து உம்மாவுக்கு உதவி செய்த மாதிரி உதவினால் தானே இல்லாதவர்களுக்கு உதவிகள் கிடைக்கும்.

இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தேன். அன்றிலிருந்து உலருணவுப் பொதிகளை தலை நோன்புக்கு விநியோகம் செய்ய ஆரம்பித்தேன். ஒவ்வொரு வருடமாக கூட்டிக் கொண்டு வந்தேன். அதன் பின்பு எனக்கு தெரிந்த நண்பர்களிடம் கூறினேன், அவர்களிடமிருந்து பெருந் தொகையான உலருணவுப் பொதிகள் ஒவ்வொரு வருடங்களும் கிடைத்தன. மிலானோ உரிமையாளர் 200 பொதிகள் தருவார். மாத்தளை, கண்டி, கம்பிளை, மஹிய்யாவை போன்ற பல்வேறு பகுதிகளுக்கு விநியோகம் செய்தேன்.

இப்படி வழங்கி வரும் சமயத்தில் கொரோனா காலத்தில் வழக்கம் போன்று எனக்கு உணவுப்பொதிகள் தருபவர்கள் நிறுத்தி விட்டார்கள். அது பற்றி குடும்பத்தவர்களிடம் கதைத்தேன். அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு தொகை உலருணவுப் பொதிகள் வழங்குவதற்கு உதவி செய்ய முன்வந்தார்கள்.இப்படியாக மொத்தமாக 11,75,000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்க கிடைத்தன. எவ்வளவுதான் சவால்கள் இருந்தாலும் நான் மரணம் அடையும் வரையிலும் கொடுக்க வேண்டும் என்று உறுதியான நம்பிக்கையோடு இருக்கிறேன்.

### ? நீங்கள் வேறு சமூக அமைப்புக்களில் பொறுப்புவாய்ந்த பணிகளில் செயற்படுவது பற்றி

நான் கண்டி மாட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் செயலாளராக இயங்கி வருகிறேன். பள்ளியை கட்டுவது நோக்கமல்ல. மக்களை வாழ வைக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவேன். அதற்கு இணங்க பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஒவ்வொரு ஊர்களிலும் தேவையுள்ள மக்களின் குறைகளை கண்டறிந்து சேவையாற்றி வருகின்றது.

நம்மால் செய்ய முடியாவிட்டாலும் எல்லாப் பள்ளிவாசல்களிலுள்ள நிர்வாக சபை உறுப்பினர்களையும் அழைத்து அந்தந்தப் பிரதேசங்களிலும் மேற்கொள்ள வேண்டும் என்று வழிகாட்டுதல்கள் செய்தோம். அந்த வகையில் எல்லாப் பள்ளிவாசல்களிலும் திறன்படச் செய்தார்கள். கொரோனா கால நிவாரண உலருவுணப் பொதிகளை வழங்கி வைத்தோம்.

2016 இல் இரத்தினபுரி பகுதியில் பாரிய வெள்ளம் அனர்த்தம் ஏற்பட்டது. அவிசாவெலை, எஹலிய கொடையில் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருந்தது. வேறு அமைப்புக்களிலும் முக்கிய பதவிகளில் இருந்து கொண்டு வீடு வசதிகள் இல்லாதவர்களுக்கு உதவிகள் செய்தல், வீடுகள் வாங்கிக் கொடுத்தல், திருத்தியமைத்தல், தண்ணீர், மின்சாரம் போன்ற முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றேன். இது வரையிலும் 15 வீடுகள் செய்து கையளித்துள்ளோம். தேவைக்கு ஏற்ப உதவிகள் செய்து வருகின்றோம்.

வெள்ளத்தால் இரத்தினபுரி மக்கள் கடும் பாதிப்புற்று இருந்தனர். அக்குறணை, உக்குவளை மக்களை அழைத்துச் சென்று அங்கு இருநாள் பொதுச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளேன். எஹலியகொடையில் ஒரு சிங்களப் பாடசாலையை சுத்தம் செய்து கொடுத்தோம். அப்பாடசாலைக்கு ஐந்து அடி உயரத்திற்கு வெள்ளம் வந்திருந்தது. பாடசாலையை தொடங்க முடியாது சிங்கள மக்கள் இருந்தனர். நாங்கள் எல்லோரும் அரை நாள் சிரமதானம் செய்தோம். அதுவும் நாங்கள் நோன்போடுதான் இந்த சிரமதானத்தைச் செய்தோம்.

நான் சிவில் சமூக அமைப்போடு சேர்ந்து செயலாற்றியுள்ளேன். தனிப்பட்ட ரீதியாக சமூக சேவைகள் செய்துள்ளேன். வாசிப்பில் அதிகம் ஆர்வம் இருக்கிறது. அதனால் தான் 2000க்கும் மேற்பட்ட புத்தகங்களை வாங்கி வைத்துள்ளேன் என்றார்.

இக்பால் அலி

## ஆடி அமாவாசை திருவிழா இறுவெட்டு வெளியீடு



*கல்லடி குறுப், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்*

மட்டக்களப்பு, அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ்வர பெருமான் மேல் பாடப்பட்ட ஆடி அமாவாசை திருவிழா இறுவெட்டு வெளியீடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற மட்டக்களப்பு, அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் மீது மட்டக்களப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாக கொண்ட உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன், அவர்களின் பாடல் வரிகளுக்கு தழிழிசை வேங்கை ரீ.எல்.மகராஜன் இசையமைத்துப் பாடப்பட்ட ஆடி அமாவாசை திருவிழா இறுவெட்டு வெளியீட்டு நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலந்துகொண்டு இறுவெட்டினை வெளியிட்டு வைத்தார்.

அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் ஆலய வண்ணக்கர் தி.விக்கிரமன் தலைமையில் இடம்பெற்ற இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியதனைத் தொடர்ந்து, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதம குரு ஆதி சௌந்தராஜ குருக்களின் ஆசியுரையுடன் இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

## சிறுபோக வேளான்மை அறுவடை செய்வதற்கு எரிபொருள் விநியோகம்

*ஒலுவில் விசேட நிருபர்*

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சிறுபோக வேளான்மை அறுவடை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அடிப்படையில் வேளாண்மை அறுவடை இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட விவசாய காணிகளில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை செய்வதற்கு அறுவடை இயந்திரங்களுக்கும், அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொண்டு செல்வதற்கான உழவு இயந்திரங்களுக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் அறிவுறுத்தலுக்கமைய பிராந்திய விவசாயிகளுக்கு எரிபொருள் பங்கீட்டு அட்டை எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அட்டாளைச்சேனை, பாலமுனை ஆகிய கமநல சேவை மத்திய நிலையத்திற்குட்பட்ட சுமார் 07 ஆயிரம் ஏக்கர் காணிகளில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.அஸ்ரப் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு இல்லாமல் நெல் அறுவடை சீராக நடைபெற வேண்டுமென்பதற்காக சகல விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 20 லீட்டர் டீசல் கிரமமான முறையில் வழங்குவதற்கு எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# இலங்கை கட்டளைகள் நிறுவனம் (இ க நி)

பாதுகாப்பு அமைச்சின் கீழானது

## 2022/2023 ஆம் ஆண்டுகளுக்காக குழும (Pool) போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக்களுக்கான அழைப்பு

பின்வரும் பிரயாண வழிகளில் இகநி ஊழியர்களுக்காக வேன்களினால் குழும போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக, ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்வதற்காக இகநி முன்வைப்புக்களை அழைக்கின்றது.

ஒன்பது பிரயாண வழிகளுக்காக வேன்களின் ஆகக் குறைந்த ஆசன வசதி கீழே வழங்கப்பட்டுள்ளது.

1. பிரயாண வழி 1 - பாணந்துறையிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 06
2. பிரயாண வழி 2 - மத்தேகொடவிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 08
3. பிரயாண வழி 3 - ஹன்வெல்லயிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 04
4. பிரயாண வழி 4 - பயாகலவிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 07
5. பிரயாண வழி 5 - ஹோமாகமவிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 06
6. பிரயாண வழி 6 - மல்வத்து-ஹிரிபிட்டியவிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 12
7. பிரயாண வழி 7 - தேவாலபொலவிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 11
8. பிரயாண வழி 8 - ஆண்டியம்பலமவிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 14
9. பிரயாண வழி 9 - ஹொரணவிலிருந்து இகநி அலுவலகத்திற்கு - 08

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரயாண வழியிலும் இரு பிரயாணங்கள் (காலை மற்றும் மாலை) நடாத்தப்படல் வேண்டும்.

2022.08.22 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 இலங்கை ரூபா + பெசேவ 12% ஐ செலுத்திய பின்னர், இலங்கை கட்டளைகள் நிறுவன நிருவாகத்திற்கான பணிப்பாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2005.01.01 ஆம் திகதிக்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட இரட்டை வளிச்சீராக்கல் (Dual A/C) வேன்கள் பரிசீலனை செய்யப்படும். விலைமனுதாரரானவர் மேலே குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரயாண வழிகளுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம். விலைமனுக்கோரல்கள் 2022.08.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா பிரதேசம்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**

**தொலைபேசி: 0112 671567-72.**

---

# பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - களுத்துறை

## கேள்விக்கான அழைப்பு

01. களுத்துறை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| கேள்வித் தொடர் இலக்கம் | கேள்வியின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| RDHSK/ Pro/2/2022/34 | Supply, Delivery, Installation and Commissioning of Air Condition Machines | 2,000.00 | 75,000.00 |
| RDHSK/ Pro/2/2022/35 | Supply, Delivery and Installation of Servers | 2,000.00 | 45,000.00 |
| RDHSK/ Pro/2/2022/36 | Supply, Delivery, Installation and Commissioning of Public addressing System | 2,000.00 | 22,500.00 |
| RDHSK/ Pro/2/2022/37 | Supply and Delivery of Fork Lift | 2,000.00 | 30,000.00 |
| RDHSK/ Pro/2/2022/38 | Supply and Delivery of Furniture | 2,000.00 | 75,000.00 |
| RDHSK/GB/ Gen/2022/02 | Maintenance of Generators | 2,000.00 | 30,000.00 |

02. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் நடத்தப்படும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை த.பெ. 29, கச்சேரி கட்டிடத்தொகுதி 4ஆம் மாடி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையிலிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு செலுத்திய பின்பு 2022.07.28 முதல் 2022.08.15ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கொள்வனவு செய்யலாம்.

04. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், களுத்துறை பெயரில் 2022.11.30ம் திகதி வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கியிலியிருந்து மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்குச் சமமான கேள்விப் பிணையொன்றைப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு, வேறுவேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு பொறியிடப்பட்ட உறையொன்றில் இட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வி தொடர் இலக்கம் மற்றும் கேள்விப் பெயரைக் குறிப்பிட்டு 2022.08.16 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.

06. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்களை கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. மேலதிக விபரங்களுக்கு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 034-2222610, 034-2222367 ஐ அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**களுத்துறை.**

---

# மத்திய சுற்றாடல் அதிகார சபை

தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ உபபிரிவு (2) இன் கீழான அறிவித்தல்

**முன்மொழியப்பட்ட தூரியன் வளர்ப்பு திட்டம், நாகஸ்தென்ன தோட்டம், யட்டியாந்தோட்டை**

## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம.) அறிக்கை

மத்திய சுற்றாடல் அதிகார சபையினது 1988ம் ஆண்டின் 56ம் இலக்க மற்றும் 2000மாம் ஆண்டின் 53ம் இலக்க சட்டங்களால் திருத்தி அமைக்கப்பட்டவாறு 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 வ(1) ற்கு அமைவாக இல. 3A, ஹத்துவ தோட்டம், ரன்வாலா, மீதிரிகலவில் அமைந்துள்ள நெல்னா அக்கிரி டெவலப்மன்ட் (தனியார்) நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட தூரியன் வளர்ப்புத் திட்டம், நாகஸ்தென்ன தோட்டம், யட்டியாந்தோட்டை செயல்திட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம.) அறிக்கையானது பின்வரும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை 30 நாட்களுக்கு பொதுமக்களின் பார்வைக்காக (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொதுவிடுமுறை நாட்கள் தவிர) பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து வைக்கப்பட்டுள்ளது.

1. பிரதேச செயலகம்/யட்டியாந்தோட்டை பஸ்பகே கோறளை
2. பிரதேச சபை யட்டியாந்தோட்டை பஸ்பகே கோறளை
3. மத்திய மாகாண அலுவலகம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை/டாம் வீதி, பொல்கொல்லை.
4. கேகாலை மாவட்ட அலுவலகம்/மத்திய சுற்றாடல் அதிகாரசபை/இல. 54/7, ஆல்பர்ட் செனவிரத்தின மாவத்தை, கேகாலை.
5. தேசிய சுற்றாடல் தகவல் மையம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, "பரிசரபியச", 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
6. இணையம்: www.cea.lk

பொதுமக்கள் எவரேனும் இவ்விளம்பர திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது கருத்துக்களை பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை,**
**"பரிசரபியச",**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

# வர்த்தக அமைச்சு

## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

### அத்தியாவசிய பாவனை உணவுப் பொருட்கள் மற்றும் பொதியிடப்பட்ட பொருட்களின் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022 டிசம்பர் 31 வரை கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு தேவையான பாவனை உணவுப் பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களின் வழங்குநர்களிடமிருந்து பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு ரூ. 5000/- தொகையைச் செலுத்தி, விண்ணப்பங்களை, கொழும்பு - 02, வொக்ஷோல் வீதி, இல. 27 எனுமிடத்தில் தலைமையகத்தின் 07ஆம் மாடியில் பெறுகைப் பிரிவிலிருந்து வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கீழ்க்காணும் தொ.பே. இலக்கத்தின் ஊடாக ச.தோ.ச சேவைப் பிரிவினை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே. இலக்கம்: 0112435554/ 0112337549**
**பெக்ஸ் இலக்கம்: 0112435554**

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்**
**புதிய செயலக கட்டிடம்**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**

---




---

# இலங்கை வங்கி

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2022.06.02ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஆர்.டி சில்வா அத்தாட்சிப்படுத்திய 2016.03.11 ஆம் திகதியிட்ட 4868 எனும் இலக்கத்தினையுடைய ஈட்டுமுறியின் பேரில் இல. 545 B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட கொலனியல் இலக்ரிகல் தனியார் நிறுவனம் பெற்றுக்கொண்ட நிரந்தர மேலதிகப் பற்று 9,000,000.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் ரூபாய் மட்டும்) வசதியின் மீது 2022.04.29 வரையான வட்டியும் முதலுமாக 13,345,212.32 (பதின்மூன்று மில்லியன் முன்னூற்று நாற்பத்து ஐயாயிரத்து இருநூற்று பன்னிரண்டு ரூபாய் முப்பத்திரண்டு சதம் மட்டும்) ரூபாயும் குறித்த நிரந்தர மேலதிகப் பற்று வசதி 9,000,000.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் ரூபாய் மட்டும்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு இருபத்து ஐந்து தசம் இரண்டு ஐந்து (25.25%) என்ற வீதத்தில் 2022.04.30ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை திரட்டப்பட வேண்டிய வட்டியும் வங்கிக்கு நிலுவையாக உள்ளது.
2. மேற்குறிப்பிட்ட 4868 எனும் இலக்கத்தினையுடைய ஈட்டுமுறியின் பேரில் நிலுவையாகவுள்ள 13,345,212.32 (பதின்மூன்று மில்லியன் முன்னூற்று நாற்பத்து ஐயாயிரத்து இருநூற்று பன்னிரண்டு ரூபாய் முப்பத்திரண்டு சதம் மட்டும்) ரூபாயையும் 2022.04.29 ஆம் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரீ.துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கேற்ப இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பெருநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வைப் பிரிவின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகர எல்லையினுள் வெள்ளவத்தை தெற்கு 7ஆம் இலக்க வட்டாரம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வெள்ளவத்தை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 30-1/3 விவேகானந்தா வீதி, வெள்ளவத்தை என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் வசிப்பறை, உணவருந்தும் அறை, படுக்கையறை, சமையலறை, சரக்கறை, கழிவறை மாடிமுகப்பு மற்றும் உள் முற்றம் ஆகியவற்றுடன் முதலாம் தளம், (2ஆம் மாடி) விவேகானந்தா வீதியுடன் வெள்ளவத்தையில் அமைந்துள்ள அடுக்குமாடிக் வீட்டுத்தொகுதியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜி.சந்திரசேன தயாரித்த 2001 ஜூன் 20ஆம் திகதிய 2001/153ஆம் இலக்க அடுக்குமாடி நில அளவை வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட அலகு 5944A/F1/U3 என அடையாளமிடப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டுத்தொகுதி பகுதியானது வடக்கில் CE8 எனும் பொதுப் பகுதியிலிருந்து இவ்வலகினைப் பிரிக்கின்ற சுவரையும் கிழக்கில் 5944A/FI/U2 எனும் அலகிலிருந்து இவ்வலகினைப் பிரிக்கின்ற சுவரின் நடுப்பகுதி, CE2 எனும் பொதும் பகுதிக்கு மேலாக திறந்த வெளியிலிருந்து இவ்வலகினைப் பிரிக்கின்ற சுவரையும் தெற்கில் CE2 எனும் பொதுப் பகுதிக்கு மேலாக திறந்த வெளியிலிருந்து இவ்வலகினைப் பிரிக்கின்ற சுவரையும் மேற்கில் ஊநு2 எனும் பொதுப் பகுதிக்கு மேலாக திறந்த வெளியிலிருந்து இவ்வலகினைப் பிரிக்கின்ற சுவர் மற்றும் 32, விவேகானந்தா வீதி எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தினையுடைய வளாகத்திற்கு மேலாக திறந்த வெளியிலிருந்து இவ்வலகைப் பிரிக்கின்ற சுவரையும் செனித் 5944A/F2/U3 இலிருந்து இவ்வலகினைப் பிரிக்கின்ற கொன்கிறீட் அடுக்கின் மத்தியபகுதி நதீர் தரைத் தளத்திலிருந்து இவ்வலகினைப் பிரிக்கின்ற கொன்கிறீட் அடுக்கின் மத்திய பகுதி ஆகியவற்றினையும் எல்லைகளாகக் கொண்டு எழுபதெட்டு தசம் மூன்று பூச்சியம் சதுர மீற்றர்கள் (78.30 ச.மீ) அல்லது எண்ணூற்று நாற்பத்திரண்டு தசம் ஐந்து நான்கு சதுர அடிகள் (842.54 ச.அ) பரப்பளவுடைய தளத்தினையும் கொண்டுள்ளது.

CE8 என்பது இவ்வலகை அடைவதற்கான பொது வழியாகும். அடுக்குமாடித் தொகுதிச் சொத்தினது பொதுப் பகுதியில் இவ்வலகினது பிரிக்கப்படாத பங்குப் பெறுமதி 2.565% ஆகும்.

Con SP.EO2/13, 14, **எனும் இலக்கத்தில் கீழ் கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

அடுக்குமாடித் தொகுதி சொத்தினது சட்டரீதியான பொதுப் பகுதிகள் 1982ஆம் ஆண்டு 45ஆம் இலக்கச் சட்டத்தின் 12ஆம் (திருத்தம்) பிரிவாலும் 2003ஆம் ஆண்டு 39ஆம் இலக்கச் சட்டத்தாலும் (திருத்தம்) திருத்தப்பட்டவாறு 1973ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க தனித்தொகுதி சொத்துச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்றன.

a) அடுக்குமாடித் தொகுதி சொத்துடன் இணைந்த திறந்தவெளி உள்ளடங்கலாக கட்டடம் அமைந்துள்ள காணி.

b) கட்டடத்தின் அடித்தளங்கள், நெடுவரிசைகள், இரும்புத் தூண்கள், இரும்புகள், ஆதரவாயுள்ளவை, பிரதான சுவர்கள் மற்றும் கட்டடத்தின் கூரை.

c) மின்சாரம், தொலைபேசி, வானொலி, ஒளிபரப்பு, தொலைக்காட்சி, நீர்க்குழாய், நீர்த்தொட்டிகள், நிலத்தடி நீர்த்தொட்டி, மேல்நிலை நீரத்தொட்டிகள், பம்பி பகுதி, கழிவு குழாய் வரிசை, நீர் தொகுதி, மனித நுழைவு துளை, கழிவுப்பொருள் அகற்றல் போன்ற மத்திய சேவை நிறுவல்கள்.

i. சாக்கடைகள், மனித நுழைவு துளைகள், பம்பிகள் ஆகியவற்றைக் கொண்ட கழிவு நீர் அகற்றல் முறைமை.

ii. தீப் பம்பிகள், றப்பர் குழாய் சுருள்கள், தீயணைப்பான்கள் ஆகியவற்றுடனான தீப்பாதுகாப்பு முறைமை.

iii. மின்னுயர்த்தி ஒன்றை உள்ளடக்கிய செங்குத்தான போக்குவரத்து முறைமை.

iv. காற்றோட்டம் மற்றும் கழிவுவாயு வெளியேற்றக் குழாய் மற்றும் வெளியேற்றும் விசிறி ஆகியவற்றை உள்ளடக்கிய காற்றோட்ட முறைமை.

v. கழிவுப்பொருள் அகற்றல் முறைமை.

vi. செயற்கைக்கோள் வானலை வாங்கியைக் கொண்ட தொலைக்காட்சி வானலை வாங்கி முறைமை.

d) சொத்தினது இருப்பிற்கு, பராமரிப்பிற்கு அல்லது சாதாரணமாக பொதுப் பயன்பாட்டிற்கு அவசியமான அல்லது பொருத்தமான ஏனைய அனைத்துப் பகுதிகளும் வசதிகளும்.

குறித்த அடுக்குமனை வரைபட பக்கங்களில் சித்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் பொதுப் பகுதிகள் குறித்த விவரணம்

**CE1**

a). கட்டடத்தின் வடக்குப் பக்கத்திலுள்ள காணியும் திறந்த வெளியும்
b). காற்றோட்டத்திற்கான திறந்த வெளி
c). பொது பயன்பாட்டிற்கான காணி
d). இரு பொது வாகனத் தரிப்பிடங்கள்

**CE2**

a). கட்டடத்தின் தென் பக்கத்திலுள்ள காணியும் திறந்த வெளியும் கட்டடத்திற்கான பிரதான வழியும் கட்டடத்திலிருந்து இக்காணியூடான பிரதான வெளியேறும் வாயிலும்
b). காற்றோட்டத்திற்கான திறந்த வெளி
c). பொதுக் காணி

**CE3**

a). படிக்கட்டுகளுக்கான பிரதான வழி, மின்னுயர்தியும் பொது வாகனத் தரிப்பிடங்களும் மின்மாற்றி அறை, மின் வாசிப்புமானி அறை, பாதுகாப்பு உத்தியோகத்தர் அறை நிலத்தடி நீர்த்தொட்டி, நீர் பம்பிகள், மின்னுயர்த்தியும் மின்னுயர்த்தி முகப்பறையும், மனித நுழைவு துளைகள், வடிகால்கள் மற்றும் கழிவுப்பொருள் சேகரிக்கும் அறை
b). பொதுவாக அனைவரும் பயன்படுத்தும் பாதை, வாகனச் சாலையும் வாகாத தரிப்பிடங்களும்.

**CE4-CE7**

a). பொதுவான சேவை குழாய்கள்

**CE8- CE13**

a). செல்லும் வழி மற்றும் திறந்த பகுதி படிக்கட்டுகள், மின்னுயர்த்தி, மின் குழாய், கழிவுப்பொருள் சாய்தளம், உள் முற்றம்
b). காற்றோட்டத்திற்கான திறந்த வெளி
c). அனைவரும் பயன்படுத்தும் பொதுவான பகுதி.

**CE14**

a). இது மொட்டைமாடியாகும். பொது நீர் தொட்டி, 36 அலகுகளுக்குமான வெவ்வேறு நீர் வாசிப்புமானிகள், 2 செயற்கைக்கோள் டிஸ்க் வானலை வாங்கிகள், மின்னுயர்த்தி மோட்டார் அறை, மின்னுயர்த்தி மோட்டார் அறை குழாய்களுக்கான வெளியேற்றல் விசிறி, பொது திறந்த காற்றோட்ட வெளிகள்.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**
**பெயர்: திரு.டபிள்யு.எம்.எச்.ஏ.எஸ்.எஸ்.பி. ஏக்கநாயக்க**
**பதவி: மூப்புநிலை முகாமையாளர்**
**அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை**

**இலங்கை வங்கி**
**பெருநகரக் கிளை**
திகதி: 2022.07.26

## சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

305

### வேலைவாய்ப்புகள்

நீர்க் கசிவா? கொங்கிறீட் ஸ்லெப், குளியலறை, மீன் தொட்டிக்கு அருகில். அழையுங்கள். நாடளாவிய ரீதியிலான சேவை. 0701034266, 0701037076. 043219

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## விசேட அற்றோர்ணி பத்திரத்தை இரத்துச் செய்தல்

கந்தான, ரிலவுல்ல, பெண்டலியன் மாவத்த, இல. 25/2 இல், தேசிய அ.அ. இல. 196683600815 கொண்ட போருதொட்டகே ரேணுகா பியதர்ஷி பெர்னாண்டோ ஆகிய நான், என்னால் கந்தான, ரிலவுள்ள, மோலவத்த வீதி, இல. 141/2A இல் அதுகோராள ஆரச்சிகே ஜெரி ஜீயான் என்டன் பெர்னாண்டோ என்பவருக்கு என் சார்பாக செயற்படுவதற்கு அதிகாரத்தை ஒப்படைத்து கம்பஹா பகிரங்க நொத்தாரிசு திரு. பியசிரி மொரபிட்டியவினால் 2010.05.02ம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 3141 விஷேட அற்றோர்ணி தத்துவத்தை என் சார்பாக இன்று முதல் இரத்துச் செய்வதாக இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

இன்று முதல் மேற்படி விசேட அட்டோர்ணி அதிகாரப்பத்திரத்தை பாவித்து மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடும் இதன் பிறகு செல்லுபடியாகாது எனவும் நான் அதற்கு எந்த பொறுப்பும் வகிக்க மாட்டேன் எனவும் இத்தால் அறிவிக்கிறேன்.

**போருதொட்டகே ரேனுகா பியதர்ஷி பெர்ணாண்டோ**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**இரண்டு வருட காலத்திற்கு கடற்கரைக்கு அப்பாலான செயற்பாடுகளுடன் தொடர்புடைய வேலைகளுக்கு கடல் சார்ந்த ஆளணியினர் மற்றும் வரிசைப் படகுகளை (LINE BOATS AND MARINE PERSONNEL) வாடகைக்கமர்த்துதல்**

**B/40/2022**

இரண்டு வருட காலத்திற்கு கடற்கரைக்கு அப்பாலான செயற்பாடுகளுடன் தொடர்புடைய வேலைகளுக்கு கடல் சார்ந்த ஆளணியினர் மற்றும் வரிசைப் படகுகளை (LINE BOATS AND MARINE PERSONNEL) வாடகைக்கமர்த்துவதற்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமான 20,000.00 ரூபாவை (ஒரு தொகுதிக்கு 17,857.14 + 12% பெசேவ) செலுத்திய பின்னர் 2022-08-17ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-09, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரது அலுவலகத்திலிருந்து இவ்விலைமனுவிற்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். சகல விலைமனுக்களுடனும் 1,290,000.00 ரூபா தொகைக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-08-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள ஆலோசகர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது கொழும்பு-09, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

தெளிவுறுத்தல்கள் (ஏதுமிருப்பின்) முகாமையாளர் (இருப்புச் செயற்பாடுகள் மற்றும் முனைய செயற்பாடுகள்) அவர்களிடமிருந்து 011-5455289 எனும் தொலைபேசி அல்லது menakaj@ceypetco.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல. 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09, இலங்கை.**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## Amãna Bank

## கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய அறிவித்தல்

1988 ஆம் ஆண்டின் வங்கியியல் சட்டம்
இல. 30 இன் பிரிவு 74 இன் பிரகாரம் (திருத்தப்பட்டதன் பிரகாரம்)

வங்கியியல் சட்டம் (திருத்தப்பட்டதற்கமைய) பிரிவு 72 மற்றும் 73 இன் ஒதுக்கங்களின் பிரகாரம், 2021 டிசம்பர் 31ஆம் திகதியன்று, 10 வருட காலமாக செயற்படுத்தப்படாத நிலையில் காணப்படும் வாடிக்கையாளர்களின் கணக்குகள் "கைவிடப்பட்டது" ஆக பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| கிளை | கிளை தொடர்பு இல. | ரூபாய் கணக்குகளின் எண்ணி. | வெளிநாட்டு நாணய கணக்குகளின் எண்ணி. | பாதுகாப்பு பெட்டகங்களின் எண்ணி. |
|---|---|---|---|---|
| அக்குரணை | 0817756226 | 2 | - | - |
| கல்முனை | 0677756203 | 5 | - | - |
| கண்டி | 0817756203 | 5 | - | - |
| காத்தான்குடி | 0657756202 | 5 | - | - |
| பிரதான கிளை – கொழும்பு | 0117756264 | 10 | - | - |
| புறக்கோட்டை | 0117756002 | 1 | - | - |

கைவிடப்பட்ட சொத்தின் உரிமை தவறான தரப்பினரால் கோரப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்ற காரணத்தினால் பாதுகாப்பு கருதி சொத்து தொடர்பான விபரங்கள் பிரசுரிக்கப்படவில்லை.

அமானா வங்கி பிஎல்சியினால் கைவிடப்பட்ட சொத்துக்களாக இனங்காணப்பட்ட வாடிக்கையாளர்களின் இறுதியாக அறியப்படும் முகவரிகளுக்கு ஏற்கனவே அச் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பிரத்தியேகமான அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கணக்குதாரர்கள்.'.அவர்களின் மரபுரிமைதாரர்கள் தமது உரிமை கோரல்களை (ஏதும் இருப்பின்) 2022 ஜுலை 31ஆம் திகதிக்கு முன்னதாக கிளை முகாமையாளர்களுக்கு அறிவிக்குமாறு இங்ஙனம் கோரப்படுகின்றனர்.

## ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன்

### 42 ஆம் வருடாந்த பொது கூட்டத்திற்கான அறிவித்தல்

கொழும்பு-10, நொரிஸ் கெனல் வீதி, 114 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட சென்ரல் ஹொஸ்பிட்டல் இன் 4 ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் பங்குதாரர்களின் நேரடியாக சமுகமளித்தல் அல்லது செவிப்புல அல்லது செவிப்புல மற்றும் கட்புல வழிகளினூடான பங்குபெறுதல் மூலம் ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான 42 ஆம் வருடாந்த பொதுக் கூட்டமானது 2022 ஓகஸ்ட் 19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறுமென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கொழும்பு பங்கு பரிவர்தனை பட்டியலிடப்பட்ட சட்ட 7.5 (b) இற்கு அமைவாக 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியியல் வருடத்திற்கான ஆசிரி ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் வருடாந்த அறிக்கையானது கம்பனியின் கூட்டாண்மையின் www.asirihealth.com என்ற இணையதளத்திலும் www.cse.lk என்ற கொழும்பு பங்கு பரிவர்தனையின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதென தயவு செய்து அறிந்து கொள்ளவும்.

நாட்டில் நிலவும் தற்போதய நிலைமையினாலும் கொழும்பு பங்கு பரிவர்தனையினால் வழங்கப்பட்டதும் 2022 மே 27 ஆம் திகதியன்று 04/2022 என்ற இலக்கத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் நியதிகளின் அடிப்படையில் வருடாந்த அறிக்கையின் அச்சடிக்கப்பட்ட பிரதிகள் வழங்கப்பட மாட்டாதென மேலும் நாம் அறிவிக்க விரும்புகின்றோம்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்டுள்ள வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு சமுகமளிக்க விரும்பும் எந்தவொரு பங்குதாரர்/ பதிலாள் பத்திர உரிமையாளர் மேலே குறிப்பிட்டுள்ள இணையதளங்களிலுள்ள கட்டாய வரவு பத்திர படிவத்தை நிரப்புவதன் மூலம் அவர்களின் பங்குபெறுவதற்கான பதிவை பெற்றுக் கொள்வர். பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிப்புரைகளையும் தயவு செய்து பின்பற்றவும்.

வருடாந்த பொதுக் கூட்ட இடத்தில் வரையறுக்கப்பட்ட பங்குதாரர்கள் மட்டுமே இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதுடன் ஏனைய பங்குதாரர்கள் ஒன்லையின் வழியாக பங்குபெறுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

**ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன்**
**சபையின் கட்டளையின் பிரகாரம்.**

**சொவ்ட்லொஜிக் கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்.**

**2022 ஜுலை 26 ஆம் திகதியன்று**
**கொழும்பு.**

## ஆசிரி சேர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல் பிஎல்சி இன்

### 22 ஆம் வருடாந்த பொது கூட்டத்திற்கான அறிவித்தல்

கொழும்பு-10, நொரிஸ் கெனல் வீதி, 114 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட சென்ரல் ஹொஸ்பிட்டல் இன் 4 ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் பங்குதாரர்களின் நேரடியாக சமுகமளித்தல் அல்லது செவிப்புல அல்லது செவிப்புல மற்றும் கட்புல வழிகளினூடான பங்குபெறுதல் மூலம் ஆசிரி சேர்ஜிக்கல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான 22 ஆம் வருடாந்த பொதுக்கூட்டமானது 2022 ஓகஸ்ட் 19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறுமென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கொழும்பு பங்கு பரிவர்தனை பட்டியலிடப்பட்ட சட்ட 7.5 (b) இற்கு அமைவாக 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியியல் வருடத்திற்கான ஆசிரி ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் வருடாந்த அறிக்கையானது கம்பனியின் கூட்டாண்மையின் **www.asirihealth.com** என்ற இணையதளத்திலும் **www.cse.lk** என்ற கொழும்பு பங்கு பரிவர்தனையின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதென தயவு செய்து அறிந்து கொள்ளவும்.

நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமையினாலும் கொழும்பு பங்கு பரிவர்தனையினால் வழங்கப்பட்டதும் 2022 மே 27 ஆம் திகதியன்று 04/ 2022 என்ற இலக்கத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் நியதிகளின் அடிப்படையில் வருடாந்த அறிக்கையின் அச்சடிக்கப்பட்ட பிரதிகள் வழங்கப்படமாட்டாதென மேலும் நாம் அறிவிக்க விரும்புகின்றோம்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்டுள்ள வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு சமுகமளிக்க விரும்பும் எந்தவொரு பங்குதாரர்/ பதிலாள் பத்திர உரிமையாளர் மேலே குறிப்பிட்டுள்ள இணையதளங்களிலுள்ள கட்டாய வரவு பத்திர படிவத்தை நிரப்புவதன் மூலம் அவர்களின் பங்குபெறுவதற்கான பதிவை பெற்றுக் கொள்வர். பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிப்புரைகளையும் தயவு செய்து பின்பற்றவும்.

வருடாந்த பொதுக்கூட்ட இடத்தில் வரையறுக்கப்பட்ட பங்குதாரர்கள் மட்டுமே இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதுடன் ஏனைய பங்குதாரர்கள் ஒன்லையின் வழியாக பங்குபெறுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

**ஆசிரி சேர்ஜிக்கல் பிஎல்சி இன்**
**சபையின் கட்டளையின் பிரகாரம்.**

**சொவ்ட்லொஜிக் கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்.**

**2022 ஜுலை 26 ஆம் திகதியன்று**
**கொழும்பு.**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**சிறிய ஏற்றுமதிப் பயிர்கள் பெருந்தோட்டப் பிரிவு அபிவிருத்தி பெருந்தோட்ட அமைச்சு**

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

### புத்தம் புதிய Heavy Duty Disc Plough (3 Disc) இன் வழங்கலுக்காக தேசிய போட்டிரீ தியிலான விலைமனுக்கோரல்

**(PR-7443)**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனமானது அதனது செவனகல அலகிற்கு புத்தம் புதிய Heavy Duty Disc Plough (3 Disc) இன் வழங்கலுக்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இத்தால் அழைக்கின்றார்.

1. 2022 ஓகஸ்ட் 17 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவை ரொக்கப் பண கொடுப்பனவு மூலமாக செலுத்திய பின்னர், கொழும்பு-04, மெல்போர்ன் அவென்யு, 27 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.
2. விலைமனுதாரரானவர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத பண வைப்புத் துண்டை இணைத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கள் முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு 2022 ஓகஸ்ட் 18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிந்தாமல் கிடைக்கும் வகையில் நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் அல்லது தூதஞ்சல் சேவை மூலமாக கொழும்பு-04, மெல்போர்ன் அவென்யு, 27 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Tender for the supply of Brand New Heavy Duty Disc Plough (3 Disc) – (PR-7443)** என குறிப்பிடப்படல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்வை பார்வையிடலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விச் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் 40,000 இலங்கை ரூபா (நாற்பதினாயிரம்)பெறுமதியான ''விலைமனுப்பிணையொன்றுடன் '' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது 02 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: +94 11 2505558. அலைபேசி: +94 077 010 3359 தொலைநகல்: +94 11 2500674. மின்னஞ்சல்: **sapumal@lscl.lk)**

**தலைவர் - திணைக்கள கொள்வனவுக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல. 27, மெல்போர்ன் அவென்யு, கொழும்பு-04.**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**சிறிய ஏற்றுமதிப் பயிர்கள் பெருந்தோட்டப் பிரிவு அபிவிருத்தி பெருந்தோட்ட அமைச்சு**

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

### Auxiliary Cane Carrier Chain Links இன் வழங்கலுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**(PR-7424)**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனமானது அதனது செவனகல அலகிற்கு Auxiliary Cane Carrier Links இன் வழங்கலுக்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இத்தால் அழைக்கின்றார்.

1. 2022 ஓகஸ்ட் 17 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 இலங்கை ரூபாவை ரொக்கப் பண கொடுப்பனவு மூலமாக செலுத்திய பின்னர், கொழும்பு-04, மெல்போர்ன் அவென்யு, 27 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.
2. விலைமனுதாரரானவர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத பணவைப்புத் துண்டை இணைத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கள் முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு 2022 ஓகஸ்ட் 18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிந்தாமல் கிடைக்கும் வகையில் நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் அல்லது தூதஞ்சல் சேவை மூலமாக கொழும்பு-04, மெல்போர்ன் அவென்யு, 27 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Tender for the Auxiliary Cane Carrier Chain Links– (**PR**-7424) என குறிப்பிடப்படல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்வை பார்வையிடலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விச் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் 450,000 இலங்கை ரூபா (நாலு இலட்சத்து ஐம்பதினாயிரம்) பெறுமதியான ''விலைமனுப்பிணையொன்றுடன் '' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது 30 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: +94 11 2505558. அலைபேசி: + 94 077 010 3359 தொலைநகல்: +94 11 2500674. மின்னஞ்சல்: sapumal@lscl.lk)

**தலைவர் - திணைக்கள கொள்வனவுக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல. 27, மெல்போர்ன் அவென்யு, கொழும்பு-04.**

நிதியமைச்சு

## இலங்கை மதுவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### காக்கி சீருடை துணிகள், காலணிகள் மற்றும் காலுறைகள் வழங்கல்

இலங்கை மதுவரித் திணைக்களம் சார்பாக மதுவரி ஆணையாளர் நாயகத்தினால், **"இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கான காக்கி சீருடை துணிகள், காலணிகள் மற்றும் காலுறைகளை வழங்குவதற்கு" தகுதியான விலைமனுதாரர்களிடமிருந்து** முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | பொருள் | அண்ணளவான தொகை (மீட்டர்கள்/ஜோடிகள் |
|---|---|---|
| 1 | சீருடை துணிகள் | **5,199** (மீ) |
| 2 | காலணிகள் - அதிகாரி - ஆண் | **254** |
| | - அதிகாரி - பெண் | **08** |
| | - ஏனைய அதிகாரி- ஆண் | **755** |
| | - ஏனைய அதிகாரி - பெண் | **50** |
| 3 | காலுறைகள் | **3,201** |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இலக்கம் 353, கோட்டை வீதி, இராஜகிரியவில் **அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட கணக்காளரிடம் மேலதிக** தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், அலுவலக நாட்களில் 9:00 மணி முதல் 15:00 மணி வரை அதே தினத்தில் மனு ஆவணங்களை பரிசீலனை செய்துகொள்ள முடியும்.

தொடர்பு இலக்கங்கள் : தொலைபேசி : 011-2045070 /011-2045071/011-2045062
தொலைநகல் : 011-2877340 / 011-2877881

**2022.07.28 தொடக்கம் 2022.08.19 வரை 9:00 மணி முதல் 15:00 மணி வரை, மேலே உள்ள** முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் மொத்த மீள்செலுத்தப்படாத **கட்டணமாக காக்கி சீருடை துணிகளுக்கு ரூ.3,500/=, காலணிகளுக்கு ரூ.3,500/= காலுறைகளுக்கு ரூ.1,000/=** செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான மனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகள் பரிசோதிக்கப்படும் அதற்கான சோதனைக் கட்டணங்கள் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**விலைமனுக்கள் 2022.08.19 ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இலக்கம் 353, கோட்டை வீதி,** இராஜகிரிய என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கலந்துகொள்ள விரும்பும் மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அதே முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது மற்றும் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

அனைத்து விலைமனுக்களும் மனுப் பாதுகாப்பு தொகையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் **காக்கி சீருடை துணி ரூ.35,000/=, காலணிகள் ரூ.60,000/=, காலுறைகள் ரூ.7,500/=.**

மதுவரி ஆணையாளர் நாயகம்
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இலக்கம் 353, கோட்டை வீதி,
இராஜகிரிய.

# கடுவளை மாநகர சபை

## 2023 வரவு செலவுத் திட்டம்

## பொதுமக்கள் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல்

நான்கு ஆண்டுகளாக கடுவளையின்
பயணத்தை கனப்படுத்துவதற்கு....
வளப்படுத்துவதற்கு.... நீங்கள்
வழங்கிய ஒத்துழைப்பை
எதிர்வரும் வருடத்திலும் நாம்
எதிர்பார்க்கின்றோம்....



நகரபிதா புத்திக ஜயலால் முன்னணியுடன்

கடுவளை புதிய வடிவில்

மக்கள் நலனுக்கு உதவிடும்
2023 வரவு - செலவுத் திட்டத்தில்
உள்ளடங்கவேண்டிய
உங்களது முன்மொழிவுகளை எமக்கு அனுப்புங்கள்

நாம் எமது நகரத்தை ஒன்றிணைந்து
ஒன்றாகக் கட்டியெழுப்புவோம்.

உங்களின் / உங்கள் அமைப்பின் மக்கள் நலன் சார்ந்த வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகளை ஆகஸ்ட் 10ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்புங்கள். ஆளடையாளம் பாதுகாப்புடன் மதிப்பீட்டிற்கு உட்படும்.

உங்கள் பிரேரணைகளை அனுப்பவும்:

நகரபிதா – கடுவளை மாநகர சபை, கடுவளை
மாநகர ஆணையாளர் - கடுவளை மாநகர சபை, கடுவளை.

mfdkmc@gmail.com 0112 539 562
Kaduwela Municipal Council Kaduwela Municipal Council
Kaduwela Main office - 0112 571 200 I 011 2548 999
Battaramulla - 011 2867 865 I Athurugiriya - 011 2561 017


# நீர்கொழும்பு மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்களை நிறைவு செய்வதற்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான கேள்விப் படிவங்கள் என்னால் 2022-08-16ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**(01) கேள்வி விபரங்கள்**

i. கேள்வி விநியோகம் - 2022-07-27 முதல் 2022-08-15 பி.ப. 2.00 மணி வரை
ii. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் - 2022-08-16 பி.ப. 2.00 மணி வரை
iii. கேள்விகளைத் திறத்தல் - 2022-08-16 பி.ப. 2.00 மணிக்கு

**(02) தகைமைகள்**

01. கேள்விதாரர் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) நாளது தரவேற்றம் செய்யப்பட்ட பதிவைப் பெற்றவராகவிருத்தல் வேண்டும்.
02. விலைகளைச் சமர்ப்பிக்கும் கேள்விதாரரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இதற்கு நிகரான வேலைகள் தொடர்பான விபரங்கள் மற்றும் பணியாட் தொகுதியினரின் விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை நீர்கொழும்பு மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
05. வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை இடத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் மட்டும் கலந்து கொள்ளலாம்.
07. மேலதிக விபரங்களை மாநகர பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொ. இல. | செயற்றிட்டம் | CIDA பதிவு எல்லை | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | கேள்வி வைப்புத் தொகை (மீளளிக்கப் படும்) ரூபா |
|---|---|---|---|---|
| 01 | நலன்புரி பிரிவில் மலசலகூட முறைமையை நிர்மாணித்தல் | C 9 | ரூபா 3,500.00 | ரூபா 7,000.00 |
| 02 | மாநகர சபையின் பொது மலசலகூடத்தின் திருத்தவேலைகள் | C 7 | ரூபா 3,500.00 | ரூபா 47,000.00 |

**N.B.R.V. பர்னாந்து**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

**தொலைபேசி இல. 031-2220053**
**2022-07-26ஆம் திகதி,**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ ML/14/ 2022 | கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் வாகனத் தரிப்பிடக் கட்டணத்தை அறவிடுவதற்கான செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தை குத்தகைக்கு வழங்குதல் - படிநிலை xxiii | 5,600.00 | வரிகள் இன்றி இறுதியான விலைக்கோரல் விலையின் 5% பெறுமதிக்கான நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாதம் | வாகனத் தரிப்பிட முகாமைத்துவம் மற்றும் கட்டணம் அறவிடுவதில் 2 வருட அனுபவத்தை ஒப்பந்தக்காரர்கள் கொண்டிருத்தல் வேண்டும். 02 வருடத்திற்கும் குறைவான அனுபவம் இருக்குமானால் செயற்றிறன் பிணையாக சபைக்குச் செலுத்தவேண்டிய மாத வாடகை 8 மாதங்கள் வரை அதிகரிக்கப்படும். |
| 2 | ME/ME/ ML/20/ 2022 | கொழும்பு நகரத்தின் பாதையோர வாகனத் தரிப்பிடக் கட்டணத்தை அறவிடுவதற்கான செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தை குத்தகைக்கு வழங்குதல் - படிநிலை xxiv | 5,600.00 | வரிகள் இன்றி இறுதியான விலைக்கோரல் விலையின் 5% பெறுமதிக்கான நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாதம் | வாகனத் தரிப்பிட முகாமைத்துவம் மற்றும் கட்டணம் அறவிடுவதில் 2 வருட அனுபவத்தை ஒப்பந்தக்காரர்கள் கொண்டிருத்தல் வேண்டும். 02 வருடத்திற்கும் குறைவான அனுபவம் இருக்குமானால் செயற்றிறன் பிணையாக சபைக்குச் செலுத்தவேண்டிய மாத வாடகை 8 மாதங்கள் வரை அதிகரிக்கப்படும். |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01** - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425** எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,**
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு - 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  மாளிகாகந்த, கொழும்பு - 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.
iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை 2022-08-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022-08-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.03.15ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.02.13ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-08-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2022-08-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். தெளிவுபடுத்தல்களை 0112-694593 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொறியியல் பணிப்பாளர் (TDRS) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உ. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-08-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நகர மண்டப வளவிலுள்ள TDRS கூட்ட அறையில் இடம்பெறும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

Dinamina Daily News Thinakaran

AVAILABLE AT

LAKE HOUSE

CSIAP

THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**விவசாய அமைச்சு**

## தேசிய போட்டி விலைமனுக்கோரல்

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)**

**திட்ட இல: P 163742**

1. விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் செலவுகளுக்காக 125 மில்லியன் அமெரிக்க டொலருக்கு சமமான தொகையினை சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA) இடமிருந்து, இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது ஓர் கடனைப் பெற்றுள்ளது. அத்துடன் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகைமையான கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் ஒரு பகுதியை பயன்படுத்துவதற்கு எண்ணியுள்ளது.
2. கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) சார்பாக, வ.ம.மா - சிறிய திட்டங்களுக்கான பெறுகைக் குழு (MPPC) தலைவர் அழைக்கின்றார்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலையின் விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில்லியனில்) அவசர நிகழ்வுகள் மற்றும் VAT நீங்கலாக) | CIDA பதிவு நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய் கள் | மீளளிக்கப் படாத கட்டணம் (LKR) | விலைமனுப் பிணையின் பெறுமதி (LKR) மற்றும் செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-292982-CWRFB/NWP/DPDO/Canal Systm (1)/2022/13 | CSIAP இன் கீழ் வமேமா. குருநாகல் மாவட்டம், அம்பன்பொல DSD, அம்பன்பொல ASC இல் எஸ்வேத்துமவெவ, தெமட்டவெவ, மம்பிட்டிகமவெவ, கொரகஹவெவ, ரட்டேதரங்கஸ்வெவ, முத்துபன்டகே வெவ, பீல்லவெவ, அமதிவெவ, உஸ்வெவ, பலாபத்வலவெவவில் கால்வாய் அமைப்புகளை நிர்மாணித்தல் | 48.84 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 675,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 02 | LK-MOA-292987-CWRFB/NWP/DPDO/Canal Systm (8)/2022/14 | வமேமா - குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ DSD இல் மஹதோரவவெவ, ஹல்மில்லாவவெவ, உட தோரவவெவ, பின்வெவ, விஹாரயாயவெவ, தம்மன்னாவ வெவ, பளுகொல்லவெவ, சியம்பலவெட்டியவெவ, நாஹெட்டிகுலம வெவ, இஹல நாஹெட்டி குளம வெவவில் கால்வாய் அமைப்புக்களை நிர்மாணித்தல் | 49.13 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 680,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 03 | LK-MOA-292999-CWRFB/NWP/DPDO/Rehb.T (10)/2022/15 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP) இன் கீழ் வட மேற்கு மாகாணம், குருநாகல் மாவட்டம், கிரிபாவ DSD, தம்புத்த ASC பஹல கிரிபாவ அருவியில் பியகம வெவ, கிவுலே வெவ, இஹல தம்மன்ன கெட்டியவின் புனரமைப்பு | 37.84 | C5 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 525,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 04 | LK-MOA-292980-CWRFB/NWP/DPDO/Rehb.T (32)/2022/16 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CSIAP திட்டத்தின் கீழ் வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவு, நவகத்தேகம ASC இல் மெதவாச்சிய அருவியில் டிச்சன்டிய வெவ, தம்மென்ன வெதித்த வெவ, ஹல்மில்லேவெவவில் புனரமைப்பு | 38.70 | C5 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 535,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 05 | LK-MOA-292993-CWRFB/NWP/DPDO/Rehb.T (36)/2022/17 | உ.வ. நிதியிடப்பட்ட CSIA திட்டத்தின் கீழ், வமே. மா குருநாகல் மாவட்டம், கிரிபாவ DSD, தம்புத்த ASC இன் பஹல கிரிபாவ அருவியின் அலியாவெட்டுனு வெவ இஹல வெவ, எலபத்வெவ (எலபத்வெவ இஹலவெவ), ரத்மல்கஹ வெவ, வல்பதுவ வெவ, இஹலபலுகஹ வெவ, புனரமைப்பு | 46.17 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 635,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 06 | LK-MOA-292998-CWRFB/NWP/DPDO/Rehb.T (37)/2022/18 | உலக வ. நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் வட மேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டம், கிரிபாவ DSD, தம்புத்த ASC இன் பஹலகிரிபாவ அருவியில் மஹதம்மன்ன கெட்டியவெவ, வலபல்லம்வெவ, வீரகட்டியவவெவ, எலபத்வெவ வின் புனரமைப்பு | 46.60 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 645,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 07 | LK-MOA-292997-CWRFB/NWP/DPDO/Rehb.T (46)/2022/19 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் கிரிபாவ DSD, தம்புத்த ASC இன் கிரிபாவ அருவியின் பளுகம மஹவெவ, துனுஹேனேகமவெவ வின் புணரமைப்பு | 48.62 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 675,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 08 | LK-MOA-292996-CWRFB/NWP/DPDO/Rehb.T (47)/2022/20 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் வட மேல் மாகாணம் குருநாகல் மாவட்டம், கிரிபாவ DSD தம்புத்த ASC இன் பஹல கிரிபாவ அருவியில் அளுத்வெவ, கண்தெவெவ, சியம்பலகமவெவ, துனுமடல்லவவெவ வின் புனரமைப்பு | 47.03 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 650,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 09 | LK-MOA-292990-CWRFB/NWP/DPDO/Canal Systm (61)/2022/21 | வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வரகம்பன மஹவெவவின் தலைமை வேலை மற்றும் கால்வாய் அமைப்பு மற்றும் பொரவெவ, இஹலகனேகமவெவ, பஹல கமனகமவெவ, மொடகனேகமவெவ, சியம்பலாவத்த வெவ, எரமுதுவெவ கால்வாய் அமைப்புக்கள் நிர்மாணம் | 54.05 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 750,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 10 | LK-MOA-292966-CWRFB /NWP/DPDO/Rehb.T(63) /2022/22 | உ.வ. நிதியிடப்பட்ட கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் வடமேல் மாகாணம், நவகத்தேகம DSD, நவகத்தேகம ASC இன் மதவச்சிய அருவியின் அத்துருபொலயகம மஹவெவ, ஹப்பவெவ, இஹலகுத்திகுளம வெவவின் புனரமைப்பு | 38.67 | C5 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 535,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 11 | LK-MOA-292968-CWRFB/NWP/DPDO/Rehb.T (64)/2022/23 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CSIA திட்டத்தின் கீழ் வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், நவகத்தேகம DSD, நவகத்தேகம ASC, மதவாச்சிய அருவியில் பஹலகுத்திகுளம வெவ, பஹலசந்தனன் குளமவெவ, இஹல சந்தனன் குளமவெவவின் புனரமைப்பு | 50.51 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 700,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 12 | LK-MOA-265838-CWRFB/PMU(NWP)/Rehb.T(5)/2022/18 | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், அம்பன்பொல பிரதேச செயலாளர் பிரிவில் அம்பன்பொல ASC பிரதேசம். நெலும்பத்வெவ கிராமம், மதில்ல அமுன அருவியில் அட்டவரலவெவ, கப்பிட்டியவெவ மற்றும் ஜயவீரகமவெவ வின் புனரமைப்பு | 42.19 | C5 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 585,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 13 | LK-MOA-265923 -CWRFB / PMU(NWP)/ Rehb.T (28)2022/20 | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தின் அம்பன்பொல பிரதேச செயலகம், அம்பன்பொல ASC பிரதேசம் நெலும்பத்வெவ, விமலதாசகேவெவ, தரனகஸ்வெவ மற்றும் சத்தனகே வெவவின் புனரமைப்பு | 45.18 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 625,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 14 | LK-MOA-265546 -CWRFB / PMU(NWP)/ Rehb.T (31)2022/21 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CSIAP இன் கீழ் வட மேற்கு மாகாணம், குருநாகல் மாவட்டத்தின், பொல்பித்திகம பிரதேச செயலக பிரிவு, மொரகொல்லாகம ASC பிரதேசம், அமுனுகொல அருவியில் கந்த அத்தரவெவ, குடாவெவ, பன்சலேவெவ, மதபலவவெவ வின் புனரமைப்பு | 28.19 | C5 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 390,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 15 | LK-MOA-265483-CWRFB/PMU (NWP)/Rehb.T(55)2022/23 | வமேமா, குருநாகல் மாவட்டம், அம்பன்பொல DS பிரிவு, அம்பன்பொல ASC பிரதேசத்தில் பொரவெவ (மஹவெவ), பஹலகனேகம வெவ, மெதகனேகம வெவ, சியம்பலாவத்தவெவ, இஹலகனேகமவெவ, வரகம்மனகுடாவெவ, எரமுதுவெவ, சியம்பலாவட்டியவெவவின் புனரமைப்பு | 54.67 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 750,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 16 | LK-MOA-267015-CWRFB/PMU (NWP)/Rehb.T(56)2022/24 | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தின் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவு, மஹநன்னேரிய ASC பிரதேசம், நாஹெட்டிகுளம அருவியில், மஹநாஹெட்டி குளமவெவ, இஹல நாஹெட்டி குளம வெவ, பளுகொல்லாவெவ, தம்மன்னேவவெவ, விஹாரயாய வின் புனரமைப்பு | 53.68 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 750,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 17 | LK-MOA-265538-CWRFB /PMU(NWP)/Rehb.T(65)/2022/26 | உலக வங்கியால் நிதியிடப்பட்ட CSIA திட்டத்தின் கீழ் வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம், பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவு, மொர கொல்லாகம ASC பிரதேசம், அமுனுகொல அருவியில் அளுத்வெவ, கும்பல்போருகமவெவ, சியம்பலாகஹமுல வெவவின் புனரமைப்பு | 42.38 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 585,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 18 | LK-MOA-265540-CWRFB /PMU(NWP)/Rehb.T(66)/2022/27 | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவு, மொரகொல்லகம ASC பிரதேசம் அமுனுகொல அருவியில் அமுனுகொலேவெவ, கல்கந்தேகமவெவ, கூன்கஹமுலவெவ, இஸ்வட்டிய வெவ, ரூசர்வெவ வின் புனரமைப்பு | 64.15 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 885,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 19 | LK-MOA-292994-CWRFB /NWP/DPDO/Rehb.T (02)/2022/024 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CISIA திட்டத்தின் கீழ்வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கிரிபாவ DSD, தம்புத்த ASC இன் பஹலகிரிபாவ அருவியில் பெந்தபுவெவ, வல்பழுவ அளுத்வெவ, குடாகல்கந்த வலகந்தேவெவ, குடா கல்கந்தவல இஹலவெவ வின் புனரமைப்பு | 36.45 | C5 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 500,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 20 | LK-MOA-293000-CWRFB /NWP/DPDO/Rehb.T (03)/2022/025 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP) இன் கீழ் வடமேற்கு, குருநாகல் மாவட்டம், கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவு, தம்புத்த ASC இல் பஹல கிரிபாவ அருவியில் அலியவெட்டுனுவெவ வின் புனரமைப்பு | 24.08 | C5 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 330,000.00 2023 ஜனவரி 12 வரை |
| 21 | LK-MOA-292971-CWRFB /NWP/DPDO/Rehb.T (13)/2022/026 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணம் புத்தளம் மாவட்டம், நவகத்தேகம பிரதேச செயலக பிரிவு நவகத்தேகம ASC இன் மதவச்சிய அருவியியல் செங்கக்குளமவெவ, தெமட்டவெவ, கால்லேவவெவ, வெலேவெவின் புனரமைப்பு | 50.47 | C4 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 700,000.00 2023 ஜனவரி 12 வரை |

3. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) இன் ஊடாக நடத்தப்படும்
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை, குருநாகல் யக்கபிட்டிய வீடமைப்புத் திட்டம், மிஹிந்து மாவத்த, இல. 51, பிரதி திட்ட பணிப்பாளரின் அலுவலகம் (NWP), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம், பிரதித் திட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 037-2227950, பெக்ஸ் இல - 037-2227950, மின்னஞ்சல் - dpdcsiapnwp@gmail.com) அத்துடன் விலைமனு ஆவணங்களை அதே இடத்தில் 2022 ஜூலை 28 முதல் 2022 ஓகஸ்ட் 18 வரை வேலை நாட்களில் 9.00 மணி முதல் 14.00 மணி வரை இலவசமாகப் பரிசீலிக்கலாம்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் விலைமனு ஆவணங்களில் உள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். மேலதிகமாக சித்திகரமான விலைமனுதாரர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாயில் விசேடத்துவத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்களுக்கு ஒரு ஒப்பந்தத்திற்கு மேல் விலைமனுக்கோருவதற்கு சுதந்திரம் உண்டு. ஆனால் ஒப்பந்தக்காரர்களின் நிதி மற்றும் ஏனைய கொள்ளளவு எல்லைகளின் பிரகாரம் தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.
6. 2022 ஜூலை 28 முதல் 2022 ஓகஸ்ட் 18 வரை 9.00 மணி முதல் 14.00 மணி வரை வேலை நாட்களில் காசாக மாத்திரம் ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் (தொகைக்காக மேற்படி அட்டவணை தயவு செய்து பார்க்கவும்) செலுத்துவதன் பேரில் மற்றும் மேற்படி உருப்படி இல. 04 இல் குறிப்பிடப்படும் முகவரியில் பிரதித் திட்ட பணிப்பாளருக்கு மூலக்கடிதத் தலைப்பில் ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் தகைமையான விலைமனு தாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும்.
7. மேற்படி உருப்படி 04 இல் குறிப்பிடப்படும் இடத்தில், 2022 ஓகஸ்ட் 05ம் திகதி 10.00 மணிக்கு விலைமனுவுக்கு மன்னரான கூட்டம் மற்றும் அடுத்ததாகவுள்ள தளவிஜயம் ஒழுங்கு செய்து தரப்படும். உத்தேச மனுதாரர்கள் அவர்களது சொந்த செலவில் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் உதவியோடு தளத்தினை பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
8. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனு ஆவணங்களில் உள்ள மாதிரி வடிவத்திலான ஓர் நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதத்தினை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு ஓர் செல்லுபடியாகும் விலைமனு உத்தரவாதமற்ற எந்த விலைமனுவும் பதிலளிக்காததாக கொள்ளப்படுவதுடன் எந்த விசாரனையும் இன்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்தின் எல்லாப் பக்கங்களும் விலைமனுதாரால் ஒப்பமிடப்படுவதுடன் அவரது முத்திரையும் பதிக்கப்படல் வேண்டும்.
10. விலைமனுக்ள மூலப் பிரதி மற்றும் பிரதியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் பிரதி பொறியிடப்பட்ட கடித உறையில் வெவ்வேறாக உள்ளடக்கப்பட்டு முறையே 'மூலப் பிரதி' மற்றும் 'பிரதி' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். இரு கடித உறைகளையும் ஓர் பொறியிடப்பட்ட தனிக்கடித உறையில் உள்ளடக்கப்படல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேளையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை எழுதுதல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம் அல்லது 2022 ஓகஸ்ட் 18ம் திகதி 14.00 மணி (பி.ப. 2.00) இற்கு அல்லது அதற்கு முன் அடையுமாறு குருநாகல், யக்கபிட்டிய வீடமைப்புத் திட்டம், மிஹிந்து மாவத்த, இல. 51 இற்கு முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
